# யாழில் தொழிலற்ற பட்டதாரிகள் போராட்டம்!

**பு.கஜிந்தன்**

வேலைவாய்ப்பை வழங்குமாறு கோரி தொழிலற்ற பட்டதாரிகள் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு முன்னால் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பட்டதாரிகள் கடந்த சில வாரங்களாக தொடர்ச்சியாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

02 ஆம் பக்கம்




Follow us:

வாரவெளியீடு

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 05, இதழ் : 33, குரோதி வருடம், மாசி மாதம் 04ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (16.02.2025) ஹிஜ்ரி-1446, ஷஃபான் - 17, 0115886187 - பக்கங்கள் 20+8+8+8

விலை ரூ.130


## நக்கல் நமசிவாயம்

காசு கொடுத்ததும் அவங்க தான்..
விசாரிக்கிறதும் அவங்கதான்...
நல்ல ட்ராமா பாருங்கோ...



# யு.எஸ்.எயிட் நிதிப்பகிர்வு ஆராய்வு!




அமெரிக்காவின் யு.எஸ்.எயிட் நிறுவனத்தினூடாக இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் குறித்து விசேட விசாரணையொன்றை நடத்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் தீர்மானித்திருக்கிறது.


இதன்படி அந்த நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் கொடுக்கல் வாங்கல்களில் நிதி மோசடி இடம்பெற்றுள்ளதா என்பதுபற்றி ஆராயவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சாங் தெரிவித்திருக்கிறார்.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்தபோது தூதுவர் ஜூலி இதனைத் தெரிவித்திருக்கிறாரென அறியமுடிந்தது.

அமெரிக்க அரசு சார்பில் உலகம் முழுவதும் செயற்பட்டுவந்த தொண்டு நிறுவனமான...

02 ஆம் பக்கம்

## யோஷித, டெய்சிக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது புதல்வர் யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டி டெய்சி ஃபொரஸ்ட் விக்கிரமசிங்க ஆகியோருக்கு எதிராக சட்ட மா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளார்.

இரத்மலானை, சிறிமல்வத்த உயன மற்றும் தெஹிவளை பகுதிகளில் 80 மில்லியன் ரூபாவுக்கு மேல் பெறுமதியான நிலங்கள் மற்றும் சொத்துகளை எவ்வாறு கையகப்படுத்தினார்கள் என்பதை வெளியிடத் தவறியதற்காக இந்தப் பிரதிவாதிகளுக்கு எதிராக சட்ட மா அதிபர் குற்றப்பத்திரிகைகளைத் தாக்கல் செய்துள்ளார்.

## தேர்தல்கள் சட்டமூலத்துக்கு ஆலோசனைக் குழு அங்கீகாரம்



உள்ளூர் அதிகாரசபைகளுக்கான தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்துக்கு பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் அனுமதி வழங்கப்பட்டது.

பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் (பேராசிரியர்) ஏ.எச்.எம்.எச்.அபயரத்ன தலைமையில் வெள்ளிக்கிழமை (14)...

02 ஆம் பக்கம்

## முதியோருக்கான கொடுப்பனவு எதிர்வரும் 20ஆம் திகதி முதல்

அஸ்வெசும வேலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள குடும்பங்களைச் சேர்ந்த 70 வயது பூர்த்தியடைந்த முதியோர்களுக்கு வழங்கப்படும் 3000 ரூபா கொடுப்பனவு தபால், உப தபால் அலுவலகங்களினூடாக எதிர்வரும் 20ஆம் திகதியிலிருந்து வழங்கப்படுமென முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் கே. சத்துர மிஹிதும அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அஸ்வெசும வேலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள குடும்பங்களைச் சேர்ந்த 70 வயதைப் பூர்த்தியடைந்த முதியோர்களுக்கு 2024ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து நலன்புரி நன்மைகள் சபையினூடாக நேரடியாக வங்கியில் (SLIPS) வைப்புச் சீட்டு முறைகளினூடாக அஸ்வெசும கணக்குக்கு குறித்த கொடுப்பனவு வைப்பிலிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் அஸ்வெசும குடும்பத்துக்குள் ...

02 ஆம் பக்கம்



## நாமலின் சட்டப் படிப்பு சி.ஐ.டி. விசாரணை

நாமல் ராஜபக்ஷ மீது சட்டக் கல்வி தொடர்பில் விசாரணை செய்ய சி.ஐ.டிக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது சட்ட இளமாணி பட்டத்தை எவ்வாறு பெற்றார் என்பது குறித்து விசாரணை நடத்துவதற்காக குற்றப் புலனாய்வுத் துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

நாமல் ராஜபக்ஷ சட்டப் பட்டப் ...

02 ஆம் பக்கம்

## சண்டே சாம்பார்

### அதிர்ச்சி கொடுத்த அதானி ஆடிப்போன கொழும்பு!

10-11 ஆம் பக்கங்கள்


யூனியன் அஷ்யூரன்ஸ்
ஜோன் கீல்ஸ் நிறுவனமாகும்

எம். உம்மு ஜயெஸா வின்

BLOG-IT போட்டி 2024 இலிருந்து தெரிவு செய்யப்பட்ட பதிவு

ஆயுள் காப்பீடு

நட்டஅச்சம் நிச்சயமானதும் காப்புறுதி ஒப்பந்தப்பெறுமானம் காப்புறுதி செய்பவர் விருப்பப்படி நிச்சயிக்கப்படுவதும், காப்புறுதி ஒப்பந்தத்தை கைமாற்றம் செய்ய முடியாததும், இழப்புக்கள் ஏற்பட்டாலும் ஏற்படாவிட்டாலும் காப்பீடு செய்தவர் காப்பீடு செய்த தொகையைப்பெற்றுக் கொள்ளக்கூடியதும், இழப்பீட்டுத் தத்துவத்திற்கு உட்படாததும் நீண்ட கால ஒப்பந்தத்தைக் கொண்டதும், காப்பீடு செய்தவருக்கு மேலதிக அனுகூலங்கள் கிடைக்கக்கூடியதுமான காப்பீட்டுமுறையே ஆயுள் காப்பீடு எனப்படும்.

உறுதியான நிதித்தன்மைக்கு அப்பால் ஆயுள் காப்பீடு அளவிட முடியாத மனஅமைதியை தருகின்றது. ஆயுள் காப்புறுதி செய்தவரின் அகால மரணத்தின் பின் அவரில் தங்கி வாழ்வோரான குடும்ப உறுப்பினர்களின் நல்வாழ்வுக்காகவும் பொருளாதார ரீதியாக ஏற்படுகின்ற நிதிஸ்திரமற்றதன்மையிலிருந்து அன்புக்குரியவர்களை பாதுகாப்பதானது ஆயுள் காப்பீட்டாளரின் மனஅழுத்தத்தையும் கவலையையும் குறைப்பதோடு எதிர்காலத்தையும் பாதுகாக்க உதவுகின்றது.

ஆயுள் காப்பீடானது ஒரு வெறும் சொத்தல்ல இது ஒரு நல்ல வாழ்க்கைக்கு சான்றாகும். ஆயுள் காப்பீட்டின் முக்கியத்துவத்தினை உணர்ந்து நாமும் ஆயுள் காப்பீட்டின் வாக்குறுதியை நிறைவேற்றுவோம் எமது எதிர்கால சந்ததியினரின் வளமான வாழ்வைப் பாதுகாப்போம்.

"வாழ்க ஆயுள் காப்பீடு"
"வளர்க அதன் சேவை"

இந்த மாதத்துக்கான பிரசுரிப்புக்காக தெரிவு செய்யப்பட்டமைக்கு ஆக்கத்தை எழுதியவருக்கு வாழ்த்துகள்!


# பட்ஜெட் நாளை சபைக்கு

2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு (வரவு-செலவுத்திட்ட உரை)...

02 ஆம் பக்கம்

## தேர்தல்கள் விசேட ஏற்பாடுகள் சட்டமூல உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு அறிவிப்பு



'உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்)' எனும் சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் பாராளுமன்றத்தில் அறிவித்தார்

அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்டு மூன்று நீதிபதிகள் கொண்ட குழாத்தால் விசாரிக்கப்பட்ட 'உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்)' எனும் சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு தனக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதாக சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன வெள்ளிக்கிழமை (14) பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

02 ஆம் பக்கம்


Amritha
மனம் மகிழட்டும் நறுமணத்தால்
தமிழன் உடன்
திருப்பதி புனித யாத்திரை
02 ஆம் பக்கம்

செலான் வங்கியிடமிருந்து உங்கள் தங்கப் பவுணிற்கு...
அதிகபட்ச முற்பணம்
ரூ. 160,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
• அதிகபட்ச இரகசியத்தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் தங்கக் கடன்
செலான் வங்கி

# முள்ளிவாய்க்கால் நினைவு முற்ற வளாகத்தில் முன்னாள் போராளி உண்ணாவிரதப் போராட்டம்

(பு.கஜிந்தன்)



பத்து கோரிக்கைகளை முன்வைத்தும் நீதி கோரியும் முள்ளிவாய்க்கால் நினைவு முற்ற வளாகத்தில் முன்னாள் போராளி ஒருவரால் வெள்ளிக்கிழமை (14) முதல் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அழகரத்தினம் வனகுலராசா என்னும் முன்னாள் போராளி ஒருவரே இவ்வாறு முள்ளிவாய்க்கால் நினைவு முற்ற வளாகத்தில் நீர் மற்றும் உணவு இல்லாமல், நீதிகிடைக்கும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

அவரால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளில்,

01. தமிழர்களுக்குத் தனி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும்.

02. வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு உடனடித் தீர்வு வழங்கப்பட வேண்டும்.

03. மாவீரர் துயிலும் இல்லங்களில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்கள் உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

04. தமிழினத் துரோகிகள் முற்றாக வெளியேற்றப்பட வேண்டும்.

05. உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டு கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும்.

06. பிரதேசவாதம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்.

07. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இல்லாதவர்கள் இருந்ததாகக் கூறி, வெளிநாடு மற்றும் உள்நாட்டில் சக போராளிகளைக் காரணங்காட்டி பணம் வசூலித்து, போராளிகளை ஏமாற்றி, சுற்றுலா விடுதி, தோட்டம், பண்ணை அமைத்து, வேலை செய்யும் பணியாளர்களுக்கு சரியான சம்பளம் வழங்காமல் இருப்பதை நிறுத்தி, அவர்களுக்கு ஒருமணிநேரத்துக்கு 200 ரூபா அடிப்படைச் சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

08. முதியோர் மற்றும் இளையோர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

09. காணி மற்றும் வீடில்லாதவர்களுக்கு காணி, வீடு வழங்கப்பட வேண்டும்.

10. இலங்கையில் பிச்சை எடுப்பவர்களின் வீதம் அதிகரித்துள்ளதால், பிச்சை எடுப்பவர்கள் இல்லாத நிலை உருவாக்கப்பட வேண்டும் ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

# ஜனாதிபதியின் செயலாளர் – துருக்கி தூதுவர் சந்திப்பு





ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் துருக்கி குடியரசின் தூதுவர் செமி லுட்பூ டர்கட் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இலங்கைக்கும் துருக்கிக்குமிடையில் தற்போதுள்ள இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திக்கொண்டு, இலங்கையின் பொருளாதார வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு தொடர்ச்சியான ஆதரவு வழங்கப்படுமென துருக்கி தூதுவர் இதன்போது உறுதியளித்தார்.

அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டத்துக்கு துருக்கி குடியரசின் பாராட்டுகளைத் தெரிவித்த தூதுவர், டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் கிராமிய மக்களின் வறுமையை மட்டுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் திட்டத்துக்குத் தேவையான ஆதரவை வழங்கும் என்றும் கூறினார்.

மேலும், கல்வி, சுகாதாரம், விவசாயம் உள்ளிட்ட துறைகளின் மேம்பாட்டுக்காக தற்போதைய அரசாங்கம் செயற்படுத்தும் திட்டங்களுக்கு துருக்கி தொடர்ந்தும் ஆதரவு வழங்கும் என்றும் எதிர்காலத்தில் அதற்கான பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திட எதிர்பார்ப்பதாகவும் தூதுவர் தெரிவித்தார்.

மேலும், துருக்கியில் கல்வி கற்க இலங்கை மாணவர்களுக்கு தற்போது வழங்கப்படும் 15 புலமைப்பரிசில் கோட்டா 25 ஆக அதிகரிக்கப்படும் என்றும் தூதுவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை இந்த ஆண்டின் ஏப்ரல் மாதமளவில் துருக்கிக்கு விஜயம் மேற்கொள்ளுமாறும் தூதுவர் அழைப்பு விடுத்தார்.

துருக்கி தூதரக தூதுக்குழுவின் பிரதி பிரதானி மர்வே கோட்ஸே ஒட்லு உள்ளிட்டவர்களும் இதன்போது கலந்துகொண்டனர்.

## பட்ஜெட்...

நாளை ( 17ஆம் திகதி) காலை 10.30 மணிக்கு நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொடர்பான விவாதம் (வரவு-செலவுத்திட்ட விவாதம்) 2025 பெப்ரவரி 18 ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

2025 ஜனவரி 09ஆம் திகதி முதலாவது மதிப்பீட்டுக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீடு பெப்ரவரி 18ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை ஏழு நாட்கள் இடம்பெறவுள்ளது. அத்துடன், பெப்ரவரி 25ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் குறித்த குழுநிலை விவாதம் பெப்ரவரி 27ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை 4 சனிக்கிழமை நாட்கள் உள்ளடங்கலாக 19 நாட்கள் இடம்பெறவுள்ளன. இதற்கான வாக்கெடுப்பு மார்ச் 21ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

வரவு-செலவுத்திட்ட காலப்பகுதியில் காலை 9.30 மணி முதல் காலை 10.00 மணி வரையான நேரம் 5 வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டிருப்பதுடன், காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரையான காலப்பகுதியில் வரவு-செலவுத்திட்ட விவாதம் இடம்பெறும்.

வாக்கெடுப்பு நடத்தப்படும் தினங்களான பெப்ரவரி 25 மற்றும் மார்ச் 21ஆம் திகதிகள் தவிர, ஏனைய அனைத்து நாட்களிலும் மாலை 6.00 மணி முதல் மாலை 6.30 மணிவரையான காலப்பகுதி சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணைக்காக ஒதுக்கப்பட்டிருக்கும்.

## தேர்தல்கள்...

பாராளுமன்றத்தில் கூடிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது.

அத்துடன், வரையறுக்கப்பட்ட தொலைக் கல்வி நிலையத்தின் 2021 மற்றும் 2022ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையும் இங்கு ஆராயப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பிரதியமைச்சர் ருவன் செனரத் உள்ளிட்ட பிரதியமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் குழுவின் உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## தேர்தல்கள் விசேட...

அதற்கமைய, சட்டமூலம் முழுமையாகவும் குறிப்பாக, 2 மற்றும் 3ஆம் வாசகங்கள் அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரையுடன் முரண்படுவதால், அரசியலமைப்பின் 84(2)ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க விசேட பெரும்பான்மையொன்றின் மூலம் மாத்திரமே அங்கீகரிக்கப்பட முடியுமென நீதியரசர்கள் குழாத்தின் பெரும்பான்மையினராகிய நீதியரசர்கள் இருவர் தீர்ப்பளித்துள்ளதாக சபாநாயகர் அறிவித்தார்.

அத்துடன், சட்டமூலம் முழுமையாகவும் அல்லது அதன் எந்தவொரு ஏற்பாடும் அரசியலமைப்புடன் முரண்படுவதில்லையென்பதால் அதனைப் பாராளுமன்றத்தின் சாதாரண பெரும்பான்மையொன்றின் மூலம் நிறைவேற்றப்பட முடியுமெனவும் நீதியரசர்கள் குழாத்தின் மீதமுள்ள நீதியரசர் தீர்ப்பளித்துள்ளதாகவும் சபாநாயகர் தனது அறிவித்தலில் மேலும் தெரிவித்தார்.

## முதியோருக்கான...

உள்ளடக்கப்பட்ட முதியோர்கள் தவிர்ந்த இதுவரை காலமாக கொடுப்பனவு பெற்றுக் கொண்டிருந்த முதியோர்களுக்கு மாத்திரம் தபால், உப தபால் அலுவலகங்களினூடாக கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இருந்தும் பல்வேறு பிரயோகப் பிரச்சினைகளின் காரணமாக கடந்த காலங்களில் நியமிக்கப்பட்ட தினத்துக்குள் கொடுப்பனவு செலுத்த முடியாமையின் காரணமாக முதியோர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டமையால், குறிப்பிட்ட பங்குதாரர்களுடன் கலந்துரையாடியதன் பின்னர், 2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்துக்கான கொடுப்பனவை தபால், உப தபால் அலுவலகங்களினூடாக பெப்ரவரி மாதம் 20ஆம் திகதியிலிருந்து செலுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## நாமலின்...

படிப்பை மேற்கொண்டதில் முறைகேடுகள் இடம்பெற்றதாக பல முறைப்பாடுகள் வந்துள்ள நிலையில், அந்த முறைப்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு இந்த விசாரணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதுவரை, நாமல் ராஜபக்ஷவின் கல்வித் தகைமைகள் தொடர்பாக முன்னதாகவே பல்வேறு சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ள நிலையில், இந்த விசாரணை முக்கியத்துவம் பெறுகிறது. குறிப்பாக, அவர் பட்டம் பெற்ற விதம், அதற்குத் தேவையான கல்விசார் நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்பட்டனவா என்பதைக் கண்காணிக்க சி.ஐ.டி. அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாமல் ராஜபக்ஷ, சட்டத் துறையில் பட்டம் பெற்றுள்ளதோடு, அரசியல் மற்றும் விளையாட்டுத் துறைகளிலும் செயற்பட்டு வருகிறார். எனினும், கடந்த சில ஆண்டுகளாக அவருக்கு எதிராக பல்வேறு வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இதில் நிதி மோசடி, அதிகார துஷ்பிரயோகம் உள்ளிட்ட முறைப்பாடுகளும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## யாழில்...

2025ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டம் தொடர்பான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமானது யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

அதில் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். அவர்களை அறிவுறுத்தும்வகையில் மாவட்ட செயலகத்துக்கு முன்னால் இந்தப் போராட்டமானது முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## யு.எஸ், எயிட்...

யு.எஸ். எய்ட் தலைமையகம் அண்மையில் மூடப்பட்டது.

வொஷிங்டனிலுள்ள யு.எஸ்.எய்ட் என்னும் தொண்டு நிறுவனம் 1961ஆம் ஆண்டு ஜோன் கென்னடி ஜனாதிபதியாக இருந்தபோது சர்வதேச அளவில் மனிதாபிமான அடிப்படையில் உதவி வழங்கும் வகையில், உருவாக்கப்பட்டது.

இந்தத் தொண்டு நிறுவனத்தின் ஆண்டு பட்ஜெட் ரூ.4 இலட்சத்து 35 ஆயிரம் கோடியாகும். இதற்கான நிதி முழுவதும் அமெரிக்க அரசால் அளிக்கப்படுகிறது. இவ்வளவு பெரிய தொண்டு நிறுவனமான யு.எஸ்.எய்ட், மீண்டும் ஆட்சிப் பொறுப் பேற்றுள்ள ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகத்தால் மூடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இலங்கையில் சர்வதேச மேம்பாட்டுக்கான அமெரிக்க நிறுவனத்தின் கீழ் செயற்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் மானியங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறு பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அரசாங்கத்தை தன்னை சந்தித்த அமெரிக்கத் தூதுவரிடம் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிதியிலிருந்து பயனடைந்த அரசு சாரா நிறுவனங்களின் கணக்கு உட்பட விரிவான அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென இந்தச் சந்திப்பில் குறிப்பிட்டுள்ள அவர், மனிதாபிமான உதவி எனும் போர்வையில் ஏனைய நாடுகளில் ஸ்திரமின்மையை உருவாக்க சர்வதேச மேம்பாட்டுக்கான அமெரிக்க நிறுவனத்தின் நிதி பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும் வினவியுள்ளார்.

இலங்கை அண்மைய ஆண்டுகளில் சர்வதேச மேம்பாட்டுக்கான அமெரிக்க நிறுவனத்திலிருந்து மில்லியன்கணக்கான டொலர்களைப் பெற்றுள்ளதாகவும் இந்த நிதி எவ்வாறு பயன்படுத்தப்பட்டதென்பது குறித்து தெளிவான கணக்கு இல்லை எனவும் தூதுவரிடம் குறிப்பிட்ட அவர், இது தொடர்பில் விசாரிக்க பாராளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்படவேண்டுமெனவும் தாம் கோரிக்கை விடுத்திருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனையடுத்தே இது தொடர்பில் விசாரிக்க தாம் தயாராகியிருப்பதாக அமெரிக்கத் தூதுவர் தெரிவித்திருக்கிறார்.



# தையிட்டி விகாரை முளைத்த கதை



வலிகாமம் வடக்கு, தையிட்டி பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரையே இன்று பரபரப்பாகப் பேசப்படும் விடயமாகி யுள்ளது.

விகாரை கட்டப்பட்டு, கலசம் வைக்கப்பட்ட சம்பவமெல்லாம் பல காலத்தின் முன்னரே முடிந்துவிட்டது. இதனால் விகாரை கட்டப்பட்டது தமிழர்களுக்கும் தமிழ் மக்கள் மத்தியிலுள்ள கட்சிகளுக்கும் பிரச்சினையல்ல. தையிட்டியில் விகாரை கட்டப்படுவது இரகசியமாக- யாருக்கும் தெரியாமல் நடந்த விவகாரமல்ல.

அது ஊருக்கே தெரிந்த விடயம். ஊடகங்களுக்கும் தெரிந்த விடயம். செய்திகளைப் படிக்கும் மக்களுக்கும் தெரிந்த விடயம். யாழ். மாவட்டத்திலேயே உயரமான விகாரையென்ற பில்டப்புடன் இதன் திறப்பு விழா நடந்து அதனைத் தொடர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் போராட்டம் தொடங்கிய பின்னர், அதை பொலிஸார் இரும்புக்கரம் கொண்டு அடக்க முற்பட்டதைத் தொடர்ந்தே பரபரப்பாகியுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் அண்மைக்காலமாக ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் சட்டவிரோத விகாரைக்கு எதிராக போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

***வலி. வடக்கு பிரதேச சபையே குற்றவாளி***

நன்றாக கவனிக்கவும். விகாரை கட்டப்பட்டது இரகசியமல்ல. அது ஊருக்கும் தெரியும். ஊடகங்களுக்கும் தெரியும். செய்தி படிப்பவர்களுக்கும் தெரியும். தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் தெரியும்.

இந்த இடம்தான் இப்பொழுது பலராலும் சுட்டிக்காட்டப்படும் விடயமாகியுள்ளது. விகாரை கட்டப்பட ஆரம்பித்த போதே, தமிழ்த் தரப்பினால் மிக சுலபமாக தடுத்து நிறுத்த வாய்ப்பிருந்தும் அதைச் செய்யாமல் இப்பொழுது, விகாரையை இடிக்க வேண்டுமென ஒரு தரப்பினர் முஸ்டியை முறுக்க... அர்ச்சுனா அரைவேக்காட்டுத்தனமாக கதைக்க.. சிங்கள இனவாதிகள் அவல் கிடைத்த பூரிப்பில் வரிந்து கட்டிக்கொண்டு கிளம்ப.. தையிட்டி விவகாரம் உணர்திறன்மிக்க விடயமாகியுள்ளது.

யுத்தத்தை வெற்றிபெற்றதாக நினைக்கும் இராணுவம் - எதையும் எப்படியும் செய்யலாமென நினைக்கும் இராணுவம்- பௌத்த மத அடையாளங்களை நாடு முழுவதும் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட அரச இயந்திரம் இலங்கை சிங்களவர்களின் பூர்வீக நாடு எனக் கருதும் இனம்- அப்படித்தானே நடப்பார்கள்.

வாய்ப்புள்ள இடங்களிலெல்லாம் விகாரை கட்டுவார்கள். இன மேலாதிக்க உணர்வுள்ள தரப்புகளெல்லாம் அதைச் செய்யும்.

தமது நிலங்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற கூட்டுப் பொறுப்புணர்வு தமிழ்த் தரப்பிடமே இருந்திருக்க வேண்டும். அப்படியிருந்திருந்தால், தையிட்டியில் விகாரை அமைக்காமல் தடுத்திருக்க முடியும்.

தையிட்டியில் சட்டவிரோதமாக, தமிழ் மக்களின் பூர்வீக காணிகளில் அடாத்தாக விகாரை அமைக்கப்பட்டது- வலி. வடக்கு பிரதேச சபையின் மெத்தனமான போக்கினாலேயே. வலி. வடக்கு பிரதேச சபை சிறிதேனும் செயற்றிறனாக நிலங்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற விழிப்புடன் இருந்திருந்தால், இந்த நிலைமையேற்பட்டிருக்காது.

என்றாலும், வலி. வடக்கிலுள்ள சில உறுப்பினர்கள் இந்த விவகாரத்தில் அக்கறையுடன் இருந்துள்ளனர். அவர்களின் அக்கறையினாலேயே விகாரை விவகாரத்தில் வலி. வடக்கு பிரதேச சபை எங்கே சறுக்கியது என்பதை இப்பொழுதாவது புரிந்துகொள்ள முடிகிறது.

**விகாரையும் பின்னணியும்**


தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள ரஜமஹா விகாரைக்கான பணிகள் 2018ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டது. அப்போதைய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, காங்கேசன்துறை துறைமுக திறப்பு விழாவுக்கு வந்த சமயத்தில், விகாரைக்கு அடிக்கல் நாட்ட வருவாரெனக் கூறப்பட்டது. என்றாலும், நேர நெருக்கடி ஏற்பட்டதால் மைத்ரி நிகழ்வில் கலந்து கொண்டிருக்கவில்லை. அப்போதைய ஆளுநர் ரெஜினோல்ட் குரே அடிக்கல் நாட்டினார். இதில் சுவாரஸ்யம் என்னவென்றால், ரெஜினோல்ட் குரே அடிக்கல் நாட்டிய இடத்தில் இந்த விகாரை கட்டப்படவில்லை. அதற்கு அண்மையாக உள்ள கிட்டத்தட்ட 2 ஏக்கர் நிலத்தில் இந்த விகாரை கட்டப்பட்டுள்ளது. அது 8 பேருக்கு சொந்தமான தனியார் காணி.

அடிக்கல் நாட்டப்பட்டதற்கு அண்மையாக அடிக்கல் நாட்டப்படுமென முன்னர் குறிப்பிடப்பட்ட இடத்தில் 1980களின் நடுப்பகுதி வரை சிறியளவிலான விகாரையொன்று இருந்தது. எனினும், அது தொன்மையான விகாரையல்ல. 20 பரப்புக் காணியில் அந்த விகாரையிருந்தது.

சிங்கள தனிநபர் ஒருவரால் நயினாதீவு, காங்கேசன்துறை விகாரைகளுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் அந்த விகாரையிருந்தது. அந்த இடம் சிங்களவர் பூர்வீகமாக வாழ்ந்த காணியுமல்ல. 1947ஆம் ஆண்டின் வெளிப்படுத்தல் உறுதியின் மூலமே குறிப்பிட்ட சிங்கள நபர் அந்தக் காணியை உரிமை கோரியிருந்தார்.

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்)



தமிழன்
வாரவெளியீடு
THAMILAN WEEKLY
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/thamilaneditor@gmail.com

ஞாயிற்றுக்கிழமை, பெப்ரவரி 16, 2025

# அநுரவும் அதானியும்!

இந்திய கோடீஸ்வரர் கௌதம் அதானியின் நிறுவனத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையில் அடுத்த வாரத்தில் பேச்சுவார்த்தையொன்று ஏற்பாடாகியுள்ளது.

அதானி கிரீன் எனர்ஜி, இலங்கையிலிருந்து தனது காற்றாலை மின்சாரத் திட்டத்தை திரும்பப் பெற முடிவு செய்ததாக செய்தி வெளியான சில மணி நேரங்களுக்குப் பின்னர், இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக செய்திகள் சொல்கின்றன.

காற்றாலை மின்திட்டத்தை நிறுத்துவதாக மன்னாரில் காற்றாலை மின்சாரத் திட்டம் உட்பட்ட பிற மின்மாற்றத் திட்டங்களை மீண்டும் செயற்படுத்துவது குறித்த முடிவை எட்ட முடியுமா என்பதை மையப்படுத்தி, மூடிய கதவுகளுக்குப் பின்னால், இந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்படுமென்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

காற்றாலை மின்திட்ட அதானியின் வாபஸ் அறிவிப்பால் புதுடில்லியின் செல்லப்பிள்ளைகளான அதானி குழுமம் கொழும்புடன் முரண்பட்டுக்கொள்ளும் சூழல் உருவாகியிருக்கிறது. இது இரண்டு நாடுகளையும் சம தூரத்தில் வைத்துக் கையாளும் கொழும்பு அரசின் தந்திரத்துக்கு அது பெரும் பின்னடைவு.

மன்னாரிலும் பூநகரியிலும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டமொன்றையும் மின் விநியோகக் கட்டமைப்பொன்றையும் உருவாக்கும் பணியை இந்தியாவின் அதானி குழுமம் முன்னெடுத்து வந்த நிலையில், தற்போது அதிலிருந்து விலகுவதற்கு அக்குழுமம் வியாழனன்று அதிரடியாகத் தீர்மானித்துள்ளது.

இலங்கையில் திட்டமிடப்பட்ட ஒரு பில்லியன் டொலர் (நூறு கோடி டொலர் அல்லது சுமார் முப்பதாயிரம் கோடி ரூபா) முதலீட்டுடனான காற்றாலை மின் திட்டத்திலிருந்தே அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம் விலக முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

திட்டத்தைத் தொடங்குவதற்குத் தேவையான பெரும்பாலான அனுமதிகளை அந்த நிறுவனம் பெற்றுள்ளபோதிலும், தீர்க்கப்படாத சுற்றுச்சூழல் அனுமதிகள் மற்றும் உயர் நீதிமன்றத்தில் நடந்து வரும் வழக்குகள் உள்ளிட்ட பல்வேறு தாமதங்களைக் காரணங்காட்டி, இன்றுவரை இந்தத் திட்டத்தை அந்த நிறுவனத்தால் செயற்படுத்த முடியவில்லை.

இலங்கையில் தற்போது புதிதாகப் பதவியேற்றுள்ள தேசிய மக்கள் சக்தி அரசின் தலைமைத்துவமும் இலங்கையில் அதானி குழுமச் செயற்பாட்டை ஊக்குவிக்கும் ஆரோக்கியமான போக்கில் இல்லை என்ற கருத்து அதானி குழுமத்திலும் புதுடில்லியிலும் நிலவுவதாகக் கூறப்படும் பின்னணியிலேயே அதானி நிறுவனத்தின் விலகல் பற்றிய செய்தி வெளியாகியிருக்கின்றது.

அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம் தற்போது இலங்கை முதலீட்டுச் சபைக்கு இது குறித்து அறிவித்துள்ளது. மேலும் இது ஒரு மரியாதையுடனான (கௌரவத்துடனான) விலகல் என்றும் இலங்கையில் எதிர்காலத் திட்டங்களுக்கு தங்கள் நிறுவனம் திறந்திருப்பதாகவும் நிறுவனத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தின் அனுமதி மற்றும் தீர்மானங்களில் ஏற்படும் தாமதங்களே அதானி குழுமத்தை விரக்திக்குள்ளாக்கி விலகச் செய்ததற்கான காரணமாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மற்றும் இந்திய குழுக்களுக்கிடையே இவ்விடயத்தையொட்டி பல சுற்றுப்பேச்சுகள் இடம்பெற்றபோதிலும் இறுதி முடிவு தாமதமாவதால், மரியாதையுடன் விலக முடிவு செய்துள்ளதாக அதானி குழுமம் இலங்கை முதலீட்டுச் சபைக்கு அறிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

அண்மையில் புதுடில்லிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும் அவரது குழுவினரும் அதானி குழுமத் திட்டம் குறித்து இந்திய அதிகாரிகளுடன் கலந்துரையாடியிருந்தனர்.

ஆயினும் , விடயங்களில் முன்நகர்வு இருக்கவில்லை. விவகாரம் கிணற்றில் போட்ட கல்லாகத் தேங்கிக் கிடக்கக் காலம் இழுபட்டது.

அதானி விவகாரம் தொடர்பான நீதிமன்றத் தீர்ப்புக்காகக் காத்திருப்பதாகவும் அதன் பிறகு மேலும் முடிவெடுப்பதாகவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கூறியிருந்தது. எவ்வாறாயினும், இலங்கை அரசாங்கம் இதுவரை இறுதிப் பதிலை வழங்கவில்லை.

இந்தப் பின்புலத்தில் அதானி குழுமத்தின் விலகல் இலங்கை இந்திய பொருளாதாரத் தொடர்பாடலில் ஊடாட்டத்தில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும். மறுபக்கம், அதானியின் இந்த விலகல், இலங்கையை நம்பி முதலிட வரும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குப் புதிய அச்சத்தை ஏற்படுத்திவிடலாம். கடந்த வாரம் அவுஸ்திரேலிய நிறுவனமொன்று மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு வெளியேறிவிட்டதாக ஹர்ஷ டி சில்வா எம்.பி. கூறியதையும் இங்கு கவனத்திற்கொள்ள வேண்டியுள்ளது.

அதானியின் காற்றாலை மின்திட்டத்துக்கு இலங்கை கடந்த 2 வருடங்களாக சாக்குப்போக்கு கூறுவது அதனை இழுத்தடிப்பதற்காகவே இருக்கும் என்பதை உணர்வது கடினமான விடயமல்ல.

அதானி தனது திட்டத்தை வாபஸ் பெற்றுவிட்டது, இந்தியா இலங்கையை சூறையாடுவது தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டது என்றவாறாக தென்னிலங்கையில் பேசப்படலாம். ஆளுங்கட்சியின் ஆதரவாளர்களே அப்படியான கதைகளை உருவாக்கி அரசாங்கத்துக்கு ஆதரவாக மக்களின் கருத்துகளை வெளிக்கொணரலாம். ஆனால், இந்த விடயம் சாதாரண விடயமல்ல. இலங்கை புதிய அரசின் எதிர்காலப்போக்கைத் தீர்மானிக்கும் ஒரு விடயமாக இது இருக்கிறதென்பது இராஜதந்திர மொழி அறிந்தவர்களுக்குப் புரியும்.

ஒருபக்கம் சீனாவை இலங்கை அரவணைக்கிறது. மறுபக்கம் சீனாவுக்கு எதிரான நாடுகள் எல்லாம் ஓரணியில் நிற்கின்றன. அமெரிக்க ஜனாதிபதியை முதன்முதலாக சந்தித்த உலகத் தலைவர் என்ற ரீதியில் இந்தியப் பிரதமர் மோடி, ட்ரம்ப்புடன் நேரடியாகவே பேசுகிறார். அப்படியான நாடொன்றின் முதலீட்டை இலங்கை கணக்கில் எடுக்காமல் அது திரும்பிச் சென்றுவிட்டது என்பதெல்லாம் பாரதூரமான விளைவுகளுக்கான கட்டியங்களே. மீண்டுமொரு வரிசையுகம் வரப்போகிறதென்பதற்கான அறிகுறிகளையும் அவதானிக்க முடிகிறது.

# குரங்கைக் குற்றவாளியாக்காதீர்



**மீநிலங்கோ தெய்வேந்திரன்**



கடந்த ஞாயிற்றுக்கிழமை நாடே மின்தடையால் இருளில் மூழ்கியது. இலங்கை இருளில் மூழ்குவது இது முதன்முறையன்று. அநேகமாக இறுதி முறையாக இருக்கவும் வாய்ப்பில்லை. ஆனால், திடீரென ஏற்பட்ட மின்தடைக்கு குரங்கே காரணம் என்று சொல்லப்பட்டமையானது பேசுபொருளாகியுள்ளது. கடந்த ஞாயிறு ஏற்பட்ட மின்தடையை சீர்செய்ய பல மணி நேரங்கள் பிடித்தன. அதைத் தொடர்ந்து கடந்த வாரத்தின் சில நாட்கள் திட்டமிடப்பட்ட மின்வெட்டுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இது ஆளும் தேசிய மக்கள் சக்திக்குப் பலத்த அசௌகரியத்தைக் கொடுத்துள்ளதென்பது உண்மை. ஏற்பட்ட மின்தடையென்பது வினைத்திறனின்மையின் வெளிப்பாடு என்பதை இலங்கையர்கள் அனைவரும் ஏற்கின்றனர். ஆனால், அதற்குக் குரங்கைக் குற்றவாளியாக்குவதை நகைச்சுவையுடன் மறுக்கிறார்கள்.

ஞாயிற்றுக்கிழமை திடீர் மின்தடை ஏற்பட்டதைத் தொடர்ந்து, இவ்வாறு ஏற்பட்டமைக்கான காரணம் யாதென மின்சக்தி அமைச்சர் குமார ஜெயகொடியிடம் வினவியபோது, குரங்கொன்று மின்மாற்றியில் சிக்குண்டதால் ஏற்பட்ட சிக்கலால் நாடுதழுவிய மின்தடை ஏற்பட்டதாகத் தெரிவித்தார். இலங்கையர்களின் இரண்டு கேள்விகளே இருந்தன. முதலாவது, ஒரு குரங்கால் முழு நாட்டின் மின்சாரத்தையும் முடக்க முடியுமா. இரண்டாவது, அச்சிறிய அசம்பாவிதத்திலிருந்து வழமைக்குத் திரும்ப ஏன் ஆறு மணித்தியாலங்கள் எடுத்தன.

இதேவேளை, மறுநாள் திங்கட்கிழமை ஊடக சந்திப்பை நிகழ்த்திய இலங்கை மின்சார சபையின் தலைவர் திலக் சியம்பலாப்பிட்டிய மின்தடைக்கு இன்னொரு காரணத்தைக் கூறினார். ஞாயிற்றுக்கிழமைகளில் நாடுதழுவிய ரீதியில் மின்சாரப் பாவனை குறைவு. ஆதலால் ஞாயிற்றுக்கிழமைகளில் சூரியகலங்களின் வழியாக உற்பத்தியாகும் மின்சாரம் தேவைக்கு அதிகமானது. அதிக மின்சாரத்தால் மின்சாரக் கட்டமைப்பு நெருக்கடிக்குள்ளானது. இதனாலேயே மின்தடை ஏற்பட்டதென்று விளக்கினார். அவரது கருத்துப்படி மின்தடைக்கு குரங்கு மின்மாற்றியின் மீது பாய்ந்தமை காரணமல்ல. ஆக அவரது கருத்துப்படி சூரிய கலன்கள்தான் காரணம். அதேவேளை, மின்சாரக் கட்டமைப்பில் ஏற்பட்ட சிக்கலால் நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் செயற்பாடுகளில் கோளாறு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இங்கே முக்கியமான கேள்வியொன்றுண்டு. இதற்குப் பொறுப்பான அமைச்சர் ஒரு பொறியியலாளரும் கூட. குரங்கு பாய்ந்ததால் மின்தடை ஏற்பட்டது என்ற கருத்தை அமைச்சருக்கு யார் தெரிவித்தது? இலங்கை மின்சார சபையின் தகவல்களின் அடிப்படையிலேயே இக்கருத்தை அமைச்சர் தெரிவித்தாரா? அப்படியாயின், மறுநாள் மின்சார சபையின் தலைவர் வேறொரு கருத்தைச் சொன்னது ஏன் "குரங்கால் மின்தடை" என்பது சர்வதேச அரங்கில் ஒரு செய்தியாயுள்ளது. ஏராளமான சர்வதேச ஊடகங்கள் இக்கதையை செய்தியாகக் காவியுள்ளன. இது இலங்கையின் பிம்பத்துக்கு நல்லதல்ல.

இவ்விடத்தில் மின்சார சபையின் தலைவர் அதிகப்படியான சூரியகல மின்சாரத்தின் உற்பத்தி மின்கட்டமைப்பின் சமநிலையைக் குலைத்துவிட்டதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார். ஆனால், இலங்கை 2030இல் 80வீதமான மின்சார உற்பத்தியைப் புதுப்பிக்கத்தக்க சக்தியின் மூலம் உருவாக்குவதற்கு உறுதிபூண்டுள்ளது. அவ்வகையில் அதிகளவிலான சூரிய மின்னுற்பத்தி நாட்டுக்கு நல்லதுதானே. ஆனால், இங்குதான் சிக்கல் பன்முகப்பட்ட வடிவில் கருக்கொண்டுள்ளது.

இலங்கையின் நீண்டகால மின்னுற்பத்தித் திட்டத்தின்படி 2024ஆம் ஆண்டுக்கு 160 ஆறு சூரியகல மின்சாரத்தையும் 2025 மற்றும் 2026 ஆண்டுகளில், ஆண்டுக்கு தலா 150 ஆறு சூரியகல மின்சாரத்தையும் இலங்கையின் பொது மின்கட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட வேண்டும். 2024ஆம் ஆண்டு 600 ஆறு சூரியகல மின்சாரத்தை பொதுக்கட்டமைப்புக்குள் இணைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது 2024 முதல் 2026 வரை ஏற்றுக்கொள்ளத் திட்டமிடப்பட்ட அளவை விட மிக அதிகமானது. எனவே, இவ்வளவு மின்சாரத்தைத் தாங்கும் வலு தற்போதைய மின்சாரக் கட்டமைப்பில் இல்லை. இதனால் கட்டமைப்பின் ஸ்திரத்தன்மை பலவீனமடைந்தது.

இவ்வளவு தொகையான மின்னுற்பத்திக்கு வாய்ப்புள்ளதென்பதை இலங்கை மின்சார சபை அறியாமலிருக்க வாய்ப்பில்லை. குறைந்தபட்சம் இவ்வாறு உற்பத்தியாகும் மின்சாரத்தை சேமித்து வைக்கக்கூடிய வழிவகைகளையும் கட்டமைப்புகளையும் உருவாக்கியிருக்க வேண்டும். ஆனால், அது நடைபெறவில்லை. மாறாக, இலங்கை மின்சார சபை ஞாயிற்றுக் கிழமைகளில் மக்கள் அதிகளவில் மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று கோருகிறது.

இந்நிகழ்வு பல ஐயங்களை எழுப்புகிறது. மூன்று நிகழ்வுகள் குறித்த ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்துள்ளன. முதலாவது பாணந்துறையிலுள்ள உப மின்வழங்கும் நிலையத்தின் மின்பிறப்பாக்கியில் குரங்கு பாய்ந்தமையால் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு. இரண்டாவது, அதிகளலான மின்சாரத்தை குறித்த தினம் சூரியகலங்கள் உற்பத்திசெய்து பிரதான மின்கட்டமைப்பு வழங்கியமையால் மின்கட்டமைப்பின் ஸ்திரத்தன்மை உருக்குலைந்தது. மூன்றாவது தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நுரைச்சோலை அனல்மின் நிலையம் செயலிழந்தது.

வெறுமனே குரங்கு பாய்ந்தமையால்தான் இவ்வாறு ஏற்பட்டது என்று வைத்துக் கொள்வோம். ஒரு குரங்கால் ஏற்பட்ட ஒரு மின்மாற்றியின் செயலிழப்பு என்பது நாடுதழுவிய மின்தடையை ஏற்படுத்துமாயின் உண்மையான பிரச்சினை நாட்டின் மின்கட்டமைப்பானது வலுவற்றது. இது கட்டுப்பாட்டு அமைப்புகள் திறம்பட இன்மை மற்றும் தொழில்நுட்ப பின்னடைவு ஆகியவற்றிலுள்ள அடிப்படை பலவீனமாகும்.

மின் கட்டமைப்பு என்பது ஒருபோதும் ஒரு தோல்வியில் சரிந்துவிடக் கூடாது. ஒழுங்காக வடிவமைக்கப்பட்ட அமைப்பில், மின்மாற்றி செயலிழந்தால் நாடு முழுவதும் மின்வெட்டு ஏற்படக் கூடாது. குறித்த கட்டுமானம் எவ்வாறு கட்டமைக்கப்படுகிறது, நிர்வகிக்கப்படுகிறது மற்றும் தானியங்கு செய்யப்படுகிறது என்பதே தொடர்ச்சியான மின்சார வழங்கலையும் அனர்த்தங்களைக் கையாளுதலையும் உறுதிப்படுத்தும். அண்மைய மின்வெட்டு இலங்கையின் மின்சாரக் கட்டமைப்பின் கடுமையான அடிப்படைக் குறைபாடுகளை இன்னொருமுறை வெளிச்சம்போட்டுக் காட்டியுள்ளது. இது ஒரு தற்செயலான விபத்து அல்ல. ஆனால், பொறியியல், கொள்கை மற்றும் தொழில்நுட்பத் தோல்வி. இது அவசரமாக கவனிக்கப்பட வேண்டும்.

இரண்டாவது, அதிகளவிலான சூரியகல மின்சாரம் கட்டமைப்புக்குள் வந்தமையால் ஸ்திரமின்மை ஏற்பட்டதென்பதை ஏற்றால், அவ்வாறு அளவுக்கதிகமான மின்சாரத்தை பொதுக்கட்டமைப்புக்குள் ஏற்றுக்கொள்ள அனுமதியை மின்சார சபைதானே வழங்கியது. கடந்தாண்டு புதிதாகச் சேர்க்கப்பட்ட சூரியகல மின்சக்தி என்பது வீடுகளின் கூரையில் போடப்பட்ட சூரியகலன்களின் வழி உருவாகும் மின்சாரமே. இவ்வாறு கூரையில் சூரியகலன்களை அமைப்பதற்கான அனுமதியை இலங்கை மின்சார சபைதானே வழங்கியது. எனவே, இந்தக் கூற்று முன்னுக்குப் பின் முரணானது. அதேவேளை, திட்டமிட்டமைக்கு மேலாக அளவுக்கதிகமான சூரியகல மின்சாரத்தை பொதுக்கட்டமைப்புக்குள் அனுமதித்தது யார் என்ற வினாவுக்காக பதிலை அரசாங்கம் வழங்க வேண்டும்.

மூன்றாவது, நுரைச்சோலை அனல்மின் நிலையம் சீர்குலைவுக்கு ஆளானமை குறித்து இலங்கை மின்சார சபை மௌனம் காக்கிறது. உண்மையில், ஏற்பட்ட மின்தடைக்கு நுரைச்சோலை அனல்மின் நிலையம் சீர்குலைந்தது காரணமாக இருக்கலாம். ஆனால், அதை மறைப்பதற்காகவே குற்றம் குரங்கின் மீதும் பின்னர் சூரியகல உற்பத்தியின் மீதும் போடப்படுகிறது என்பது சிலரது வாதமாகும். அவ்வாதத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் இலங்கை மின்சார சபையின் கடந்தகால நடவடிக்கைகள் இருந்து வந்துள்ளன.

இலங்கையின் மின்சார உற்பத்தியை புதுப்பிக்கத்தக்க சக்தியை நோக்கிய திசையில் நகர்த்துவதற்கு இலங்கை மின்சார சபை தொடர்ச்சியாகத் தடையாக இருந்து வருகிறது. நுரைச்சோலை அனல்மின் நிலையம் தொடர்ச்சியாக சிக்கல்களை வழங்கிவந்துள்ள நிலையிலும் அனல்மின் உற்பத்தி மீதான மின்சார சபையின் காதல் நன்கறியப்பட்டது. இதனோடு நிலக்கரிக் கொள்வனவு ஊழல்களையும் இணைத்துப் பார்க்க வேண்டியுள்ளது.

இதேவேளை, குரங்கு பாய்ந்ததாய் சொல்லப்படும் பாணந்துறை உப மின்வழங்கும் நிலையத்தின் காவலாளி கடந்த ஞாயிறு, தனியார் தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்ட விடயம் முக்கியமானது.

“இங்கு மின்பிறப்பாக்கிகள் மீது குரங்குகள் பாய்வது வழமையானது. விபத்துகள் நடப்பதுண்டு. ஆனால், அவை உடனேயே சரியாகும். இவ்வாறு மின்தடை ஏற்படுவதில்லை. குரங்குகள் பாய்ந்து விபத்து ஏற்படும் சந்தர்ப்பங்கள் உண்டு. இன்று அவ்வாறு நிகழவில்லை.”

உண்மையில் என்ன நடந்ததென்பது குறித்து தெளிவான ஒரு பதிலை இலங்கை மின்சார சபை இலங்கை மக்களுக்கு வழங்கவில்லை. கிடைக்கப்பெறுகின்ற தகவல்களின்டி இலங்கை மின்சார சபையில் 26,131 ஊழியர்கள் உள்ளனர். அவர்களின் மாதச் சம்பளம் சுமார் ரூ. 3,000 மில்லியன், இதில் 600 மில்லியன் பொறியியலாளர்களின் சம்பளத்துக்கு மட்டும் செல்கிறது. மொத்த ஊழியர்களில் குறைந்தபட்சம் 50% பேர், மின்சக்தி அமைச்சின் அடுத்தடுத்த அமைச்சர்களால் அரசியல் நியமனம் பெற்றவர்கள். இத்தகைய அதிகப்படியான பணியாளர்கள் அதிக சம்பளம் பெறுவதால், நுகர்வோரின் மின் கட்டணத்தை மின்சார சபையால் குறைக்க முடியாது என்பதில் ஆச்சரியமில்லை. இலங்கையர்கள் தெற்காசிய நாடுகளிலுள்ள தமது சகாக்களை விட சராசரியாக 2.5 முதல் 3 மடங்கு அதிகமாக மின்சாரத்துக்கு கட்டணமாகச் செலுத்துகின்றார்கள். எங்கள் மின்சார சபை பொறியியலாளர்கள் பல ஆண்டுகளாக மின் உற்பத்தியை எவ்வாறு திறமையற்ற முறையில் நிர்வகித்துள்ளனர் என்பதை இது காட்டுகிறது.

இலங்கையின் மின்சார விநியோகக் கட்டுமானம் புனர்நிர்மாணத்துக்கு ஆளாக வேண்டும். இதை இந்த நெருக்கடி மீண்டும் கோடு காட்டியுள்ளது. இலங்கைக்கு அந்நியச் செலாவணியைப் பெற்றுத்தரும் தகவல்தொழில்நுட்பத் துறை மற்றும் உல்லாசத்துறை ஆகியன தவிர்க்கவியலாமல் தடையற்ற மின்சார விநியோகத்திலேயே தங்கியுள்ளன. இலங்கையின் பொருளாதார எதிர்காலத்தில் மின்சார விநியோகம் பிரதான பங்களிப்பை வழங்க வேண்டும்.

இலங்கையின் மின்சார உற்பத்தி, வழங்கல், மின்கட்டணங்கள் ஆகியன சீரமைக்கப்படாது விட்டால் தவிர்க்கவியலாமல் நமது மின்சக்திக்கான இறைமையை நாம் இழக்க நேரிடும். இந்தியா நீண்டகாலமாக இருநாடுகளுக்கும் இடையிலான மின்சார பரிவர்த்தனை இணைப்பைக் கோரி வருகிறது. இதுவரை அதை வெற்றிகரமாக நாம் தடுத்து வந்திருக்கிறோம். தென்னிந்தியா மிக அதிகமான மின்சாரத்தை (குறிப்பாக புதுப்பிக்க சக்தியை) உற்பத்தி செய்கிறது. அது தனது மேலதிக மின்சாரத்தை விற்பனை செய்வதற்கான சந்தையைத் தேடுகிறது. அதன் முக்கியமான இலக்கு இலங்கை. இலங்கையின் மின்சாரக் கட்டமைப்பைக் கைப்பற்றுவதற்கான பணிகளில் கடந்த ஒரு தசாப்தகாலமாக இந்தியா ஈடுபட்டு வருகிறது. இலங்கையின் சக்தி மூலங்கள் மீதான அதிக கவனத்தை சீனா, அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளும் செலுத்துகின்றன.

கடந்தவார மின்தடை அரசுக்கு இன்னொரு எச்சரிக்கை மணியை அடித்துள்ளது. பிரச்சினைகளை ஆழமாகவும் விரிவாகவும் நோக்குவதும் அதற்கான நிலையான நீண்டகாலத் திட்டங்களை உருவாக்குவதும் நடைமுறைப்படுத்துவதும் முக்கியம். காகம் இருக்க பனம்பழம் விழுந்த கதையாய், ஏதோ காரணத்துக்காய் நிகழ்ந்த மின்தடைக்கு காலத்துக்கொரு காரணம் சொல்வது அபத்தம்.

# உலகளாவிய ரீதியில் நண்பர்கள் உறவினர்களால் 51,100 பெண்கள் கொலை

## ஐ.நாவின் மகளிருக்கான அமைப்பின் ஆய்வில் தகவல்

உலகளாவிய ரீதியில் கடந்த 2023ஆம் ஆண்டு 51,100 பெண்கள் அவர்களின் நெருங்கிய நண்பர்கள் மற்றும் உறவினர்களால் கொலை செய்யப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் மகளிருக்கான அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் பிரகாரம் கொலைசெய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கையில் 55 சதவீதமான பெண்கள் குடும்ப அங்கத்தவர்களினாலும் 45 சதவீதமான பெண்கள் அவர்களின் நெருங்கிய நண்பர்களினாலும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கொலைசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஆபிரிக்கா வலயத்தில் 21,700 பெண்கள் கொலை செய்யப்பட்டுள்ளதுடன், இரண்டாவது இடத்தில் ஆசிய வலயம் இருக்கிறது. கடந்த 2023 ஆம் ஆண்டு ஆசிய வலயத்தில் மாத்திரம் 18,500 பெண்கள் பல்வேறு காரணங்களுக்காக நெருங்கிய நண்பர்களாலும் குடும்ப அங்கத்தவர்களாலும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், அமெரிக்க வலயத்தில் 8,300 பெண்களும் ஐரோப்பிய வலயத்தில் 2,300 பெண்களும் ஓசினியா வலயத்தில் 300 பேரும் கொலைசெய்யப்பட்டுள்ளனர்.

ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு ஆபிரிக்காவில் 2.9 வீத பெண்களும் ஆசிய வலயத்தில் 0.8 பெண்களும் அமெரிக்க வலயத்தில் 1.6 பெண்களும் ஐரோப்பிய வலயத்தில் 0.6 பெண்களும் ஓசியானியா வலயத்தில் 1.5 பெண்களும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 2023ஆம் ஆண்டின் நிறைவில் இலங்கையில் 1,925 பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பதிவாகியுள்ளதாக இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் சிறுவர் மற்றும் மகளிர் விவகார பணியகம் தெரிவித்துள்ளது. அதற்கமைய, 16 வயதுக்குக் குறைவான 291 சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதுடன், பாதிக்கப்பட்டவரின் சம்மதத்துடன் (16 வயதுக்குட்பட்ட பெண்கள்) 1,259 பெண்கள் பாலியல் துஷ்பிரயோகப்படுத்தப்பட்டுள்ளதுடன், பாதிக்கப்பட்டவரின் அனுமதியில்லாமல் 375 பாலியல் துஷ்பிரயோகங்களும் பதிவாகியுள்ளன.

2023 – 2024ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெண்களுக்கு எதிராக 691 குற்றங்கள் பதிவாகியுள்ளன. 2023ஆம் ஆண்டில் 105 கொலைச் சம்பவங்களும் 226 பாலியல் துஷ்பிரயோகங்களும் 37 கடுமையான பாலியல் துஷ்பிரயோகங்களும் பதிவாகியுள்ளன.

கடந்த வருடத்தில் 92 கொலைச் சம்பவங்களும் 195 பாலியல் துஷ்பிரயோகங்களும் 36 கடுமையான பாலியல் துஷ்பிரயோகங்களும் இடம்பெற்றுள்ளன.

# அதானி காற்றாலை திட்டத்தை சீனாவுக்கு கைமாற்றவில்லை

## அமைச்சர் சந்திரசேகரன் தகவல்

(பு.கஜிந்தன்)

அதானி நிறுவனத்தின் காற்றாலை திட்டத்தை மாற்றி சீனாவுக்கோ அல்லது வேறு நாடுகளுக்கோ வழங்கும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லையென கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

சீனாவுக்கோ அல்லது வேறு நாடுகளுக்கோ வழங்குவதற்காக அதானியின் திட்டத்தை நிறுத்துவதற்கு நாங்கள் முயற்சிக்கவில்லை.

அதானியின் திட்டத்தை இப்போதைக்கு சரி என ஏற்றால் சில காலங்களில் அந்த முடிவு தவறாக மாறக்கூடிய சூழ்நிலை ஏற்படும்.

குறித்த காற்றாலைத் திட்டத்தால் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் இலங்கை மின்சார சபைக்கும் பயன் கிட்டுமா என்பது தொடர்பில் பல விடயங்களை ஆராய வேண்டியிருந்ததே தவிர அவர்களை நிறுத்திக் கொண்டு வேறு யாருக்கும் வழங்கும் நோக்கம் இருக்கவில்லை.

நாங்கள் ஏன் அவருக்கு கொடுப்பதா, இவருக்கு கொடுத்தால் நலமா என பேசுவதிலும் பார்க்க எமது நாட்டில் உள்ள முதலீட்டாளர்களையும் புலம்பெயர் நாடுகளில் உள்ள முதலீட்டாளர்களையும் அழைத்து திட்டங்களை மேற்கொள்வதற்கு எண்ணி உள்ளோம். அதற்கான அழைப்பை ஜனாதிபதி விடுத்துள்ளார். ஆகவே காற்றாலைத் திட்டத்திலிருந்து அதானி விலகியதில் எவ்வித அரசியல் உள்நோக்கமும் கிடையாது என்றார்.


## Now you can subscribe to the below Newspapers mentioned Published by Liberty Publishers.

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Month | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Month | | 52 | 6760.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Month | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Month | | 52 | 9360.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address : - The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209



# கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ.

S&T/S SINCE 1892 — COMMERCIAL CREDIT

## மாபெரும் வாகன ஏல விற்பனை

## 2025 பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி புதன்கிழமை

தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கபிட்டிய, குருநாகல் எனும் முகவரியில் காலை 10.00 மணி முதல்

**முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் வண்டிகள் உட்பட டீசல் மற்றும் பெற்றோல் வாகனங்கள் சுமார் 155**

| | | | |
|---|---|---|---|
| **கார்** | | | |
| 16 | - 9XXX | NISSAN K10 MARCH | 1987 |
| 18 | - 1XXX | SUBARU JF1AC1HR0CB | 1992 |
| 17 | - 1XXX | SUZUKI SWIFT | 1990 |
| **வேன்** | | | |
| 52 | - 4XXX | ISUZU FARGO | 1986 |
| **லொறி மற்றும் மினி ட்ரக்** | | | |
| NC-LI | - 4XXX | FOTON BJ1036V3JB3R | 2007 |
| NP-DAC | - 5XXX | PIAGGIO APE TRUCK PLUS | 2012 |
| SG-PU | - 2XXX | PIAGGIO APE MINI | 2012 |
| WP-PV | - 8XXX | MAHINDRA MAXXIMO PLUS | 2013 |
| **டிராக்டர்** | | | |
| NC-RF | - 7XXX | POWER TRACK EURO 45 | 2018 |
| NW-RF | - 6XXX | MASSEY FERGUSON MF1552 | 2017 |
| **முச்சக்கரவண்டிகள்** | | | |
| WP-YD | - 7XXX | BAJAJ 4 STROKE | 2010 |
| NC-HE | - 1XXX | BAJAJ 2 STROKE | 2003 |
| SG-QA | - 4XXX | BAJAJ 2 STROKE | 2005 |
| UP-YV | - 7XXX | PIAGGIO APE | 2011 |
| SG-AAK | - 7XXX | PIAGGIO APE CITY | 2013 |
| SG-QO | - 5XXX | BAJAJ 4 STROKE | 2008 |
| WP-QP | - 0XXX | BAJAJ 4 STROKE | 2008 |
| CP-QU | - 1XXX | BAJAJ 4 STROKE | 2009 |
| WP-GH | - 5XXX | BAJAJ 2 STROKE | 2001 |
| WP-QD | - 8XXX | BAJAJ 2 STROKE | 2006 |
| CP-QL | - 7XXX | BAJAJ 4 STROKE | 2007 |
| NW-QJ | - 5XXX | BAJAJ 2 STROKE | 2006 |
| CP-GR | - 7XXX | BAJAJ 2 STROKE | 2002 |
| CP-YD | - 8XXX | BAJAJ 4 STROKE | 2010 |
| CP-QS | - 7XXX | BAJAJ 4 STROKE | 2009 |
| CP-QN | - 2XXX | BAJAJ 4 STROKE | 2008 |
| CP-QW | - 8XXX | BAJAJ 4 STROKE | 2010 |
| WP-AAC | - 7XXX | BAJAJ 4 STROKE | 2012 |
| WP-YM | - 1XXX | BAJAJ 4 STROKE | 2011 |
| WP-JR | - 3XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| CP-AAW | - 4XXX | BAJAJ 4 STROKE | 2015 |
| CP-QE | - 3XXX | BAJAJ 2 STROKE | 2006 |
| CP-ABA | - 4XXX | TVS KING | 2015 |
| CP-JY | - 1XXX | BAJAJ 2 STROKE | 2005 |
| CP-ABN | - 4XXX | BAJAJ 4 STROKE | 2016 |
| WP-QK | - 6XXX | BAJAJ 4 STROKE | 2007 |
| WP-JD | - 2XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| WP-AAM | - 5XXX | TVS KING | 2013 |
| UP-QW | - 8XXX | BAJAJ 4 STROKE | 2010 |
| WP-AAZ | - 3XXX | BAJAJ 4 STROKE | 2015 |
| UP-AAK | - 5XXX | TVS KING | 2013 |
| WP-HO | - 5XXX | BAJAJ 2 STROKE | 2003 |
| SP-AAA | - 8XXX | BAJAJ 4 STROKE | 2012 |
| CP-YO | - 9XXX | BAJAJ 4 STROKE | 2011 |
| WP-QV | - 2XXX | BAJAJ 4 STROKE | 2009 |
| WP-JK | - 7XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| CP-QS | - 5XXX | BAJAJ 4 STROKE | 2009 |
| CP-JO | - 2XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| EP-ABR | - 5XXX | BAJAJ 4 STROKE | 2018 |
| CP-QO | - 9XXX | BAJAJ 4 STROKE | 2008 |
| CP-QO | - 0XXX | BAJAJ 4 STROKE | 2008 |
| CP-QN | - 9XXX | BAJAJ 4 STROKE | 2008 |
| CP-QN | - 1XXX | BAJAJ 4 STROKE | 2007 |
| CP-QZ | - 3XXX | BAJAJ 4 STROKE | 2010 |
| CP-QR | - 9XXX | BAJAJ 4 STROKE | 2008 |
| CP-QX | - 8XXX | BAJAJ 4 STROKE | 2010 |
| CP-QD | - 2XXX | BAJAJ 2 STROKE | 2005 |
| WP-JF | - 8XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| SG-HX | - 9XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| WP-HI | - 9XXX | BAJAJ 2 STROKE | 2003 |
| **மோட்டார் சைக்கிள்** | | | |
| WP-VB | - 0XXX | BAJAJ PLATINA | 2009 |
| SP-UF | - 6XXX | BAJAJ PULSAR 200 DTSI | 2008 |
| SP-BAF | - 5XXX | BAJAJ DISCOVER 125 ST | 2013 |
| SP-BHH | - 5XXX | YAMAHA RAY ZR | 2018 |
| SP-BCG | - 9XXX | BAJAJ DISCOVER 125 M | 2014 |
| SG-BGL | - 9XXX | TVS WEGO | 2018 |
| WP-BHW | - 0XXX | APRILIA SR 150 | 2019 |
| EP-BJB | - 1XXX | HERO HUNK 200 R | 2019 |
| NC-BEY | - 7XXX | TVS METRO | 2017 |
| SG-BFD | - 1XXX | TVS APACHE RTR 160 | 2017 |
| SG-BAP | - 1XXX | HONDA DIO SCV 110 | 2013 |
| SG-XP | - 6XXX | BAJAJ PULSAR 135 LS | 2012 |
| SG-BEA | - 6XXX | TVS WEGO | 2016 |
| SG-BCX | - 3XXX | HERO GLAMOUR | 2015 |
| SG-WR | - 1XXX | BAJAJ PULSAR 135 LS | 2011 |

| | | | |
|---|---|---|---|
| **மோட்டார் சைக்கிள்** | | | |
| WP-BDN | - 3XXX | HONDA DIO SCV 110 | 2016 |
| WP-BEH | - 2XXX | HONDA DIO SCV 110 | 2016 |
| WP-BBF | - 1XXX | TVS APACHE RTR 150 | 2014 |
| WP-BFD | - 8XXX | HONDA DIO SCV 110 | 2017 |
| SP-BEY | - 9XXX | HERO PLEASURE | 2017 |
| SP-BJE | - 8XXX | TVS NTORQ | 2023 |
| EP-BGN | - 3XXX | YAMAHA FZ VER 2.0 | 2018 |
| EP-BHJ | - 5XXX | TVS NTORQ | 2019 |
| EP-BFG | - 6XXX | SUZUKI GIXXER SFGSX 150 | 2017 |
| EP-BCZ | - 8XXX | YAMAHA RAY Z | 2015 |
| WP-BHS | - 7XXX | HONDA CB 160 | 2018 |
| WP-BHH | - 8XXX | HERO MAESTRO EDGE | 2018 |
| EP-BAC | - 2XXX | HONDA TWISTER | 2012 |
| EP-BCE | - 6XXX | HONDA DIO SCV 110 | 2015 |
| NC-BJA | - 7XXX | APRILIA SR 125 | 2020 |
| SP-TR | - 2XXX | BAJAJ PULSAR 180 DTSI | 2007 |
| NC-BBG | - 8XXX | BAJAJ PULSAR 150CC | 2014 |
| SG-MQ | - 2XXX | BAJAJ PULSAR 150CC | 2005 |
| NC-BCQ | - 1XXX | YAMAHA RAY Z | 2015 |
| NC-WO | - 0XXX | BAJAJ DISCOVER 150DIS | 2011 |
| NC-BJF | - 6XXX | SENARO GN 125 | 2023 |
| NC-BJF | - 8XXX | SENARO GN 125 | 2023 |
| NC-BJI | - 3XXX | SENARO GN 125 | 2024 |
| WP-BID | - 4XXX | TVS APACHE 160 | 2019 |
| WP-BFP | - 5XXX | HERO MAESTRO EDGE | 2017 |
| EP-BFI | - 1XXX | HERO DASH VX | 2017 |
| CP-XI | - 1XXX | TVS APACHE 150 | 2011 |
| CP-BEC | - 4XXX | BAJAJ PULSAR 150CC | 2016 |
| WP-BJA | - 5XXX | APRILIA SR 125 | 2019 |
| EP-VG | - 9XXX | BAJAJ PULSAR 150CC | 2009 |
| CP-BCJ | - 5XXX | BAJAJ PLATINA | 2015 |
| NC-BJG | - 7XXX | RANOMOTO GN 125 | 2023 |
| WP-BIG | - 7XXX | YAMAHA RAY ZR | 2019 |
| NW-BEV | - 5XXX | HONDA DIO SCV 110 | 2017 |
| WP-BFF | - 0XXX | HONDA DIO SCV 110 | 2017 |
| WP-BDL | - 0XXX | BAJAJ PULSAR 150CC | 2015 |
| WP-BHV | - 3XXX | APRILIA SR 125 | 2018 |
| WP-BIQ | - 9XXX | RANOMOTO DREAM | 2018 |
| EP-BFP | - 3XXX | TVS METRO | 2016 |
| EP-BHM | - 6XXX | BAJAJ PULSAR 150CC | 2018 |
| EP-BGS | - 4XXX | HONDA DIO SCV 110 | 2018 |
| EP-BED | - 2XXX | HONDA DIO SCV 110 | 2016 |
| EP-BIH | - 9XXX | HONDA DIO SCV 110 | 2019 |
| EP-BBA | - 7XXX | BAJAJ PULSAR 200NS | 2014 |
| EP-BHU | - 7XXX | HERO MAESTRO EDGE | 2018 |
| EP-BJC | - 8XXX | RANOMOTO PATTAYA | 2022 |
| EP-BJE | - 4XXX | RANOMOTO C50 CUSTOM | 2022 |
| WP-BFD | - 4XXX | HERO HF DELUXE | 2016 |
| WP-BGU | - 4XXX | TVS WEGO | 2018 |
| CP-BCS | - 0XXX | HONDA DIO SCV 110 | 2015 |
| WP-BHG | - 5XXX | SUZUKI ACCESS 125 | 2017 |
| WP-BDC | - 4XXX | BAJAJ PULSAR 200NS | 2015 |
| EP-BGP | - 2XXX | HERO MAESTRO EDGE | 2018 |
| EP-BAZ | - 7XXX | TVS APACHE RTR 180 | 2014 |
| CP-BIK | - 2XXX | YAMAHA RAY ZR | 2019 |
| NW-BFY | - 8XXX | YAMAHA RAY ZR | 2017 |
| CP-XQ | - 6XXX | TVS JIVE | 2011 |
| CP-BCN | - 7XXX | BAJAJ DISCOVER 100 M | 2015 |
| CP-BFP | -7XXX | YAMAHA RAY ZR | 2017 |
| CP-BCY | - 9XXX | HONDA DIO SCV 110 | 2015 |
| WP-BGD | - 0XXX | BAJAJ V 15 | 2016 |
| WP-BEA | - 1XXX | HONDA DIO SCV 110 | 2016 |
| EP-BER | - 0XXX | BAJAJ PULSAR 135 LS | 2016 |
| EP-BEJ | - 9XXX | HERO DASH VX | 2016 |
| SG-BFY | - 9XXX | BAJAJ V 15 | 2016 |
| WP-BDW | - 2XXX | HONDA HORNET | 2016 |
| WP-BCH | - 8XXX | HONDA DIO SCV 110 | 2015 |
| SP-BHW | - 2XXX | YAMAHA RAY ZR | 2018 |
| CP-BHW | - 3XXX | YAMAHA RAY ZR | 2019 |
| NW-BII | - 3XXX | TVS XL 100 | 2019 |
| WP-BCH | - 1XXX | BAJAJ DISCOVER 150DIS | 2015 |
| CP-BGQ | - 5XXX | YAMAHA RAY ZR | 2018 |
| SP-BIZ | - 8XXX | APRILIA SR 125 | 2020 |
| WP-BGG | - 8XXX | HONDA DIO SCV 110 | 2018 |
| SG-BHR | - 6XXX | YAMAHA RAY ZR | 2019 |
| SG-BAI | - 7XXX | HONDA ACTIVA | 2013 |
| WP-BEU | - 8XXX | BAJAJ V 15 | 2016 |
| WP-BHP | - 5XXX | TVS NTORQ | 2019 |
| NW-BAZ | - 5XXX | BAJAJ PULSAR 180 DTSI | 2014 |
| NW-BGJ | - 6XXX | BAJAJ DISCOVER 125 | 2017 |

வாகன பரிசீலனை : பெப்ரவரி 16ஆம் திகதி முதல் பெப்ரவரி 18ஆம் திகதி வரை மு.ப 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை ஏலம் நடைபெறும் இடம் தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கபிட்டிய, குருநாகல். தொடர்புகளுக்கு : 0112 000 000

வாகன விற்பனைக்கான நிபந்தனைகள்

- உள்நுழைவு : ஒருவர் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ.1,500/- யும் மீளளிக்கப்படும் கட்டணமாக ரூ.10,000/- யும் வைப்புத்தொகையாக ஏலம் இடம்பெறும் தினத்தில் செலுத்த வேண்டும்.
- பணக் கொடுப்பனவு : மீளளிக்கப்படாத ஆரம்ப வைப்பு வாகன பெறுமதியிலிருந்து 25% ஆகும். ஏலம் நிச்சயிக்கப்பட்ட பின்னர் வாகனத்தை கொண்டு செல்வதற்கு 75% மீதிப்பணத்தை 2025 பெப்ரவரி மாதம் 20, 21 மற்றும் 22ஆம் திகதிகளில் பி.ப 4.00 மணி வரையில் கீழ்க்காணும் எமது வாகன வளாகத்தில் செலுத்த வேண்டும்.
- வாகன வளாகம் : கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ. தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கபிட்டிய, குருநாகல்.
- ஆவணங்களை பெற்றுக்கொள்ளக்கூடிய இடம் : கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் லிமிடெட். தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கபிட்டிய, குருநாகல்
- எவ்வித முன்னறிவித்தல்களுமின்றி எந்தவொரு வாகனத்தையும் ஏலத்திலிருந்து நீக்குவதற்கான உரிமை முகாமைத்துவத்திற்கு உண்டு.
- ஏலம் விற்பனையாளரின் முடிவே இறுதி முடிவாகும்.

www.sandslanka.com

## ஷொக்மன் மற்றும் சமரவிக்ரம

ஒரு நாடு - ஒரு ஏல விற்பனையாளர்

133 வருட சேவைக்காலத்தின் கொண்டாட்டம்

CELEBRATING 133 Years TRUSTED SERVICE EXCELLENCE

**பிரதான காரியாலயம்.** - 24, டொரின்டன் வீதி, கண்டி.
தொலைபேசி : 0812 227 593 பெக்ஸ் : 0812 224 371
மின்னஞ்சல் : schokmankandy@sltnet.lk

**நகர காரியாலயம்.** - 6A, பெயார்பீல்ட் கார்ட்ன்ஸ், கொழும்பு 08.
தொலைபேசி : 011 2 671 467, 2 671 468 பெக்ஸ் : 011 2 671 469
மின்னஞ்சல் : schokman@samera1892.com



# அதானி ஒப்பந்தம்- என்ன நடக்கிறது?

தொகுப்பு: நா.தினுஷா

As we bow out, we wish to reaffirm that we would always be available for Sri Lankan Government to have us undertake any development opportunity, if it ever considers Adani Group to participate.

**“வேலைத்திட்டத்திலிருந்து நாங்கள் நீங்கினாலும் அதானி குழுமத்தின் பங்கேற்பை எப்போதாவது இலங்கை அரசாங்கம் எதிர்பார்த்தால் ஏதாவதொரு வளர்ச்சி வாய்ப்பை இலங்கைக்கு பெற்றுக்கொடுக்க நாங்கள் எப்போதும் தயாராகவிருக்கிறோம் என்பதை மீண்டும் உறுதிப்படுத்திக்கொள்ள விரும்புகிறோம்” -அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம்-**

இந்திய கோடீஸ்வரர் கௌதம் அதானியால் நிறுவப்பட்ட அதானி கிரீன் எனர்ஜி நிறுவனத்தின் முதலீட்டில் இலங்கையில் மேற்கொள்ளப்படவிருந்த 100 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான காற்றாலை மின்னுற்பத்தி நிலைய வேலைத்திட்டம் மற்றும் மின் விநியோக வேலைத்திட்டத்திலிருந்து விலகுவதாக அந்த நிறுவனம் கடந்த வாரம் அறிவித்திருந்தது.

இவ்விரு வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் காலதாமதமடைந்து வந்தமையின் காரணமாக தமது நிறுவனம் இந்த வேலைத்திட்டத்திலிருந்து விலகுவதாக அறிவித்து வரையறுக்கப்பட்ட அதானி கிரீன் எனர்ஜி நிறுவனத்தின் செயலாளர் பிரக்னேஷ் தார்ஜினால் முதலீட்டுச் சபைத் தலைவர் அர்ஜுனா ஹேரத்துக்கு கடந்த 12ஆம் திகதி கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதானி கிரீன் எனர்ஜி நிறுவனத்தின் தீர்மானம் தொடர்பில் அதானி குழுமத்தால் கடந்த 13ஆம் திகதி ஊடக அறிக்கையொன்று வெளியிடப்பட்டதுடன், இலங்கை காற்றாலை மின்னுற்பத்தி நிலைய வேலைத்திட்டம் மற்றும் மின் விநியோக வேலைத்திட்டம் ஆகிய இரு திட்டங்களும் கௌரவத்துடன் விலகிக்கொள்ள அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம் தீர்மானித்துள்ளதாகவும் நிலைபேறான அபிவிருத்தியை நோக்கிய பயணத்தில் புதிய வேலைத்திட்டத்துக்காக அதானி நிறுவனத்தின் ஒத்துழைப்பைப் பரிசீலிக்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்தால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தயாராக இருப்பதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காற்றாலை மின் உற்பத்தி நிலைய யோசனை தொடர்பில் இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழுவுடன் பல்வேறு கட்டங்களில் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் இரு வருடங்களில் 14 சுற்றுப்பேச்சுவார்த்தைகளை நடத்தியதன் பின்னர் வேலைத்திட்டத்துக்கான அனுமதியையும் பல்வேறு அனுமதிப் பத்திரங்களையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்ததாகவும் அந்த நிறுவனத்தால் முதலீட்டுச் சபைக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த 14 சுற்றுப்பேச்சுவார்த்தைகளின் பின்னர் மின் கொள்வனவுக்கான ஒப்பந்தத்துக்கு 20 வருட காலத்துக்கான தொகைக்கு அதானி நிறுவனம் அனுமதி பெற்றுக்கொண்டிருந்ததாகவும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு பல்வேறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியதன் பின்னர் தேவையான சகலவித அனுமதிகளுடன், தேவையான அனுமதிப்பத்திரங்களையும் பெற்றுக்கொண்டுள்ள நிலையில், இந்த வேலைத்திட்டத்துக்காக யோசனை தொடர்பில் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இலங்கை அரசாங்கம் கலந்துரையாடல் குழு மற்றும் வேலைத்திட்டக் குழுவொன்றை நியமித்துள்ளமை தமது நிறுவனத்துக்கு அறியக் கிடைத்ததாகவும் அதானி நிறுவனம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறு வேலைத்திட்டத்துக்கான யோசனைகள் தொடர்பில் மீண்டும் கலந்துரையாடுவதற்கு இலங்கை அரசாங்கத்தால் இரு குழுக்களை நியமித்துள்ளதாக பணிப்பாளர் குழுவுக்கு அறிவித்துள்ளதாகவும் இலங்கையின் இறையாண்மை மற்றும் அதன் தீர்மானங்களுக்கும் மதிப்பளிக்கும் அதேவேளை, காற்றாலை மின்னுற்பத்தி வேலைத்திட்டத்திலிருந்து விலகுவதற்குப் பணிப்பாளர் குழாம் தீர்மானித்துள்ளதாகவும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

மின்னுற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கு அவசியமான சுற்றுச்சூழல் அனுமதி மற்றும் வேலைத்திட்டம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள உயர்நீதிமன்ற வழக்கு தவிர, தேவையான ஏனைய சகல அனுமதிகளும் தமது நிறுவனத்துக்குக் கிடைத்திருந்ததாக அந்த நிறுவனம் முதலீட்டுச் சபைக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக தேவையான இடம் உள்ளிட்ட நாட்டுக்குத் தேவையான விநியோக பரிமாற்றக் கட்டமைப்பொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான பணிகளையும் தற்போதைய நிலையில் தமது நிறுவனம் நிறைவுசெய்துள்ளதாகவும் அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம் அறிவித்துள்ளது. அதேபோன்று முந்தைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக தமது நிறுவனம் 50 இலட்சம் அமெரிக்க டொலரை செலவு செய்து நிறைவுசெய்துள்ளதாகவும் அந்த நிறுவனம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

காற்றாலை மின்னுற்பத்தி வேலைத்திட்டத்தினூடாக இலங்கையில் ஒட்டுமொத்தமாக ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு செய்யவிருந்ததாகவும் அதானி நிறுவனம் அறிவித்துள்ளது.




இதேவேளை, தனது நிறுவனத்தின் சமூக பொறுப்புக்கமைய முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் நடைமுறையிலிருக்கும் பிரதேசங்களில் சுகாதார, கல்வி, அடிப்படை வசதி மற்றும் திறன் அபிவிருத்தி போன்ற துறைசார் அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்குத் திட்டமிட்டிருந்ததாகவும் இதனூடாக இலங்கையின் குறித்த பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு நன்மை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருந்ததாகவும் அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம் அறிவித்துள்ளது.

இலங்கையில் நடைமுறைப்படுத்த திட்டமிட்டிருந்த இரு வேலைத்திட்டங் களிலிருந்து விலகுவதாக அதானி நிறுவனத்தின் தீர்மானத்தைத் தொடர்ந்து, அந்த நிறுவனத்தின் பங்குகள் கடந்த 13ஆம் திகதியாகும்போது நூற்றுக்கு மூன்று வீதத்தால் இந்திய ரூபா 946 வரையில் குறைவடைந்திருந்தது.

அதானி கிரீன் எனர்ஜி நிறுவனத்தின் காற்றாலை மின்னுற்பத்தி வேலைத் திட்டத்தில் தேசிய மின் கட்டமைப்புக்கு 484 மெகாவோட் மின்சாரத்தை இணைக்கக்கூடிய மன்னார் காற்றாலை மின்னுற்பத்தி நிலையங்கள் இரண்டும் அதனுடன் தொடர்புடைய மின் விநியோகக் கட்டமைப்பை உருவாக்கவும் திட்டமிடப்பட்டிருந்தது.

ஏனைய வேலைத்திட்டங்கள் இரண்டில் 220 கிலோவோட் மற்றும் 400 கிலோவோட் என்ற அடிப்படையில் விநியோக வலையமைப்பு விஸ்தரிப்பும் இடம்பெறவுள்ளது.

மன்னார் மற்றும் பூநகரி ஆகிய பிரதேசங்களில் காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தை அமைப்பதற்காக அதானி கிரீன் எனர்ஜி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ள கடந்த 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07ஆம் திகதி அனுமதி வழங்கியிருந்தது.

அந்தக் காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தில் உற்பத்தியாகும் மின்னை கொள்வனவு செய்யும் முறை தொடர்பில் யோசனை முன்வைத்து அதற்காக அதானி கிரீன் எனர்ஜி நிறுவனத்தால் முன்வைக்கப்பட்டுள்ள விலைமனு கோரலுக்கு 2024ஆம் ஆண்டு மே மாதம் 07ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது.

அதானி நிறுவனத்துக்குச் சொந்தமான மன்னார் மற்றும் பூநகரி ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்படவிருந்த காற்றாலை மின்னுற்பத்தி நிலையங்களில் உற்பத்தியாகும் மின்சாரத்தை 20 வருடங்களுக்காக இந்திய அதானி கிரீன் எனர்ஜி நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்வதற்கு கடந்த வருடம் மே மாதம் 07ஆம் திகதி அமைச்சரை அனுமதி வழங்கியிருந்தது. முன்னாள் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவால் அந்த அமைச்சரவைப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் உற்பத்தியாகும் மின்சாரத்துக்காக கிலோ வோட் - ஒரு மணிநேரத்துக்காக 8.26 அமெரிக்க டொலரை அறவிட இறுதி செய்யப்பட்ட தொகையாக விலைமனுக் கோரலில் யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

அதானி கிரீன் எனர்ஜி நிறுவனத்தின் விலைமனுக்கோரலுக்கு உள்நாட்டு சூழலியலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்டதுடன் மத்தியிலேயே அமைச்சரவையில் அனுமதியை பெற்றுக்கொடுக்கப்பட்டது. வருடாந்தம் இடம்பெயரும் மில்லியன் கணக்கான பறவைகள் இலங்கைக்கு வருவதாகவும் அந்தப் பறவைகள் இலங்கைக்கு வரும் பாதை மன்னாரை ஊடறுத்துச் செல்கினறது என்பதே சூழலியலாளர்களின் தர்க்கமாக இருக்கிறது. மன்னாரில் காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதனூடாக அந்தப் பறவைகளின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுமென்றும் சூழலியலாளர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த விடயங்களின் காரணமாக காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்கு அவசியமாக சுற்றாடல் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும்போது சிக்கலைச் சந்திக்க வேண்டிய நிலை அதானி நிறுவனத்துக்கு ஏற்பட்டது. அத்துடன், வெளிப்படைத்தன்மையிலுள்ள சிக்கல் நிலை, பொதுத் தகவல்களின் இரகசியத் தன்மை, பக்கச்சார்பான சுற்றுச்சூழல் அச்சுறுத்தல் உறுதிப்பாடு மற்றும் வேலைத்திட்டம் ஆகிய காரணங்களைக் குறிப்பிட்டு அதானி நிறுவனம் மன்னார் காற்றாலை மின்னுற்பத்தி நிலையம் தொடர்பில் அக்கறையுடன் செயற்படும். பிரபல்யமாக சூழலியலாளர்கள் மூவர் மற்றும் விசேட நிபுணர்கள் கடந்த வருடம் ஜூன் மாதம் 11ஆம் திகதி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்திருந்தார்கள்.

காற்றாலை மின்னுற்பத்தி நிலையம் தொடர்பான வேலைத்திட்டம் இவ்வாறு தொடர்ந்து காலதாமதமாகி வந்ததால் இந்திய அதானி நிறுவனத்தால் இலங்கையின் முன்னெடுக்கப்படவிருந்த வேலைத்திட்டம் தொடர்பில் பரிசீலனை செய்ய மீண்டும் குழு நியமிக்க தற்போதைய அரசாங்கத்தின் மின்சக்தி அமைச்சு அண்மையில் தீர்மானித்திருந்தது. அதற்கமைய, மன்னார் மற்றும் பூநகரி பிரதேசங்களில் நிர்மாணிக்கப்படவிருந்த உத்தேச காற்றாலை மின்னுற்பத்தி நிலையம் தொடர்பான யோசனை கடந்த ஜனவரி 06ஆம் திகதி பாராளுமன்றத்துக்கு முன்வைக்கப்பட்டது.

காற்றாலை மின்னுற்பத்தி நிலைய வேலைத்திட்டத்திலிருந்து அதானி நிறுவனத்தை நீக்கியதாக கடந்த மாதத்தின் இடைப்பகுதியில் ஊடக செய்திகளும் வெளியாகியிருந்ததுடன், அதுதொடர்பில் விளக்கமளித்த அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ, அதானி குழுமத்துடன் காற்றாலை மின்னுற்பத்திக்கான ஒப்பந்தத்தை இரத்துச்செய்வதற்கு அமைச்சரவைத் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லையெனத் தெரிவித்திருந்தார். இந்த வேலைத்திட்டம் தொடர்பில் மாத்திரம் மீண்டும் பரிசீலனை செய்வதற்கு அமைச்சரவைத் தீர்மானம் எடுத்திருப்பதாகவும் அதனூடாக ஒப்பந்தம் இரத்துச்செய்யப்பட மாட்டாது என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

“அதானி குழுமத்துடன் இதுவரையில் பூநகரி மற்றும் மன்னார் காற்றாலை மின்னுற்பத்தி நிலையங்கள் தொடர்பில் ஒப்பந்தமொன்று இருக்கிறது. தறபோதுவரையில் இதனுடன் தொடர்புடைய ஐந்து வழக்குகள் நீதிமன்ற விசாரணையில் இருக்கின்றன. அவற்றில் ஒரு வழக்கு மே மாதத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. அரசாங்கம் என்ற அடிப்படையில் அந்த ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்ய தீர்மானம் எடுத்தோம். அதற்காக தற்போது குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், பல்வேறு வழக்குகள் விசாரணை மட்டத்தில் இருப்பதன் காரணமாக வழக்கு விசாரணைகளின் நிறைவின்போதே அரசாங்கத்தால் தீர்மானம் எடுக்க முடியும்” என்று அவர் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

***“அரசாங்கம் மீண்டும் சோசலித்தை நோக்கிப் பயணிக்கிறதென்பது அதானி நிறுவனத்தின் தீர்மானத்தில் தெளிவாகத் தெரிகிறது. இதனூடாக மின்சார சபைக்கு இருந்த வாய்ப்பும் இல்லாமல் போயுள்ளதுடன், மின் கொள்வனவு தொடர்பில் அதானி நிறுவனத்துடன் பேச்சுவார்த்தையினூடாகத் தீர்வொன்றை பெற்றிருக்க முடியுமென்று” ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.***

**இதுதொடர்பில் அவர் மேலும், “அதானி நிறுவனம் முதலீட்டிலிருந்து விலகியுள்ளது. அவுஸ்திரேலிய முதலீட்டாளர்கள் கடந்த வாரம் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளார்கள். எதிர்வரும் வாரத்தில் அமெரிக்க முதலீட்டாளர்களும் நாட்டுக்கு வரவுள்ளார்கள். அதற்கு என்னவாகுமென்றும் தெரியவில்லை.**

**சகல நிறுவனங்களினதும் நூறு சதவீத உரிமையை அரசாங்கத்துக்கு உரித்தாக்கும் வகையில் மின்சார சட்டத்தைத் திருத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அரசாங்கத்துக்கு உரித்தாக தற்போது இயங்கிவரும் சகல மின்னுற்பத்தி நிலையங்களையும் அரசாங்கத்தின் உடைமையில் வைத்துக்கொண்டு ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் அவற்றில் ஏதாவதொரு பகுதியை பங்குச்சந்தையில் வைக்க முடியும்.**

**அடுத்தது மின் விநியோக வலையமைப்பும் அரசாங்கத்துக்குச் சொந்தமானதாகவே இருக்கிறது. தனியார் துறையினர் விரும்பினால் விநியோக வலையமைப்பில் முதலீடு செய்ய முடியும். விநியோகத்தைப் பொறுத்தவரையில் எமது நாட்டில் மின்சார சபையுடன் லெகோ நிறுவனமும் இயங்கி வருகிறது. எனவே, புதிய சட்டத்தின் பிரகாரம் லெகோ போன்ற புதிய நிறுவனங்களும் எதிர்காலத்தில் உருவாவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. மின்னுற்பத்தியிலும் விநியோகத்திலும் போட்டித்தன்மையை உருவாக்கவே முயற்சிகள் கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ளன.**

**ஆனால், அரசாங்கத்தின் யோசனையின் பிரகாரம் சகல நிறுவனங்களும் நூறு சதவீதம் அரசாங்கத்துக்குச் சொந்தமானதாகவே இருக்க வேண்டும். இவ்வாறு ஒட்டுமொத்த செயற்பாடுகளையும் மின்சார சபையால் செய்ய முயற்சிக்கிறார்கள் என்றால், மின்சார சபைக்குக் கிடைக்கும் இலாபத்தை முதலீடு செய்யவேண்டும். அவ்வாறு முதலீடு செய்தால் மின் கட்டணத்தையும் குறைக்க முடியாது, நிவாரணத்தையும் வழங்க முடியாது, சர்வதேச சந்தை முதலீட்டாளர்களுடன் எமது தொழிற்றுறைசார்ந்தோரால் போட்டியிடவும் முடியாது.**

**மின்சார சபையை மறுசீரமைப்புச் செய்வதாக ஒப்புகொண்டமையின் காரணமாகவே உலக வங்கியின் நிதியுதவியும் கிடைத்தது. இவ்வாறான பின்னணியில் மறுசீரமைப்புப் பணிகளை மறுபக்கம் திருப்புகிறார்களென்றால் கிடைக்கவிருக்கும் வருவாயும் கிடைக்காது.**

**அரசாங்கம் மீண்டும் சோசலித்தை நோக்கி பயணிக்கிறது என்பது அதானி நிறுவனத்தின் தீர்மானத்தில் தெளிவாகத் தெரிகிறது. இதனூடாக மின்சார சபைக்கிருந்த வாய்ப்பையும் இல்லாமலாக்கிக்கொண்டுள்ளார்கள். அதானி நிறுவனத்திடமிருந்து 8 சத டொலருக்கு மின் கொள்வனவு செய்யும் ஒப்பந்தத்துக்கு நாங்களும் விரும்பவில்லை. ஆனால், பேச்சுவார்த்தையினூடாக இந்தச் சிக்கலை சரிசெய்திருக்க முடியும். அரசாங்கத்தின் இயலாமையும் அரசாங்கத்தால் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் கலந்துரையாடி பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியாதென்பதும் தெளிவாகத் தெரிகிறது. குழப்பத்திலிருந்து இன்னுமொரு குழப்பத்துக்குச் சென்றுள்ளனர்” என்று குறிப்பிட்டுள்ளார்.**





# ஹக்கீமின் தனிநபர் பிரேரணையால் பாராளுமன்றத்தில் சூடு பிடித்த ஜனாஸா எரிப்பு விவகாரம்





கொவிட்-19 வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்களை நல்லடக்கம் செய்வதற்கான இயலுமை உள்ளதென உலக சுகாதார ஸ்தாபனம் அறிவுறுத்தல்களை வழங்கியிருந்த நிலையில், மேற்படி சடலங்களை நல்லடக்கம் செய்வதால் நிலக்கீழ் நீரில் வைரஸ் கலப்பதற்கான அபாய நிலை உள்ளதாகக் கூறி கடந்த அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட கொள்கையளவிலான தீர்மானத்தின்படி செயற்பட்டமையும் அந்தச் சடலங்களை உறவினர்களின் உடன்பாடின்றி தகனம் செய்தமையும் பின்னர் அவ்வாறு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் செயற்பட்டமை சரியானதல்ல, தவறு என்று தெரிவித்து அரசாங்கமே உத்தியோகபூர்வமாக மன்னிப்புக் கோரியிருந்தமையும் இந்தத் தொற்றால் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு தமது சமய ரீதியான இறுதிக் கிரியைகளை மேற்கொள்வதற்கோ அல்லது குறித்த சடலங்களைப் பார்வையிடுவதற்கோ சந்தர்ப்பம் வழங்கப்படாமையும் இது குறித்து உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் எழுந்த எதிர்ப்புகள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக தகனம் செய்வதற்குப் பதிலாக ஓட்டமாவடியில் மஜ்மா நகர் எனப்படும் தனிமையான பிரதேசத்தில் மேற்படி சடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட போதிலும், குடும்ப உறவினர்கள் இறுதிக் கடமைகளைச் செய்வதற்கோ மரியாதை செலுத்துவதற்கோ உரிமை மறுக்கப்பட்டமை தொடர்பிலும் இந்த விவகாரத்தில் அரசாங்கம் பாரதூரமான தவறுகளைப் புரிந்துள்ளமையாலும் குறிப்பிட்ட விடயங்களை உரிய முறையில் விசாரணை செய்து பொருத்தமான விதந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை நியமிக்கும்படியாக இந்தப் பிரேரணையை முன்வைத்துள்ளேன்.

அரசாங்கம் முஸ்லிம்கள் உட்பட கொவிட்-19 வைரஸ் தொற்றால் இறந்தவர்கள் அனைவரது சடலங்களையும் தகனம் செய்ய வேண்டும் எனப் பலவந்தமாகத் தீர்மானம் எடுத்திருந்தது. அதற்கு நாடளாவிய ரீதியில் பாரிய எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில், இலங்கையிலுள்ள அரபு நாடுகளின் தூதுவர்கள் வெளிவிவகார அமைச்சினூடாக அப்போதைய ஜனாதிபதியிடம் அதனை நிறுத்துமாறும் நல்லடக்கம் செய்ய இடமளிக்குமாறும் கோரிக்கை விடுத்திருந்தபோதிலும் கூட, அதனை அரசாங்கம் புறக்கணித்துவிட்டது. அத்துடன், அப்போதைய ஜனாதிபதி இலங்கையில் மரணிக்கும் கொவிட்-19 தொற்றாளர்களின் ஜனாஸாக்களை மாலைதீவுக்குக் கொண்டுசென்று அடக்கம் செய்வதற்கு அந்நாட்டு ஜனாதிபதியிடம் வெட்கக்கேடாக கோரிக்கையும் விடுத்திருந்தார்.

ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழு அமர்வுகளின் போது இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட குற்றப் பிரேரணை, 23 மார்ச் 2021 உறுப்புரை 8இல் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, மேற்படி ஆணைக்குழு இலங்கையில் கொவிட்-19 வைரஸ் தொற்றுக் காரணமாக மரணமடைந்தவர்களின் சடலங்களை நல்லடக்கம் செய்யும் விடயத்தில் தற்பொழுது நாட்டில் முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான அநீதிகளோடு, முஸ்லிம்களை மேலும் துருவப்படுத்தி முஸ்லிம்களையும் ஏனைய சமூகத்தவர்களையும் நல்லடக்கம் செய்வதற்கான உரிமையை மறுத்து, சமச்சீரற்ற முறையில் வேதனையையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளதை அவதானித்துள்ளது. உறுப்புரை 9இல் , அதைப் பற்றி சரியான, பக்கச்சார்பற்ற, முறையான விசாரணையொன்றை நடத்தி அவ்வாறு மனித உரிமைக்கு எதிராக செயற்படுபவருக்கு சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஆணைக்குழு வலியுறுத்துகின்றது.

ஜெனிவாவைத் தளமாகக்கொண்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மீண்டும் 10 ஒக்டோபர் 2022இல் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில் 11ஆவது உறுப்புரையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது; முஸ்லிம்களை துருவப்படுத்தி முஸ்லிம்களுக்கும் ஏனைய சமயத்தினருக்குமுள்ள இறந்தவர்களின் உடல்களை நல்லடக்கம் செய்வதற்கான உரிமை உட்பட ஏனைய உரிமைகளை சரியாகவும் உரிய முறையிலும் பக்கச்சார்பற்ற முறையிலும் கையாளுவதற்கு இடமளிக்குமாறு பிரஸ்தாப ஆணைக்குழு வலியுறுத்துவதோடு, அதனை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் வற்புறுத்துகின்றது எனக் காணப்படுகிறது.

அதன்போது பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரும் பிரதிநிதிகளும் உள்வாங்கப்பட்டு அவ்வாறான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்திருக்கிறது.

இவற்றை மனதிற்கொண்டு சுகாதார அமைச்சர் அவர்களே, நான் பல கேள்விகளைத் தொடுத்திருந்தேன்.

(தொடர்ச்சி 08ஆம் பக்கம்)

## 3ஆம் பக்கத் தொடர்ச்சி...

அந்த காணியின் பெயர் உளுத்தன்கலட்டி என்றபோதும் அந்த வெளிப்படுத்தல் உறுதியில் சிங்கள கலட்டி என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த விகாரையை 1980களின் நடுப்பகுதியில் புளொட் இயக்கத்தினர் உடைத்தனர். அதன்பின் அந்தக் காணியிலும் மக்கள் குடியிருந்தனர். இதன்பின்னர் 1990களில் இடப்பெயர்வுடன் அனைத்து மக்களும் பிரதேசத்தை விட்டு வெளியேறினர்.

யுத்தத்தின் பின் மக்கள் மீளக் குடியமர்ந்தபோது, முன்னர் விகாரையிருந்த காணியிலும் மக்கள் குடியிருந்தனர். அந்தக் குடும்பத்துக்கும் குழாய்க்கிணறும் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தது.

எனினும், அது தமது காணியென பிக்குகள் உரிமை கோரியதையடுத்து, மாவட்ட செயலகத்தால் அந்தக் காணியிலிருந்தவர்கள் வெளியேற்றப்பட்டு, பிக்குகளிடம் காணி வழங்கப்பட்டது.

அந்தக் காணியிலேயே விகாரைக்கான அடிக்கல் நாட்டப்பட்டாலும், அதற்கு அண்மையாக உள்ள தனியார் காணிகளிலேயே தற்போது விகாரை அமைக்கப்பட்டுள்ளது. அடிக்கல் நாட்டிய காணி- சிங்களவர் வெளிப்படுத்தல் உறுதி முடித்த காணி- இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. அதற்கு அடுத்ததாக உள்ள காணியிலேயே விகாரை கட்டப்பட்டுள்ளது.

அடிக்கல் நாட்டப்பட்ட இடத்தில் விகாரை கட்டப்படாமல், தமிழர்களின் காணிகளை அடாத்தாக பிடித்து விகாரை கட்டப்பட்டது ஏன் என்பது தெரியவில்லை. தற்போது விகாரை கட்டப்பட்ட இடத்தில் சிறியளவான அரசமரமொன்று உள்ளது. அதனால் அந்த இடத்தைத் தெரிவுசெய்திருக்கக்கூடும்.

### வலி. வடக்கு பிரதேச சபையின் மெத்தனம்

2019 ஜூலை 15ஆம் திகதி அப்போதைய வலி. வடக்கு பிரதேச சபையின் உறுப்பினரான எஸ்.சஜீவன், அப்போதைய தவிசாளர் சோ.சுகிர்தனுக்கும், சபையின் செயலாளருக்கும் கடிதம் அனுப்பியிருந்தார்.

அந்தக் கடிதத்தில், தையிட்டியில் பொதுமக்களின் காணிக்குள் அனுமதியற்ற விதத்தில் பௌத்த விகாரை கட்டப்பட்டுள்ளது. இதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுங்கள் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த அபாய எச்சரிக்கையின் பரிமாணத்தை அப்போதைய தவிசாளர் சோ.சுகிர்தன் புரிந்து கொள்ளவில்லை அல்லது பொறுப்புணர்வின்றி செயற்பட்டார் எனக் கருதத்தக்க சம்பவங்களே அதன்பின்னர் நடந்துள்ளன.

அவரது பொறுப்புணர்வின்மை, சுலபமாக தடுத்திருக்கக்கூடிய விகாரை இன்று விஸ்பரூபம் எடுத்துள்ளது.

விகாரை தொடர்பில் தவறான கருத்துகளைக் குறிப்பிட்டும், எந்த நடவடிக்கையும் எடுக்காமலும் அவர் செயற்பட்டதால், விகாரை அமைப்பவர்களுக்கு எந்த நெருக்கடியுமின்றி செயற்படும் வாய்ப்பு ஏற்பட்டது.

படைத்தரப்பு, ஆட்சியாளர்களின் கோபத்தை சம்பாதிக்கக் கூடாது என்பதாலா அல்லது அதன் தாற்பரியம் புரியாமலா அல்லது வேறு ஏதேனும் காரணங்களினாலா அவர் அப்படி செயற்பட்டார் என்பது தெரியவில்லை.

என்றாலும், வலி. வடக்கு தவிசாளர் அவ்வளவு அரசியல் பொறுப்புணர்வுமிக்கவராக இருந்திருக்கவில்லை. வலி. வடக்கு பிரதேச சபையின் பெரும்பாலான உறுப்பினர்களும் ஓர் அளவுக்கு மீறி இதில் அக்கறை செலுத்தவில்லையென்பதே உண்மை.

தையிட்டி விகாரை தொடர்பில் வலி. வடக்கு பிரதேச சபையில் பல தடவைகள் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அப்போதெல்லாம் தவிசாளர் சாக்குபோக்கும், தவறான தகவல்களைக் குறிப்பிட்டும் சபையை சமாளித்துள்ளாரென கூட்ட அறிக்கைகளை அவதானிக்கையில் புலப்படுகிறது.



சபையில் இந்த விவகாரம் குறித்து எஸ்.சஜீவன் ஒரு தடவை பிரஸ்தாபித்தபோது, அது உங்களது வட்டாரமல்ல, பிறகெதற்கு பிரச்சினைப்படுகிறீர்கள் என்ற சாரப்பட பதில் கேள்வியெழுப்பியிருந்தார். விகாரை அமைக்கப்பட்டுள்ள வட்டார உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியை சேர்ந்தவர்தான்.

2022 பெப்ரவரி காலப்பகுதியில் எஸ்.சஜீவன் சபை அமர்வு ஒன்றின்போது, அனுமதியின்றி அமைக்கப்படும் விகாரைப் பணிகளை இடைநிறுத்தும்படி கடிதம் அனுப்புமாறு பிரதேச சபை உறுப்பினர் எஸ்.சஜீவன் கேட்டுக் கொண்டார்.


இதன்போது, தவிசாளர் தவறான தகவலொன்றை சபையில் குறிப்பிட்டு, இந்த விவகாரத்தை மேலெழ விடாமல் தடுத்துள்ளார். நகர அபிவிருத்தி அதிகாரசபையில் அனுமதிபெற்று விகாரை அமைக்கப்படுகிறதென தவிசாளர் குறிப்பிட்டார். இது தொடர்பாக பிரதேச சபையில் பேணப்படும். கூட்ட குறிப்புகளை தமிழ்பக்கம் பெற்றது.

இந்த விடயம் தொடர்பாக, மாவை சேனாதிராசாவின் மகன் சே.கலையமுதன் ஒருமுறை கேள்வியெழுப்பியபோது, விகாரை அமைந்துள்ள பகுதி உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ளதால் தம்மால் நடவடிக்கையெடுக்க முடியாது எனவும் குறிப்பிட்டார். இதன்போதும் காணி உரிமையாளரைக் கண்டுபிடிக்க முடியவில்லையெனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மற்றொரு உறுப்பினரான கைலைவாசன் சீதாராமன், பொதுநலன் வழக்கு தொடரலாமா என்றும் யோசனை தெரிவித்தார்.

இவை எதற்கும் தவிசாளர் உடன்படவில்லை.

மிகச் சாதாரணமாக மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்திருந்தாலே விகாரை அமைக்கப்படுவது இடைநிறுத்தப்பட்டிருக்கும்.



கேள்வியெழுப்பியபோது, நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதியுடன் அந்த விகாரை கட்டப்படுகிறதென பதிலளித்துள்ளார்.

இதையடுத்து, உறுப்பினர் எஸ்.சஜீவன் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் 2022 ஜூலையில், நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் விகாரையின் அனுமதி தொடர்பில் தகவல் கோரினார். அதற்கு வழங்கப்பட்ட பதிலில், குறிப்பிட்ட விகாரைக்கு தாம் அனுமதியளிக்கவில்லையென குறிப்பிடப்பட்டுள்ளது.

இதையடுத்து, வலி. வடக்கு பிரதேச சபையில் 2022 ஜூலை மாதத்தில் தீர்மானமொன்று எடுக்கப்பட்டுள்ளது. சட்டவிரோத கட்டுமானத்தை நிறுத்த சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அறிவிப்பதென தீர்மானிக்கப்பட்டதற்கிணங்க, 2022 ஓகஸ்ட் மாதத்தில் அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி செயலாளர் ஆகியோருக்கு இந்தத் தீர்மானம் அனுப்பி வைக்கப்பட்டது.


### காணி உரிமையாளர்களும் பின்னடிப்பும்

இந்த சமயத்தில், தீர்மானத்தை அனுப்பி வைக்க தவிசாளர் தயங்கியதாகவும் "பயமின்றி அனுப்புங்கள். பயமாக இருந்தால் சபையின் தீர்மானத்தை தெரியப்படுத்துகிறேன் என அனுப்புங்கள்" என தவிசாளரிடம் குறிப்பிட்டதாகவும் வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் சிலர் குறிப்பிட்டனர்.

அதன்படியே கடிதம் அனுப்பப்பட்டது. அந்தக் கடிதத்தை புத்தசாசன அமைச்சுக்கு ஜனாதிபதி செயலகம் அனுப்பி, புத்த சாசன அமைச்சு பதிலும் அனுப்பியிருந்தது. தற்போதைய நீதிச்சட்டமுறைக்கமைய நடவடிக்கையெடுக்கும்படி அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், வலி. வடக்கு பிரதேச சபை எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை.

முன்னதாக, இந்த விவகாரத்தின் தற்போதைய நிலை பற்றி உறுப்பினர் சஜீவன் ஒருமுறை கேள்வியெழுப்பியபோது, காணி உரிமையாளர்களை கண்டுபிடிக்க முடியாது என்ற பொருள்பட தவிசாளர் பதிலளித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து, உறுப்பினர் சஜீவன் தனியாளாக முயற்சியெடுத்து, குறிப்பிட்ட காணிகளின் உரிமையாளர்களை கண்டறிந்துள்ளார். காணி உரிமையாளரான பெண்ணொருவர் சுவிஸிலும் மற்றும் இருவர் கொக்குவிலிலும் மற்றொருவர் வவுனியாவிலும் வதிவது கண்டறியப்பட்டது. எனினும், அவர்கள் யாரும் சட்ட நடவடிக்கைக்கு செல்லத் தயாராக இருக்கவில்லையென சஜீவன் குறிப்பிடுகிறார்.



காணி உரிமையாளர்களைக் கண்டுபிடிக்க முடியாதென வலி. வடக்கு தவிசாளர் அப்போது கூறியிருந்தாலும், தற்போது புதிய தகவல் வெளியாகியுள்ளது. 2023இல் போராட்டம் நடக்குமிடத்துக்கு வந்த பெண்மணியொருவர், தான் 3 வருடங்களின் முன்னரே காணி உறுதியை வலி. வடக்கு தவிசாளரிடம் கொடுத்ததாக தெரிவித்தார்.

இதுதான் தையிட்டி திஸ்ஸ ரஜமஹா விகாரையின் பின்னணி தகவல்.

### வாய்ப்பேச்சு வீரர்கள்

தையிட்டி விகாரை கடந்த நல்லாட்சி காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டப்பட ஆரம்பிக்கப்பட்டது. அப்போதே சர்ச்சைகள் ஆரம்பித்தன. ஆனாலும், மைத்ரி-ரணில் அரசுடன் தேனிலவு கொண்டாடிக்கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தேனிலவு கசந்து விடக்கூடாதென அதைப்பற்றி மூச்சும் காட்டாமல் இருந்தனர். அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாராவது ஒரு எம்.பி. அக்கறையெடுத்து இந்த விவகாரத்தை பேசுபொருளாக்கியிருந்தால், விகாரை கட்டப்படுவதைத் தடுத்திருக்கலாம்.

சட்டவிரோத விகாரை இடிக்கப்பட வேண்டுமென மீசையை முறுக்கும் சி.சிறீதரன், செல்வம் அடைக்கலநாதன் போன்றவர்கள் அப்போது தேனிலவு கொண்டாடிய எம்.பிக்களில் அடக்கம். அவர்கள் மூச்சுக்கூட விடவில்லை. இப்பொழுது விகாரையை இடிக்க வேண்டுமென்கிறார்கள். சட்டவிரோத விகாரை அகற்றப்படத்தான் வேண்டும். அதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால், தமிழ் மக்களை ஏமாற்றி அரசியல் செய்யலாமென நினைக்கும் நமது எம்.பிக்களின் கபடத்தனத்தையும் இந்த இடத்தில் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த விவகாரத்தில்- வலி. வடக்கு தவிசாளர், சபையின் உறுப்பினர்கள் மீது முதலாவது விரலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது அடுத்த விரலும் நீட்டப்பட்டாலும், அடுத்தடுத்து, தமிழ்ச் சமூகத்தின் அனைத்து தரப்பின் மீதும் விரல் நீட்டப்பட வேண்டும். ஏனெனில், விகாரைக்கான பணிகள் எல்லாம் பகிரங்கமாகவே நடந்தது. அப்போது நீதிமன்றத்தை நாடியிருக்கலாம். சட்டப்புலமை மூலம் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க பிறந்த மகா ஆளுமை என ஆதரவாளர்கள் வழிபடும் சுமந்திரனும் கப்சிப். அவர், அரசை கோபப்படுத்தும், சங்கடப்படுத்தும் விவகாரங்களில் வழக்குக்கு செல்ல மாட்டார். மேலோட்டமான சாதாரண விவகாரங்களுக்கே வழக்குக்கு செல்வார் என்ற விமர்சனத்தையும் இதனுடன் பொருத்திப் பார்க்க வேண்டியுள்ளது.

உண்மையில், தையிட்டி விகாரை தமிழ்ச் சமூகத்தின் கூட்டுத் தவறு. இதைப் புரிந்துகொண்டு அதிக குற்றவாளி யார் என்ற வழக்காடு மன்றங்களைத் தவிர்த்து, இனியாவது எப்படி ஒருமித்து, விழிப்புடன் செயற்படுவதென்ற பொறிமுறையை கண்டடைய வேண்டும்.

**நன்றி - தமிழ் பக்கம்**

# மோடி - ட்ரம்ப் சந்திப்பு:

# விவாதிக்கப்பட்ட விடயங்கள் என்ன?

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை வெள்ளை மாளிகையில் பெப்ரவரி 13ஆம் திகதியன்று சந்தித்தார். இந்தச் சந்திப்பில் இரு நாட்டு வர்த்தகம் மற்றும் பல்வேறு விடயங்கள் பற்றி விவாதிக்கப் பட்டது.

பிரதமர் மோடி அமெரிக்காவுக்கு இரு நாட்கள் அரசுமுறை பயணமாக சென்றுள்ளார். புதன்கிழமை அமெரிக்கா சென்ற பிரதமர் மோடி, முன்னதாக அமெரிக்க உளவுத்துறை தலைவர் துளசி கப்பார்ட்-ஐ சந்தித்தார். இந்நிலையில், வியாழக்கிழமை, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பை வெள்ளை மாளிகையில் சந்தித்தார். இந்தச் சந்திப்பில் பல்வேறு விடயங்கள் விவாதிக்கப்பட்டன.

இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக பற்றாக்குறையைக் குறைக்க, அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு அதிக எண்ணெய் மற்றும் எரிவாயுவை இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்தத்தை ட்ரம்ப் அறிவித்தார்.

மேலும், இந்தியா - அமெரிக்கா இடையே ஒரு புதிய பரஸ்பர வரித் திட்டத்தை ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்தார். "எங்கள் கூட்டாளிகள் எங்கள் எதிரிகளை விட மோசமானவர்கள்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவில் சட்ட விரோதமாக வசிக்கும் இந்தியர்கள் நாடு கடத்தப்படுவது குறித்தும் பிரதமர் மோடி பேசினார்.

மேலும், அதானி நிறுவனம் மீது அமெரிக்காவில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு குறித்தும் மோடி பதிலளித்தார்.

ஜனாதிபதியாக பொறுப்பேற்றதிலிருந்து பல்வேறு நாடுகளின் மீது ட்ரம்ப் வரி விதிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வரும் வேளையில், இந்தியப் பிரதமர் மோடியுடன் ட்ரம்ப் தற்போது பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்புக்குப் பிறகு இரு நாட்டு தலைவர்களும் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அதில் பேசிய பிரதமர் மோடி, ஜனாதிபதி ட்ரம்ப்பின் முழக்கமான MAGA (make America great again - அமெரிக்காவை மீண்டும் சிறந்த நாடாக்குவது) என்பதை மீண்டும் மீண்டும் மேற்கோள் காட்டினார்.

தொடர்ந்து பேசிய அவர், "இந்தியாவையும் அதேபோல மீண்டும் சிறந்த நாடாக்க வேண்டும் (MIGA-Make India Great Again). இந்த இரண்டு சிந்தனைகளும் ஒன்றுசேரும்போது அது இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய இரு ஜனநாயக நாடுகளும் செழிப்பான வளர்ச்சிக்கான மெகா (MEGA) கூட்டாண்மையை உருவாக்கும்" என்று குறிப்பிட்டார்.

"இந்தியா எங்களிடமிருந்து எந்தளவுக்கு வரி வசூலிக்கிறதோ அதே அளவில்தான் நாங்களும் அந்நாட்டிடமிருந்து வசூலிப்போம்" என்று ட்ரம்ப் தெரிவித்தார்.

2008 மும்பை பயங்கரவாதத் தாக்குதலுக்குத் திட்டம் தீட்டியதாக குற்றஞ்சாட்டப்படும் ஒருவரை ஒப்படைக்க அனுமதித்ததற்கு நரேந்திர மோடி அமெரிக்காவுக்கு நன்றி தெரிவித்தார். மேலும், அமெரிக்காவில் சட்டவிரோதமாக வசிக்கும் குடியேறிய இந்தியர்களை திரும்பப் பெற நாங்கள் தயாராக இருக்கிறோம் என்றும் மோடி தெரிவித்தார்.



ரஷ்ய ஜனாதிபதி புட்டினுடனான தனது அழைப்பின் கூடுதல் விவரங்களையும் ட்ரம்ப் பகிர்ந்து கொண்டார். உக்ரைனில் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தைகள் எவ்வாறு மேற்கொள்ளப்படும் என்பது பற்றியும் ட்ரம்ப் குறிப்பிட்டார்.

### நாடு கடத்தப்படும் இந்தியர்கள்

அமெரிக்காவில் சட்டவிரோதமாக வசிக்கும் இந்தியர்களைத் திரும்பப் பெறுவது குறித்தும் பிரதமர் மோடி செய்தியாளர் சந்திப்பில் பேசினார்.

"அமெரிக்காவில் சட்டவிரோதமாக எந்தவொரு இந்தியரும் வசிப்பது நிரூபணமானால், அவர்களை இந்தியாவுக்கு அழைத்துச் செல்ல தயாராகவிருக்கிறோம்" என அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவில் குடியேறியவர்களுள் (இந்தியர்கள்) சிலர் மனிதக் கடத்தலில் ஈடுபடுபவர்களால் அழைத்துவரப்பட்டதாகவும் தாங்கள் அமெரிக்காவுக்கு அழைத்து வரப்பட்டதுகூட அவர்களுக்குத் தெரியாது என்றும் மோடி கூறினார்.

"இவர்கள் மிகவும் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள், பெரிய கனவுகள், பெரிய வாக்குறுதிகள் அளிக்கப்பட்டு அழைத்து வரப்பட்டுள்ளனர்."

அமெரிக்காவுக்குள் சட்ட விரோதமாக நுழைவதற்கு "ஏமாற்றப்படும்" இளைஞர்களைப் பாதுகாக்க மனிதக் கடத்தலைத் தடுக்கவேண்டிய அவசியம் உள்ளது என்றும் அவர் கூறினார்.

ட்ரம்ப் மீண்டும் ஜனாதிபதியானது முதல், ஆவணங்களின்றி அமெரிக்காவில் வசித்து வந்த இந்தியர்கள் பலர் இராணுவ விமானத்தில் இந்தியாவுக்குத் திருப்பியனுப்பப்பட்டனர்.

இந்தியாவுக்கு திருப்பியனுப்பப்படும் நடவடிக்கையின்போது எந்தவொரு இந்தியரும் தவறாக நடத்தப்படாததை உறுதி செய்வதாக, இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.

### எரிவாயு ஒப்பந்தம்

அமெரிக்காவிடமிருந்து கூடுதலாக எண்ணெய் மற்றும் எரிவாயுவை இந்தியா இறக்குமதி செய்வது தொடர்பான ஒப்பந்தத்தையும் இந்தச் சந்திப்பின்போது ட்ரம்ப் அறிவித்தார்.

"அவர்கள் (இந்தியா) நம்மிடமிருந்து அதிகமாக எண்ணெய் மற்றும் எரிவாயுவை வாங்கவுள்ளது. அவை, அவர்களுக்குத் தேவையாகவுள்ளன. நம்மிடம் அவை அதிகமாகவுள்ளன" என ட்ரம்ப் தெரிவித்தார்.

"இந்தியாவின் எரிவாயு பாதுகாப்பை உறுதிசெய்யும் பொருட்டு, எண்ணெய் மற்றும் எரிவாயு வர்த்தகத்தில் நாங்கள் கவனம் செலுத்துவோம்" எனக் கூறிய பிரதமர் மோடி, அணுசக்தியில் அதிக முதலீடு மேற்கொள்வது குறித்தும் உறுதிபூண்டார்.

தங்களின் வர்த்தக கூட்டாளிகள் தங்கள் மீது எந்தளவுக்கு இறக்குமதி வரிகளை விதிக்கிறதோ அதே அளவு வரியை அந்த நாடுகளும் எதிர்கொள்ளுமென ட்ரம்ப் ஏற்கெனவே உத்தரவிட்டிருந்த நிலையில் மோடி அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இந்தியாவுக்கு இந்தாண்டு முதலே இராணுவத் தளவாடங்களை விற்பனை செய்வதை அதிகரிப்பது தொடர்பாகவும் ட்ரம்ப் பேசினார். "பல பில்லியன் டொலர்கள் மதிப்பிலான இராணுவ தளவாடங்களை இந்தியாவுக்கு விற்கவுள்ளோம். எவ்-35 ரக போர் விமானங்களை இந்தியாவுக்கு வழங்குவோம்" எனவும் ட்ரம்ப் கூறினார்.

### தஹாவூர் ராணாவை இந்தியாவிடம் ஒப்படைக்க ஒப்புதல்

உலகம் முழுவதிலும் இஸ்லாமிய தீவிரவாதப் போக்கு அச்சுறுத்தலைத் தடுக்க இந்தியாவும் அமெரிக்காவும் முன்னெப்போதும் இல்லாத வகையில் இணைந்து செயற்படுமென ட்ரம்ப் தெரிவித்தார்.

2008 மும்பை பயங்கரவாதத் தாக்குதலுக்கு திட்டம் தீட்டியதாகக் குற்றஞ்சாட்டப்படும் தஹாவூர் ராணா குறித்து ட்ரம்ப் கூறுகையில், "உலகின் மிக மோசமான மனிதர்களில் ஒருவரை நாடு கடத்துவதற்கு நமது நிர்வாகம் ஒப்புதல் அளித்துள்ளது என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்" எனத் தெரிவித்தார்.

"சட்ட ரீதியான நடவடிக்கைகளை எதிர்கொள்ள அவர் இந்தியா அனுப்பப்படுவார். உடனடியாக அவர் இந்தியாவிடம் ஒப்படைக்கப்படுவார்" என ட்ரம்ப் கூறினார்.

### அதானி குறித்து மோடி கூறியது என்ன?

தன் நிறுவனம் ஒன்றுக்கு ஒப்பந்தம் பெற 250 மில்லியன் டொலர்கள் இலஞ்சம் கொடுத்ததாகவும் அதனை மறைத்ததாகவும் அதானி மீது கடந்த நவம்பர் மாதம் குற்றஞ்சாட்டப்பட்டது.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுகளை அதானி குழுமம் மறுத்தது.

இந்நிலையில், வெள்ளைமாளிகையில் ட்ரம்பை சந்தித்த பின் செய்தியாளர் களிடம் பேசினார் மோடி.

அப்போது, "அதானி குறித்து பேசுனீர்களா? அந்த வழக்கில் நடவடிக்கை எடுக்க வலியுறுத் தினீர்களா?" என மோடியிடம் செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர். அதற்கு, "இந்தியா ஒரு ஜனநாயக நாடு. எங்கள் கலாசாரம் மற்றும் பாரம்பரியம் என்னவென்றால் உலகமே ஒரு குடும்பம் என்பதுதான். நாங்கள் முழு உலகத்தையும் ஒரே குடும்பமாகக் கருதுகிறோம். ஒவ்வொரு இந்தியரையும் என்னுடையவன் என்று நான் கருதுகிறேன். இரண்டாவது விடயம், இப்படிப்பட்ட ஒரு தனிப்பட்ட விடயத்துக்காக இரு நாடுகளின் தலைவர்களும் சந்திப்பதில்லை, அமர்ந்து பேசுவதில்லை" என பதிலளித்தார்.

### பிரிக்ஸ் பற்றி ட்ரம்ப் செய்தியாளர் சந்திப்பில்,

"பிரிக்ஸ் ஒரு மோசமான நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டது.

பிரிக்ஸ் அமைப்பிலுள்ள நாடுகள் டொலருக்கு எதிராக விளையாட விரும்பினால், அவர்கள் மீது 100 சதவீதம் வரி விதிக்கப்படும்.

டொலருக்கு எதிரான நாணயத்தை அவர்கள் கொண்டுவருவோமென அறிவித்தால், அறிவிக்கும் நாளில் அவர்கள் திரும்பி வந்து அமெரிக்காவிடம் கெஞ்சும் நிலை ஏற்படுமென்று கூறுவார்கள்.

நான் இதை குறிப்பிட்ட நாளிலேயே பிரிக்ஸ் இறந்துவிட்டது" என்றார்.

### உக்ரைன் - ரஷ்யா போர் குறித்து மோடி கூறியதென்ன?

"நான் ரஷ்யா மற்றும் உக்ரைனுடன் தொடர்ந்து தொடர்பில் இருப்பது உங்களுக்குத் தெரியும். நான் இருநாட்டுத் தலைவர்களையும் சந்தித்துள்ளேன். இந்தியா நடுநிலை வகிக்கிறது என்ற தவறான எண்ணம் பலருக்கும் இருக்கிறது. இந்தியா நடுநிலை வகிக்கவில்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்தியா அமைதி - அதாவது சமாதானத்தின் தரப்பில் உள்ளது" என்று பிரதமர் மோடி தெரிவித்தார்

"ஜனாதிபதி புட்டின் முன்னிலையில் ஊடகங்களிடம் இது போருக்கான நேரம் அல்ல என்று நான் தெளிவுபடக் கூறினேன். பிரச்சினைகளுக்கான தீர்வு போர்க்களங்களில் கிடைப்பதில்லை, பேச்சுவார்த்தை மூலமே தீர்வை எட்ட முடியுமென்று இன்றும் நான் உறுதியாக நம்புகிறேன். இந்த இருதரப்பும் இருக்கும் ஏதோ ஒரு பொது மன்றத்தில் பேச்சுவார்த்தை நடத்தினால்தான் ஏதாவது ஒரு தீர்வு பிறக்கும் என்று இந்தியா கருதுகிறது. ஜனாதிபதி ட்ரம்ப் செய்யும் முயற்சியை நான் வரவேற்கிறேன், ஆதரிக்கிறேன். உலகத்தில் சமாதானத்துக்கான பாதையைத் திறக்கும் வகையில் ஜனாதிபதி ட்ரம்ப்பின் முயற்சி விரைவில் வெற்றிபெற வேண்டுமென்று நான் விரும்புகிறேன்"என்றும் அவர் கூறினார்.

**நன்றி பி.பி.சி. தமிழ்**

## 7ஆம் பக்கத் தொடர்ச்சி...

சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினதும் வழிகாட்டல்களினதும் விஞ்ஞான, மருத்துவ சஞ்சிகைகளின் ஆய்வறிக்கைகளின் பிரகாரம், கொவிட்-19 சடலங்கள் அடக்கஞ்செய்யப்படுவதால் நிலக் கீழ் நீர் அசுத்தம் அடைவதில்லை. அதனால் கொவிட்-19 தொற்று பரவுவதில்லை என்று திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டிருக்கத்தக்கதாக அப்போதைய இலங்கை அரசாங்கம் அவற்றைப் புறந்தள்ளி, புறக்கணித்து சடலங்களை தகனம் செய்யவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருந்தது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் 24.03.2020 ஆம் ஆண்டு வழிகாட்டுதல்கள் இன்னமும் செல்லுபடியானவை. அவை மீளப்பெறப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சடலங்களைப் பொறுத்தவரை நோய்த் தொற்று, நோய்த் தடுப்பு, கட்டுப்படுத்தல் பற்றி நீர் மற்றும் துப்புரவு பற்றி 19.03. 2020இல் உலக சுகாதார ஸ்தாபனமும் யுனிசெப் நிறுவனமும் வெளியிட்ட வழிகாட்டுதலிலும் இதுபற்றி தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

26.03.2020 திகதியிட்ட யுனெஸ்கோ உயிரியல் ஒழுக்கவியல் குழுவின் ஆய்வறிக்கையிலும் நிலத்தின் நீர் இதனால் மாசடைவதில்லை, நோய்த் தொற்று பரவுவதில்லை என்று குறிப்பிட்டிருப்பதும் இன்னும் நடைமுறையில் இருந்துவருகிறது. சர்வதேச நீர் மற்றும் மண்ணியல் கமிட்டியும் இதனால் நீர் வளம் மாசு அடைவதில்லை என்பதை தெரிவித்திருக்கிறது. தொழில்சார் நிபுணர்களும் இலங்கை நீர்வள பொறியியலாளர்களும் குழுவினரும் வெளியிட்டுள்ள அறிக்கையிலும் இதனால் நீர் மாசடைவதில்லை. நோய்த் தொற்று பரவுவதில்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கொவிட்-19 பற்றி 31.03.2020 வெளியிட்ட அறிக்கையிலும் அதைப்பற்றி சாதகமாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. இன்னும் அது நடைமுறையில் இருக்கின்றது. மீளப் பெறப்படவில்லை.

நிபுணர் குழு எனக் கூறிக்கொண்டு மேற்சொன்ன எல்லா விதமான சர்வதேச மற்றும் உள்நாட்டு வழிமுறைகளையும் புறந்தள்ளி கொரோனா -19 தொற்றால் இறந்தவர்களின் சடலங்கள் நல்லடக்கம் செய்யும் நடைமுறை உலகின் 192 நாடுகளில் பின்பற்றப்பட்டு வரத்தக்கதாக இலங்கை மட்டும் அதற்கு விதிவிலக்காக இருந்துள்ளது. அரசாங்கம் அதை பலவந்தமாக நடைமுறைப்படுத்தியது. ஆகவேதான் இந்தப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் அவசியத்தை நாங்கள் வலியுறுத்தி வருகிறோம்.

நிபுணர் குழுவில் இடம்பெற்ற தற்போதைய சுகாதார அமைச்சின் செயலாளரும் இன்னும் வரப்பிரசாதங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்.

தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ஆளுங்கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் நிஹால் அபேசிங்கவுக்கு நாங்கள் நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளோம். ஆரம்பம் முதலே அவர் எங்களுடன் எங்களுடைய நிலைப்பாட்டிலேயே இருந்து வருகிறார். ஆனால், அவர் இந்தச் சர்ச்சைக்குரிய பேராசிரியை மெத்திகா விதானகே தனது மனப் பதிவின்படி அந்த முடிவை மேற்கொண்டதாகக் கூறினார். அதனை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

அத்துடன், இந்த விவாதத்தில் பங்களிப்புச்செய்த சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, இதனை வழிமொழிந்த பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ்.உதுமாலெப்பை, எம்.எஸ்.நளீம், ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.ஏ.அஸ்லம் ஆகியோருக்கு நான் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



**எம்.எஸ்.அமீர் ஹுசைன்**




# உள்ளூராட்சித் தேர்தலும் பாராளுமன்ற வகிபாகமும்

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை விரைவாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. இந்தத் தேர்தல் 2025 ஏப்ரல் மாதம் இறுதி வாரத்தில் நடத்தப்படலாம் என்று தேர்தல் ஆணைக்குழு வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது. அதேநேரம் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பான சிறப்பு ஏற்பாடுகள் சட்டமூலம் நாளை (2025.02.17) பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றது.

இவ்விடயம் தொடர்பாக ஸ்ரீல.மு.காங்கிரஸ் கட்சி உட்பட நான்கு அரசியல் கட்சிகளால் உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த வழக்குக்கான தீர்ப்பை உயர் நீதிமன்றம் 2025.02.14ஆம் திகதி சபாநாயகருக்கும் ஜனாதிபதிக்கும் அறிவித்திருப்பதால் அந்தத் தீர்ப்பை சபாநாயகர் அறிவிப்பதற்காக நாளை 17ஆம் திகதி பாராளுமன்றம் கூடவிருக்கின்றது.

இதற்கிடையில் கடந்த 05ஆம் திகதி பாராளுமன்றம் கூடியபோது உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் அறிவிப்பாரென்று தகவல்கள் வெளியாகியிருந்தபோதும் அதுவரையில் குறித்த உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. ஆனாலும் தற்போது உயர் நீதிமன்றம் அந்த வழக்குக்கான தீர்ப்பை ஜனாதிபதி மற்றும் சபாநாயகருக்கு அறிவிக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்திருப்பதால் 2025.02.10ஆம் திகதி பிரதி சபாநாயகர் கலாநிதி ரிஸ்வி சாலி தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற விவகாரங்களுக்கான நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் இந்தச் சிறப்பு ஏற்பாடுகள் தொடர்பான சட்டமூலத்தை நாளை (17 ) விவாதிப்பதற்கும் தீர்மானிக்கப் பட்டிருக்கின்றது. இதற்கிணங்க நாளை 17ஆம் திகதி பி.ப. 2.00 மணியிலிருந்து இரவு 7.00 மணி வரையில் இந்தச் சட்டமூலம் தொடர்பான விவாதம் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஏற்கனவே உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை பின்போட்டமைக்கு எதிராக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குக்கான உத்தரவும் அப்போதைய அரசாங்கம் இயன்ற வரை அவசரமாக இந்தத் தேர்தலை நடத்தி முடிக்கவேண்டும் என்பதாகும். ஆனாலும் 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்கள் நடத்தப்பட்டதால் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்ந்தும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படாததாக மாறிவிட்டது. இந்நிலையில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஏற்கனவே தேர்தலுக்கு முன்னர் வழங்கியிருக்கின்ற வாக்குறுதிகளின் அடிப்படையில் ஒத்திவைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தலை 2025ஆம் ஆண்டு நடத்தி முடிப்போம் என்பதாகும்.

2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09ஆம் திகதி உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருந்தபோதும் அந்தத் தேர்தலை நடத்த பணம் இல்லை என்றும் தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கவில்லை என்றும் அதனால் தேர்தல் நடத்தப்படாது என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2023 பெப்ரவரி 23ஆம் திகதி பாராளுமன்றத்தில் அறிவித்தார். ஜனாதிபதியின் இந்த அறிவிப்பானது நாட்டு மக்கள் அனைவரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்த மறக்க முடியாத சம்பவமாகும்.

தேர்தலொன்று நடைபெறுமென்று உத்தியோகபூர்வமாகவோ அல்லது அரசியல் அமைப்புக்கு அமைவாகவோ எந்தவிதமான தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை என்று ஜனாதிபதி சட்டவாக்க சபையான பாராளுமன்றத்தில் அன்றைய தினம் அறிவித்தமையானது பாராளுமன்றத்தில் மட்டுமல்லாது நாட்டிலும் அவரை ஒரு மிஸ்டர் பீன் போன்று அனைவரும் பேச ஆரம்பித்தனர்.

2023 ஜனவரி மாதம் 21ஆம் திகதி வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. அதிலிருந்து அரசியல் கட்சிகள் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் இறங்கி தேர்தல் நடக்கலாமென்ற நம்பிக்கையில் மும்முரமாக ஈடுபட்டு பெருமளவான தொகைகளை செலவு செய்தும் இருந்தன. ஆனாலும் தேர்தல் நடத்த 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணம் இல்லை என்று நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்து அப்போதைய சந்தர்ப்பத்தில் நிலைமைகளை தலைகீழாக மாற்றியமைத்தார். இவ்வாறாக தேர்தல் நடத்த ஒதுக்கீடு செய்யப்பட்ட 1,000 கோடி ரூபா பணத்தை அதற்காக வழங்காமல் பின்போடப்பட்ட தேர்தலையே இப்போது ஏப்ரல் மாதம் நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

விசேட சிறப்பு ஏற்பாடுகள் சட்டமூல விவாதத்தில் பிரதானமாக ஏற்கனவே 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச்'செய்து புதிதாக வேட்புமனுக்களை தாக்கல் செய்ய தேர்தல் ஆணைக்குழு கால அவகாசம் வழங்குதல், ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள கட்டுப்பணத்தை அந்தந்த அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களுக்கு மீளச் செலுத்துவதா அல்லது புதிதாக வேட்புமனுக்களை சமர்ப்பிக்கும் போது 2023ஆம் ஆண்டு செலுத்திய கட்டுப்பணத்தை செல்லுபடியானதாக்குவதா போன்ற விடயங்கள் விரிவாக ஆராயப்பட இருக்கின்றது. அத்துடன், எந்த வருடத்தின் தேர்தல் இடாப்பில் பதிவுசெய்யப்பட்ட தேர்தல் வாக்களிப்பு பதிவுகளின் அடிப்படையில் தேர்தலை நடத்துவது போன்ற விடயமும் ஆராயப்படவிருக்கின்றது.

2025.02.13ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவில் எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் 13 அரசியல் கட்சிகள் பங்குபற்றிய கலந்துரையாடலொன்று இடம்பெற்றிருக்கின்றது. இந்தக் கலந்துரையாடலின்போது அரசியல் கட்சிகளது பிரதான கோரிக்கையாக இருந்தது ஏற்கனவே 2023 ஜனவரியில் செலுத்தியிருக்கின்ற கட்டுப்பபணத்தை தேர்தல் ஆணைக்குழ அரசியல் கட்சிகளுக்கு மீளச் செலுத்த வேண்டும் என்பதாகும். அத்துடன், மார்ச் மாதமளவில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவது தொடர்பான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டபோதும் அந்த நாட்களில் வரவு-செலவுத் திட்ட விவாதம் நடைபெறுவதால் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவசியம் பாராளுமன்ற விவாதங்களில் பங்கெடுக்க வேண்டும். அதனால் மார்ச் மாதத்தை விட ஏப்ரல் மாதம் 20ஆம் திகதிக்கும் 30ஆம் திகதிக்கும் இடைப்பட்ட ஒரு நாளில் தேர்தலை நடத்த தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும் என்ற விடயம் உறுதியாகியிருக்கின்றது.

இந்நிலையில், அரசியல் கட்சிகளும் தற்போது தயாராகிக்கொண்டிருக்கின்றன. நாளை 17ஆம் திகதி காலை 10.00 மணிக்கு 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தையும் நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கின்றார். வரவு-செலவுத் திட்ட உரை 12.30 மணி வரையில் இடம்பெறவிருக்கின்றது. அதன் பின்னர் பி.ப. 2.00 மணியிலிருந்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் சிறப்பு ஏற்பாடுகள் சட்டமூலம் மீதான விவாதம் நடைபெறும். அரசியல் கட்சிகள் திருத்தங்களைச் சமர்ப்பிப்பதாக இருந்தால் நாளை 17ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிக்குமாறு பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அலுவலகம் அறிவித்திருக்கின்றது.

அதேநேரம் இவ்வாறு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடத்தப்படலாம் என்ற அறிவிப்பைத் தொடர்ந்து சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.கட்சியுடன் கூட்டணி அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றது. இந்தப் பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்திருக்கின்றதென்று ஒரு தரப்பும், வெற்றியளிக்கவில்லையென்று இன்னொரு தரப்பும் கூறி வருகின்றன.

சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்குள் ஒரு தரப்பினர் ஐ.தே.கவுடன் நடத்தும் பேச்சுவார்த்தை குறித்து அதிருப்தியை வெளியிட்டு வருகின்றனர். கடந்த கால திருடர்களுடன் எதற்காக பேச்சு நடத்த வேண்டும்? ஐ.தே.க. என்ற ஒரு கட்சியோ அல்லது அக்கட்சிக்கான வாக்குகளோ இல்லை என்றும் கூறி வருகின்றனர். குறிப்பாக, இந்தப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக கொழும்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர கடுமையான அதிருப்தியை வெளியிட்டுள்ளார். ஆனாலும் இதுவரையில் கட்சித் தலைவர்மட்ட ரணில்-சஜித் பேச்சுகள் நடக்கவில்லை.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலை விட பொதுத் தேர்தலில் ரணில் தலைமையிலான ஐ.தே.கட்சி கூட்டணி அடைந்த பின்னடைவு அரசியல் அரங்கில் எதிர்கால சந்ததியினருக்கு பலவிதமான படிப்பினைகளைக் கொடுப்பதாக அமைந்திருந்ததை நாம் மறந்துவிட முடியாது. பொதுஜன பெரமுன கட்சியின் சின்னத்துடன் மஹிந்த ராஜபக்ஷவுடன அணி திரண்டிருந்தவர்களே பின்னர் ராஜபக்ஷ குடும்பத்தின் சரிவுடன் ரணிலுடன் இணைந்து பதவிகளையும் சுகபோகங்களையும் அனுபவித்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தேர்தல் காலத்தில் வலியுறுத்திக் கூறிய நாட்டை நாசமாக்கியவர்கள், ஊழலில் ஈடுபட்டவர்கள், அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டவர்கள் என்று முத்திரை குத்தியவர்களே இந்த ரணில் அணியினர் என்பது நாட்டு மக்களுக்கு வெளிப்படையாகத் தெரியும்.

பாராளுமன்றத்தில் அண்மையில் சொல்லப்பட்ட 43 அமைச்சர்கள் 140 கோடி ரூபாவுக்கு மேல் தமது வீடுகள் அரகலயகாரர்களால் எரிக்கப்பட்டதாக கூறி நஷ்டஈடு பெற்றுக்கொண்டிருந்த விடயத்திலும் ஏராளமான அமைச்சர்கள் ஜனாதிபதி நிதியம் மூலம் சத்திர சிகிச்சைகளுக்கு கோடிக்கணக்கில் அரச நிதியிலிருந்து பணம் பெற்றிருந்ததிலிருந்தும் பகிரங்கமாக இவர்கள் மோசடிகளில் ஈடுபட்டுள்ளனர் என்பது தெளிவாகின்றது. அதன் காரணமாகவே ஹிருணிகா ஐ.தே.க.வுடன் ஐக்கிய மக்கள் சக்தி இணையுமானால் மீண்டும் பின்னடைவைச் சந்திக்கலாம் என்று கருதுகின்றார்.

ஆனாலும் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி நடந்து முடிந்த இரண்டு தேர்தல்களிலும் சந்தித்த தோல்வி காரணமாக எதிர்வரும் தேர்தலில் இழந்த செல்வாக்கை அடைய மீண்டும் யானையில் ஏறினால் வெற்றி பெறலாம் என்று ஒரு தரப்பு சஜித் ஆதரவாளர்கள் கருதுகின்றனர். ஐ.தே.கவை விட்டுப் பிரிந்ததால்தான் சஜித் தோல்வியடைந்தார் என்பதால் மீண்டும் யானை சின்னத்தில் ஒன்றுபட்டால் தற்போதைய அரசாங்கத்தை ஆட்டம் காணச் செய்யலாம் என்று கருதுகின்றனர். சின்னாபின்னப்பட்டுள்ள ஐ.தே.க. மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மீண்டும் முன்னோக்கிய பயணத்தை ஆரம்பிக்கலாம் என்று கருதுகின்றனர்.

ஆனாலும் ரணிலும் சஜித்தும் சின்னங்களில் விடாப்பிடியாக இருக்கின்றனர். சஜித் தொலைபேசியை விட்டுக் கொடுக்காமலும் ரணில் யானையை விட்டுக் கொடுக்காமலும் தொடரும் பேச்சுவார்த்தைகளில் வெற்றி ஏற்படப் போவதில்லை என்பது உறுதியாகத் தெரிகின்றது. அதேநேரம் தாமரை மொட்டுச் சின்னத்தில் பொதுஜன பெரமுன கட்சியை மீண்டும் பலமான செல்வாக்குடன் கட்டியெழுப்பலாம் என்று நாமல் திட்டங்களை வகுத்து வருகின்றார்.



# எடப்பாடிக்கு எதிராக செங்கோட்டையன் போர்க்கொடி




**ரமணி**

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் எடப்பாடி. ஓ.பன்னீர்ச்செல்வம், சசிகலா, தினகரன் ஆகியோரை மீண்டும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்க்க வேண்டுமென்ற குரலை எடப்பாடி அடக்கி ஒடுக்கிவிட்டார். எடப்பாடி சொல்வதுதான் பொதுச் சபையில் நிறைவேறுமென்ற எழுதப்படாத விதியை அமுல்படுத்தியுள்ளார். எடப்பாடிக்கு எதிரானவர்களும் பாரதீய ஜனதாவுடன் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இணைக்கப்பட வேண்டுமென நினைக்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் பேசாமடைந்தைகளாக இருக்கிறார்கள்.

எம்.ஜி.ஆர். காலத்து மூத்த அரசியல் தலைவரான செங்கோட்டையன், பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமிக்கு எதிராக கலகக் குரல் எழுப்பியிருப்பது அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. எடப்பாடி பழனிச்சாமியையே அரசியலுக்குக் கொண்டு வந்த குருநாதர்தான் செங்கோட்டையன். எம்.ஜி.ஆர். காலத்திலேயே மாவட்ட செயலாளர். எம்.எல்.ஏ. என பதவி வகித்தவர். ஒரு கால கட்டம் வரை ஜெயலலிதாவின் நம்பிக்கைக்குரிய தளபதியாக இருந்தவர். அவரது வாழ்க்கையில் சறுக்கல் ஏற்பட ஜெயலலிதா ஒதுக்கி வைத்தார். ஆனால், சசிகலா குடும்பம், அதிதீவிர உண்மையான விசுவாசி செங்கோட்டையனை இன்று வரை கைவிடவில்லை. இத்தனை ஆண்டுகள் கனத்த அமைதி காத்த செங்கோட்டையன் இப்போது திடீரென கலகக் குரல் எழுப்பி இருப்பது மிகச் சாதாரணமாக கடந்து போய்விடக் கூடியதல்ல என்பதுதான் அனைத்து அரசியல் பார்வையாளர்களின் கருத்து.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் போர்க்கொடி எழுப்பியவர்கள் தூக்கி எறியப்பட்டனர். செங்கோட்டையன் கலகக் குரல் எழுப்பியதுமே 30க்கும் மேற்பட்ட அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள், மூத்த தலைவர்கள் பலரும் அவரை தொடர்புகொண்டு ஆதரவு தெரிவித்தனர்.

ஒருங்கிணைந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் பாரதீய ஜனதா, பாட்டாளி மக்கள் கட்சி, தேசிய முன்னேற்ற திராவிடக் கட்சி, தமிழ் மாநிலக் கட்சி ஆகியவை ஒன்றிணைந்து மெகா கூட்டணியமைக்க வேண்டுமென்பதே டெல்லியின் கணக்காகும்.

டெல்லியின் கனவுக்கு எடப்பாடி முட்டுக்கட்டை போடுகிறார். செங்கோட்டையனின் போர்க்கொடிகுப் பின்னால் சசிகலா இருப்பதாகக் கருதப்படுகிறது. எடப்பாடிக்கு ஆதரவானவர்களின் வீடுகளிலும் நிறுவனங்களிலும் வருமான வரித்துறை திடீர் தேடுதல் நடத்தியும் அவர் அசரவில்லை. அதனால்தான் செங்கோட்டையன் உசுப்பிவிடப்பட்டுள்ளார்.

செங்கோட்டையன் விவகாரத்தை முன்வைத்து மீண்டும் எடப்பாடி பழனிச்சாமியை காட்டமாக விமர்சித்து வருகிறார் டி.டி.வி.தினகரன். ஜெயலலிதாவால் ஓரங்கட்டப்பட்டு ஏறத்தாழ அரசியல் அத்தியாயத்தின் இறுதிக்கட்டத்தில் இருந்தவர்தான் செங்கோட்டையன். ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர் மீண்டும் உயிர் பெற்றது செங்கோட்டையன் அத்தியாயம். சசிகலா குடும்பத்தின் மீதான மாறாத விசுவாசம் இன்றும் தொடர்கிறது.

சசிகலா சிறைக்குப் போகும் நிலையில் கூவத்தூரில் செங்கோட்டையனை முதல்வராக்க அவரது குடும்பம் தீவிரமாக முயன்றது. காலமும் நேரமும் எடப்பாடிக்கு ஆதரவாக நின்றதால் அவர் முதலமைச்சரானார்.

சசிகலா குடும்பத்தின் நெருக்கடியால் தனது குருநாதரான செங்கோட்டையனை வேண்டா வெறுப்பாக அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டார் எடப்பாடி. எடப்பாடி பழனிச்சாமி சசிகலாவுக்கு எதிரியாகிவிட்டார். ஆனால், செங்கோட்டையனோ சசிகலா குடும்பத்திடமிருந்து இம்மியளவும் விலகாமல் இன்று வரை தொடர்பில்தான் இருந்துவருகிறார்.

கோவை அன்னூர் அருகே அத்திக்கடவு-அவினாசி திட்டத்துக்கு அடிக்கல் நாட்டியதற்காக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமிக்கு விவசாயிகள் பாராட்டு விழா நடத்தினர். இந்த விழாவை மேற்கு மண்டல சீனியரான முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் புறக்கணித்தார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய செங்கோட்டையன், எங்களை வளர்த்து அடையாளம் காட்டியவர்கள் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா. இந்த இருவரது படமுமே எடப்பாடி பழனிச்சாமி பாராட்டு விழா நிகழ்வுகளில் இடம்பெறவில்லை. இத்தனைக்கும் அத்திக்கடவு- அவினாசி திட்டத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்தவர் ஜெயலலிதா. இதனை எப்படி எங்களால் ஏற்க முடியும் என்றார். ஆனால், அ.தி.மு.கவின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஜெயக்குமாரோ, எடப்பாடி பழனிச்சாமிக்கு பாராட்டு விழா நடத்தியது அ.தி.மு.க. அல்ல; விவசாயிகள் அமைப்புதான் என மழுப்பலாக மட்டுமே பதிலளித்துள்ளார். செங்கோட்டையனின் போர்க்கொடிக்கு இதுதான் முக்கிய காரணம்.

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்)

# அதிர்ச்சி கொடுத்த அதானி

## ஆடிப்போன கொழும்பு!



வடக்கு இலங்கை மன்னார் பகுதியில் ஆரம்பிக்கப்படவிருந்த காற்றாலை மின்திட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டத்துக்கு அனுமதி வழங்குவது, அதன் சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து சட்டப்போராட்டம் தொடர்ந்து வரும் நிலையில், அத்திட்டத்திலிருந்து அதானி க்ரீன்ஸ் நிறுவனம் விலகியுள்ளமை இலங்கை அரசுக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

உள்ளூர் ஆய்வுகள் மற்றும் விமர்சனங்களைத் தொடர்ந்து இந்தியாவுக்கு வெளியே அண்டைநாட்டில் அதானி நிறுவனம் மேற்கொண்ட முதலீட்டிலிருந்து பின்வாங்கியிருப்பதை நிறுவனத்தின் இந்த முடிவு சுட்டிக்காட்டுகிறது. அதானி குழுமத்தின் இந்த முடிவு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கான உள்ளூர் வெற்றியாகக் கருதப்படுகிறது. இந்தத் திட்டத்தை இரத்துச்செய்வேன் என்று கடந்த 2024ஆம் ஆண்டு செப்டெம்பரில் நாட்டின் உயர் பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் சபதம் செய்திருந்தார். என்றாலும், அவரது அரசு அமைந்ததும் திட்டத்தை மறுபரிசீலனை செய்யும் விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தது.

திட்டத்திலிருந்து விலகுவது குறித்து அதானி குழுமம் பெப்ரவரி 12ஆம் திகதி வெளியிட்டிருக்கும் கடிதத்தில், “புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டத்தை மறுபரிசீலனை செய்வதற்கு ஒரு குழுவை இலங்கை அரசு நியமித்துள்ள நிலையில், இலங்கையின் இறையாண்மை மற்றும் அதன் விருப்பத்துக்கு மதிப்பளிக்கும் வகையில், ஏற்கனவே கூறப்பட்ட திட்டத்திலிருந்து விலகிக்கொள்ள அதானி குழுமம் முடிவுசெய்துள்ளது.

இலங்கையின் வடக்கு பகுதி நகரங்களான மன்னார் மற்றும் பூநகரி ஆகிய பகுதிகளில் 484 மெகாவோட் அளவு புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை உருவாக்கும் வகையில் - காற்றாலை பண்ணைகளை அமைக்க இலங்கை மின்சார சபையுடன் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நீடித்த பேச்சுகள் நடத்தப்பட்டன. தானே உருவாக்கி இயக்கும் (build-own-operate) இந்தத் திட்டத்துக்கு சுமார் ஒரு பில்லியன் டொலர் முதலீடு தேவைப்படுமென்று அதானி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, இலங்கைத் துறைமுக அதிகார சபை மற்றும் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங் ஆகியவைகளுடன் இணைந்து அதானி குழுமம், இலங்கைத் துறைமுகத்தில் மேற்கு கொள்கலன் முனைய நிர்மாணப் பணியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 2022ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது இலங்கையின் வடக்குப் பகுதியில் தொடங்கப்படவிருந்த காற்றாலைத் திட்டம், எந்தவிதமான போட்டியாளருமின்றி அதானி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வந்த ரணில் விக்கிரமசிங்க அரசும் அந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டத்தை முன்னெடுத்தது.

இதனிடையே, இலங்கையின் எரிசக்தித் துறைக்குள் அதானி நிறுவனம் பின்வாசல் வழியாக நுழைந்துவிட்டதென்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டின. அதேபோல் மன்னார் பகுதிவாசிகள் மற்றும் செயற்பாட்டாளர்கள், முக்கியமான பறவைகள் சரணாலயம் மற்றும் பிற சுற்றுச்சூழல் இடர்பாடுகளை சுட்டிக்காட்டி, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உயர் நீதிமன்றத்தை நாடின. இதனையடுத்தே பொறுத்தது போதும் என்று மேற்படி அறிவிப்பைக் கைவிடுவதாக அதானி நிறுவனம் அறிவித்திருக்கிறது.

அதானி நிறுவனத்தின் காற்றாலை மின்சாரத் திட்டத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவுள்ளதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த மாதம் தீர்மானித்தது.

மன்னார், விடத்தல்தீவு பகுதியில் இந்திய அதானி நிறுவனத்தால் செய்துகொள்ளப்பட்ட காற்றாலை மின் நிலையத்தை உருவாக்குதல் தொடர்பான உடன்படிக்கையை வலுவற்றதாக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலேயே நீதிமன்றம் அந்த முடிவை எடுத்தது.

குறித்த மனுவை இலங்கை பசுமை அமைப்பின் தலைவர் சந்திம அபயவர்தன சமர்ப்பித்திருந்தோடு, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் எம்.யூ.பி.கரலியத்தவால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து, இது தொடர்பான மனுவை மே 23ஆம் திகதி பரிசீலிப்பதாக நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஜனாதிபதி அநுரகுமார ஜனாதிபதியாக பதவியேற்று இந்தியா சென்றிருந்தபோது அவரது நிகழ்ச்சி நிரலில் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தது அதானி முதலீடு விவகாரம். இந்தியப் பிரதமர் மோடி ஜனாதிபதி அநுரவை சந்தித்து நடத்திய பேச்சு முழுக்க அதானியின் விடயமே என்று உயர்மட்டத் தகவல்கள் கூறுகின்றன. நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதாகவும் அதேசமயம், அதானியின் காற்றாலை மின் திட்டத்தின் கட்டணங்கள் உயர்வு என்றும் ஜனாதிபதி அப்போது இந்தியத் தரப்புக்கு தெரிவித்திருந்தார்.

இந்தியாவுக்கான பயணத்தின்போது அதானியின் மின்திட்டம் குறித்து பாதகமான கருத்து எதையும் ஜனாதிபதி அநுர கூறவில்லை. மாறாக, இலங்கையின் புதிய ஆட்சியானது எல்லா வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்களையும் மீள்பரிசீலனை செய்யுமென்றும் அதைப்போலவே அதானியின் திட்டமும் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படுமென்றும் ஜனாதிபதி கூறியிருந்தார்.

ஆனாலும் ஜனாதிபதி அநுர குமாரவின் இந்திய விஜயத்தின் பின்னரும் மன்னார் காற்றாலைத் திட்டத்தில் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை என்பதை அறிந்த இந்தியத் தரப்பு கடும் விசனித்திருந்த நிலையில், இந்தத் திட்டத்தை இரத்துச்செய்வதான அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அதானி குழுமம் இந்திய மத்திய அரசுக்கு மிகவும் நெருக்கமானது. இந்தியப் பிரதமரே இந்த முதலீட்டில் சிபாரிசை அதானி சார்பில் செய்கிறதென்றால் அந்த நிறுவனம் எத்தனை தூரம் சக்திவாய்ந்தது என்பதையெல்லாம் பகிரங்கமாகக் கூறத் தேவையில்லை. 100 கோடி டொலர்களைக்கொண்ட இந்த முதலீட்டுத் திட்டம் தொடர்பில் கடந்த 2 வருடங்களாக 14 சுற்றுப் பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன. ஏற்கனவே இந்தத் திட்டத்துக்கு 50 இலட்சம் டொலர்கள் செலவாகியுள்ளதாக அதானி நிறுவனம் கூறுகிறது.

காற்றாலை மின் திட்டத்தில் முதலீடு செய்வதற்காக சீனாவின் நிறுவனமொன்று முயற்சிகளை எடுத்துவரும் நிலையில், வீணாக மேலும் தாமதித்துப் பணத்தைச் செலவழிப்பதில்லையெனத் தீர்மானித்து இப்படி அதானி பின்வாங்கலை மேற்கொண்டதெனச் சொல்லப்படுகிறது.

### இராஜதந்திர சிக்கல் இலங்கைக்கு வரலாம்

அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானி மீது இலஞ்சம் வழங்குதல், மோசடியில் ஈடுபடுதல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளை கடந்த நவம்பரில் அமெரிக்கா முன்வைத்தது.

அதானி குழும நிறுவனங்களின் தலைவர் கௌதம் அதானி (வயது 62), உலக பணக்காரர் பட்டியலில் 17ஆவது இடத்திலும் இந்தியளவில் 2ஆவது இடத்திலும் உள்ளார். இந்நிலையில், கௌதம் அதானி மற்றும் அவரது உறவினர் சாகர் அதானி (அதானி கிரீன் எனர்ஜி செயற்பாட்டு இயக்குநர்), முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி வினீத் ஜெயின் உள்ளிட்ட 7 பேர் மீது இலஞ்சம் மற்றும் கடன் பத்திர மோசடி தொடர்பான தனித்தனி வழக்குகளில் அமெரிக்காவின் நியூயோர்க் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது.

2020-24 காலகட்டத்தில் அதிக விலைக்கு சூரிய ஒளி (சோலார்) மின்சாரம் வாங்கும் வகையில் விநியோக ஒப்பந்தங்களைப் பெறுவதற்காக தமிழகம், ஆந்திரா, ஜம்மு-காஷ்மீர், சத்தீஸ்கர், ஒடிசா மாநிலங்களில் அரசு அதிகாரிகளுக்கு அதானி குழுமம் ரூ.2,100 கோடி இலஞ்சம் கொடுத்ததாகவும் இதை மறைத்து அமெரிக்க நிறுவனங்களிடம் முதலீடு பெற்றதாகவும் அதானி குழுமம் மீது நியூயோர்க்கிலுள்ள புரூக்ளின் பெடரல் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு பதிவுசெய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, அக்குழுமத்தின் தலைவர் கௌதம் அதானிக்கு எதிராக பிடியாணை பிறப்பித்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம் முறைகேடாக பெற்ற இந்த ஒப்பந்தங்கள் மூலம் 20 ஆண்டுகளில் குறைந்தபட்சம் 2 பில்லியன் டொலருக்கும் (சுமார் ரூ.51,000 கோடி) அதிகமான இலாபத்தை ஈட்ட முடியுமென்று குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டது. இந்த விநியோக ஒப்பந்தங்களைப் பெறுவதற்காக இந்திய அரசின் உயரதிகாரிகளை கௌதம் அதானி பல தடவைகள் சந்தித்ததாகவும் அதற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் அமெரிக்க நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 54 பக்க குற்றப்பத்திரிகையில் கூறப்பட்டது.

இலஞ்சத்தை மறைத்து பெற்ற ரூ. 25,000 கோடி முதலீடு சட்டவிரோதமான இலஞ்ச நடவடிக்கைகளை மறைத்து அமெரிக்காவில் அதானி நிறுவனம் 300 கோடி டொலருக்கு (ரூ.75,000 கோடி) முதலீடு பெற்றதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. புதுடில்லியை தலைமையிடமாகக்கொண்ட அஸூர் பவர் நிறுவனமும் இந்த இலஞ்ச வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது.

அமெரிக்க கடன் பத்திரச் சட்டங்கள், விதிகளை மீறி செயற்பட்டதற்காக அமெரிக்க பங்குச் சந்தை மற்றும் பரிவர்த்தனை சபையும் கௌதம் அதானி, சாகர் அதானி, அஸூர் பவர் நிர்வாகிகள் மீது தனியாகக் குற்றச்சாட்டு பதிவு செய்தது. இதையடுத்து, கௌதம் அதானி, சாகர் அதானி உள்ளிட்ட 7 பேருக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.

ப்ளூம்பெர்க் செய்திக்குறிப்பின்படி, இலஞ்சம் கொடுக்கும் சதித்திட்டத்துக்காக கௌதம் அதானி பல தடவைகள் இந்திய அதிகாரிகளை நேரில் சந்தித்துள்ளார். அதானியுடன் சேர்ந்து குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தங்களின் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நேரடியாகச் சந்திப்பது மற்றும் மின்னணு செயலிகள் மூலமாகவே தொடர்பில் இருந்துள்ளனர்.

மேலும், இருப்பிடங்களைக் கண்டறியவும் உறுதியளிக்கப்பட்ட இலஞ்சப் பணம் பெறப்பட்டதை உறுதிசெய்யவும் செல்போன்களைப் பயன்படுத்துவது, வழங்கப்பட்ட தொகைக்கான ஆவணங்களை புகைப்படம் எடுப்பதென தங்களின் இலஞ்சம் வழங்கும் முயற்சிகளை மின் ஆவணங்களாக மாற்றியுள்ளனர்.

அவர்கள் எந்த வகையிலான பணம் செலுத்தும் முறை சிறந்தது என்பதை தீர்மானிப்பதற்காக பவர்பொயின்ட் மற்றும் எக்ஸல் பிரசன்டேஷன் தயாரித்துள்ளனர். அதில் கௌதம் அதானியால் பரிந்துரைக்கப்பட்ட விருப்பங்களில் ஒன்று, ‘இந்திய எரிசக்தி நிறுவனத்துக்கு நேரடியாக செலுத்தப்படும் தொகை, வளர்ச்சி நிதி’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அடிக்கடித் தங்களை வி, ஸ்னேக் மற்றும் நியுமெரோ யுனோ மினுஸ் என்ற குறியீட்டுப் பெயரில் அழைத்துள்ளனர். கௌதம் அதானி மிஸ்டர் ஏ, நியுமெரோ யுனோ மற்றும் தி பிக் மேன் என்று அழைக்கப்பட்டுள்ளார். குழுவிலுள்ள சிலர் இந்தச் சதித்திட்டத்தில் தங்களின் பங்கேற்பை மறைப்பதற்காக பவர் பொயின்ட் பகுப்பாய்வு மற்றும் மின்னணு தொடர்பு ஆதாரங்களை அழித்துள்ளனர் என்பன போன்ற குற்றச்சாட்டுகள், அதானி உள்ளிட்டோர் மீது முன்வைக்கப்பட்டுள்ளன என்று ப்ளூம்பெர்க் செய்தி அறிக்கை தெரிவிக்கிறது.

### அதானி நிறுவனம் மறுப்பு

இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ள அதானி குழுமம், “அதானி கிரீன் நிறுவனத்தின் இயக்குநர்களுக்கு எதிராக அமெரிக்க நீதித்துறை மற்றும் அமெரிக்கப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையம் ஆகியவற்றின் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை. இந்தக் குற்றச்சாட்டுகளை நாங்கள் மறுக்கிறோம். ‘குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் வரை குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் நிரபராதிகளாக கருதப்படுவார்கள்’ என்று அமெரிக்க நீதித் துறையே கூறி இருக்கிறது. எனவே, சாத்தியமான அனைத்து சட்ட வழிகளும் ஆராயப்படும்.

அதானி குழுமம் எப்பொழுதும் உயர்ந்த தரமான நிர்வாகம், வெளிப்படைத்தன்மை மற்றும் ஒழுங்குமுறையைப் பராமரிப்பதில் உறுதியாக உள்ளது. எங்கள் பங்குதாரர்கள் மற்றும் ஊழியர்களுக்கு நாங்கள் ஒரு சட்டத்தை மதிக்கும் அமைப்பு, அனைத்துச் சட்டங்களுக்கும் முழுமையாக இணங்குகிறோமென்று உறுதியளிக்கிறோம்” என்று தெரிவித்தது.

அதானி குழுமத்தின் மீது அமெரிக்காவிலிருந்து குற்றச்சாட்டு எழுந்தமை இது முதல் முறையல்ல. முன்னதாக, கடந்த 202ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அதானி குழுமம் பல ஆண்டுகளாக நிதி முறைகேட்டில் ஈடுபட்டு வருவதாகவும் அக்குழுமத்துக்கு மிக அதிகளவில் கடன் இருப்பதாகவும் அமெரிக்காவைச் சேர்ந்த முதலீட்டு ஆய்வு நிறுவனமான ஹிண்டன்பர்க் ரிசர்ச் அறிக்கை வெளியிட்டது.

பங்கு மதிப்பில் உயர்வைக் காட்டி அதானி குழும நிறுவனங்கள் மிக அதிகளவில் கடன் பெற்றது, பங்குச் சந்தையில் முறைகேட்டில் ஈடுபட்டது, அதானி குடும்ப உறுப்பினர்கள் வெளிநாடுகளில் போலி நிறுவனங்களைத் தொடங்கி வரி ஏய்ப்பிலும் பண மோசடியிலும் ஈடுபட்டதாக அதில் குறிப்பிடப்பட்டது. இதனால், அதானி குழுமத்தின் பங்குகள் பெரும் வீழ்ச்சியைச் சந்தித்து அவை பின்னர் மீண்டன.

ஹிண்டன்பர்க்கின் அந்த அறிக்கை, இந்திய அரசியல் களத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின. அதானி குழுமத்தின் மீதான குற்றச்சாட்டுகளைப் பாராளுமன்ற கூட்டுக் குழு மூலம் விசாரிக்க வேண்டுமென்று கோரி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டு ஒரு கூட்டத்தொடர் முழுவதும் பாராளுமன்றத்தை முடக்கின.

### ஒப்பந்தத்தை இரத்துச்செய்த கென்யா

அந்த காலகட்டத்தில் அதானி குழுமமுடனான தொழில் ஒப்பந்தங்களை இரத்துச்செய்வதாக கென்ய ஜனாதிபதி வில்லியம் ரூட்டோ அறிவித்தார். கென்யாவின் பிரதான விமான நிலையத்தைப் பராமரிக்கும் ஒப்பந்தம் மற்றும் 30 ஆண்டு காலத்துக்கு கென்ய எரிசக்தித் துறையை நிர்வகிக்கும் வகையிலான 736 மில்லியன் டொலர் மதிப்பிலான ஒப்பந்தத்தையும் இரத்துச்செய்தது.

### அமெரிக்காவுடன் நெருங்கும் இந்தியா

இப்படியாக உலகத்தில் பல சவால்களை அதானி நிறுவனம் எதிர்கொண்டாலும் அவற்றைச் சமாளித்தே வந்திருக்கிறது. ஜனாதிபதி அநுர குமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் கொள்கைகளுக்கமைய இப்படியான விமர்சனங்கள் கொண்ட ஒரு நிறுவனத்துக்கு இலங்கையில் இடமளிப்பதா என்றவாறான கேள்விகள் எழுந்தன. அதனால்தான் அதானி நிறுவனத்துக்கு இந்த அரசின் கீழ் இடமளிக்கப்படமாட்டாதென முன்னரே சந்தேகம் வெளியிடப்பட்டிருந்தது. அதுமட்டுமல்ல, அதானி காற்றாலை மின் நிலையம் அமையும் பகுதியில் பாரிய சிவன் கோயிலொன்று அமையவுள்ளதாகவும் அந்த சிவன் கோயில் கோபுரம் இராமேஸ்வரம் வரையில் தெரியுமென்றும்கூட சில தகவல்கள் வெளியாகியிருந்தன. இயற்கை வாழ்வியலுக்கு மேற்படி திட்டம் ஆபத்து என்பதற்கப்பால் அதைவிட தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமையுமென அரசாங்கத்துக்கு சில தரப்புகள் எச்சரிக்கை விடுத்திருந்தன .

இப்படியான பின்னணியில் அதானி நிறுவனம் தனது முதலீட்டை இலங்கையில் வாபஸ் பெற்றுள்ளது. ஆனால், அமெரிக்காவில் அதானிக்கு எதிரான விசாரணைகள் இனி முடங்கும் நிலைமை ஏற்படலாம். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டு அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியை சந்தித்துப் பேசியுள்ளார். இந்தியாவுடன் வர்த்தகத் தொடர்பாடல்களை விரிவுபடுத்த காத்திருக்கும் ட்ரம்ப், அந்தச் செயற்பாட்டில் அணிக்கு எதிரான பழைய சாடல்களை கடாசிவிடக்கூடும். அதானிக்கும் இலங்கை போன்ற சிறிய நாட்டில் முதலீடு செய்வதைவிட வேறு நாடுகளில் வர்த்தகம் செய்வது மகிழ்வைத் தரக்கூடும்.

இதற்கிடையில் ஒப்பந்தம் முற்றிலுமாக நிறுத்தப்படாமல் தடுக்க இந்த முதலீடு தொடர்பாக இந்தியத் தரப்பும் இலங்கை அரசாங்கமும் அடுத்த வாரம் மற்றொரு பேச்சுவார்த்தைக்குச் செல்ல முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

மன்னாரில் காற்றாலை மின்சாரத் திட்டத்தையும் நாட்டில் இரண்டு பிற மின்மாற்றத் திட்டங்களையும் செயற்படுத்துவது குறித்து தொடர்ந்து பேசுவதற்கும் பரஸ்பர முடிவை எட்ட முடியுமா என்பதைப் பார்க்கவும் கரிசனைகளைப் பற்றி விவாதிக்கவும் அடுத்த வாரம் இந்திய மற்றும் இலங்கைத் தரப்பினர் மூடிய கதவுகளுக்குப் பின்னால் சந்திக்கும் வாய்ப்பு அதிகமென்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் கடந்த புதன்கிழமை இலங்கை முதலீட்டுச் சபைக்கு அதானி நிறுவனத்தால் அனுப்பப்பட்ட இந்தக் கடிதம் எப்படி ஊடகங்களுக்குக் கசிந்ததென்பது பற்றி ஆராயப்பட்டு வருகிறது.

ஒரு பெரியளவிலான வெளிநாட்டு முதலீடு நாட்டிலிருந்து வெளியேறும்போது, முதலில் நிதி அமைச்சுக்கும் ஜனாதிபதிக்கும் தெரிவிக்கப்பட வேண்டும். அதன் பிறகுதான் ஊடகங்களுக்கு அதிகாரபூர்வ அறிக்கை வெளியிடப்படும் .

மிகவும் இரகசியமாக வைக்கப்பட்ட இந்தக் கடிதம் ஊடகங்களுக்கு எப்படி கசிந்தது என்பது குறித்து இலங்கை முதலீட்டுச் சபை மௌனம் காத்து வருகிறது. அதேநேரத்தில் அரசாங்கம் யார் பொறுப்பு என்பதைக் கண்டறிய விசாரணை நடத்தவேண்டுமென்று கோரியுள்ளது.

அதானி கிரீன் எனர்ஜி, சில மாதங்களுக்குள் இலங்கையிலிருந்து வெளியேறும் இரண்டாவது வெளிநாட்டு முதலீடாகும். அவுஸ்திரேலிய நிறுவனமான யுனைடெட் பெற்றோலியம் கடந்த டிசம்பரில் விலகியது.

# சண்டே சாம்பார்



சிவா இராமசாமி
mesivaraj@yahoo.com

### ரணிலின் கூட்டம்

கொழும்பு பிளவர் வீதி அலுவலகத்தில் புதிய ஜனநாயக முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் குழுக்களின் கூட்டம் நடைபெற்றது.

லண்டன் பயணத்தை முடித்துக்கொண்டு செவ்வாய்க்கிழமை பிற்பகல் ரணில் இலங்கை திரும்பி இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

உலகத் தலைவர்கள் உச்சி மாநாட்டுக்குச் சென்ற ஜனாதிபதி, தனது சட்டை பொத்தான்களைத் தவறாகப் போட்டிருப்பதைப் பற்றிய வீடியோவைப் பார்த்தேன். கோப்பிக்கடை நாடகத்தின் அப்புவா கதாபாத்திரம் எனக்கு நினைவுக்கு வந்தது. அதனால்தான், சாமர சம்பத் எம்.பி. அப்படிச் சொன்னதும், அனைவருக்கும் விஷயம் புரிந்தது. யாராலும் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

“சரி, அதை ஒரு கவனக்குறைவு என்று நினைத்து மறந்துவிடுவோம். வழக்கமாக, இதுபோன்ற ஒரு உச்சிமாநாட்டுக்குச் செல்வதன் முக்கியத்துவம் உச்சிமாநாட்டில் பேசுவதை விட, நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து உறவுகளை உருவாக்குவதாகும். அப்போதுதான் நாட்டுக்கு முதலீட்டு வாய்ப்புகள் கிடைக்கும். ஆனால், அநுர அங்கு இரண்டு நாடுகளின் தலைவர்களை மட்டுமே சந்தித்தார். அவர்கள் பாகிஸ்தான் பிரதமர் மற்றும் குவைத் பிரதமர். ஐயோ, இவர்கள் மூலம் எப்படி நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்?” வஜிர அபேவர்தன அதற்கு பதில் கூறினார்.

“அநுர இன்னும் பல நாட்டுத் தலைவர்களைச் சந்தித்திருக்க வேண்டும். என் கருத்துப்படி இது வெளியுறவு அமைச்சின் தவறு. ஐக்கிய அரபு எமிரேட்ஸின் அனுபவம் வாய்ந்த தூதராக செயற்பட்டு வந்த உதய இந்திரரத்ன, ஜனாதிபதியின் விஜயத்துக்கு முன்னதாக இலங்கைக்கு வரவழைக்கப்பட்டார். திறமையானவர்கள் நீக்கப்பட்டு, திறமையற்றவர்களை இதுபோன்ற விஷயங்களில் ஈடுபட விட்டால், நாடு பாதிக்கப்படும்” என்று அநுராத கூறினார்.

‘‘உலகத் தலைவர்கள் உச்சிமாநாட்டுக்கான அழைப்பு மார்ச் 2024இல் பெறப்பட்டது. ஜனாதிபதியாக அந்த அழைப்பை நான் ஏற்கனவே ஏற்றுக்கொண்டிருந்தேன். அந்த உச்சிமாநாட்டில் கலந்துகொள்ள மோடியும் முடிவு செய்திருந்தார். பின்னர், பிரான்ஸில் நடைபெறும் AI உச்சிமாநாட்டுக்கு அனைத்து நாட்டுத் தலைவர்களும் அழைக்கப்பட்டனர். மோடியும் பிரான்ஸுக்குச் சென்றார். நான் பதவியில் இருந்தால், அந்த மாநாட்டுக்குச் சென்றிருப்பேன். ஏனென்றால், AI உச்சி மாநாட்டில், நீங்கள் பல சக்திவாய்ந்த உலகத் தலைவர்களைச் சந்திக்க முடியும். நம்மைப் போன்ற ஒரு நாட்டுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பு’’ என்று ரணில் தெரிவித்தார்.

ரணிலைச் சந்திக்க வந்த அரசியல் தலைவர்கள், உலகத் தலைவர்கள் மாநாட்டில் ஜனாதிபதி ஆற்றிய உரையில் பல பிழைகள் இருந்ததாகச் சுட்டிக்காட்டினர்.

இலங்கை - இந்திய பெருங்கண்டத்தின் முனையில் அமைந்துள்ளதென்று அநுர, அரச தலைவர்கள் உச்சிமாநாட்டில் கூறியுள்ளார். கிரகங்கள் ஒளி ஆண்டுகள் வேகத்தில் பூமியை நெருங்கி வருவதாகவும் அணு ஆயுதத் தாக்குதல்களை விட சைபர் தாக்குதல்கள் அதிக சேதத்தை ஏற்படுத்துவதாகவும் அநுர கூறியுள்ளார்.

“ஒளி ஆண்டு என்பது வேகத்தை அளவிடுவது அல்ல, தூரத்தை அளவிடுவது என்று அநுரவுக்கு ஏன் தெரியாது? இந்திய பெருங் கண்டம் என்று ஒன்று எங்கே இருக்கிறது? படித்த குழந்தைகள் கூட இந்தக் கதைகளைக் கேட்கும்போது தவறாக வழிநடத்தப்படுவார்கள்” என்று கட்சி பிரமுகர்கள் கூற, ரணில் எதுவும் பேசாமல், கிண்டலுடன் திரும்பிப் பார்த்தார்.

அரிசி, தேங்காய் பிரச்சினைகளை விஞ்சி, மின்வெட்டுப் பிரச்சினை இப்போது முன்னுக்கு வந்துவிட்டது. நாட்டுக்கு மின்வெட்டு பொறுப்பை அரசாங்கம் ஒரு குரங்கிடம் ஒப்படைத்திருந்தது.

“நாட்டை சரியாக ஒளிரச் செய்ய முடியவில்லை. ஆனால், நகைச்சுவையை வழங்கிக்கொண்டிருக்கிறார்கள்’’ என்று காஞ்சன இங்கு கூறினார்.

முன்னாள் அமைச்சர் காஞ்சனவின் காலஞ்சென்ற தாயாரின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்த மாத்தறை இல்லத்துக்குச் சென்றார் வஜிர. அப்போது லண்டனிலிருந்த ரணிலைத் தொடர்புகொண்டு, காஞ்சனவிடம் தொலைபேசியைக் கொடுத்து ரணிலின் இரங்கலைத் தெரிவித்தார்.

“இறுதிச் சடங்குக்கு வர முடியாமல் போனதற்கு வருந்துகிறேன், தயவுசெய்து எனது இரங்கலை ஏற்றுக்கொள்ளுங்கள்” என்று ரணில் கூறினார்.

இதற்கிடையில், ஜனவரி 30ஆம் திகதி நடைபெற்ற அரசியல் தலைவர்கள் கூட்டத்தின் மற்றொரு சந்திப்பு வியாழக்கிழமை மாலை கொழும்பிலுள்ள அமரி ஹோட்டலில் ரணிலின் தலைமையில் நடைபெற்றது.

முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, அநுர பிரியதர்ஷன, கம்மன்பில, அசங்க நவரட்ண, ரஞ்சித் மத்துமபண்டார, துமிந்த திசாநாயக்க, ரிஷாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம், திலித் ஜெயவீர, மஹிந்த யாப்பா, லசந்த அழகியவன்ன, நிமல் சிறிபால, விஜயமுனி சொய்சா, சுசில் பிரேமஜயந்த, மனோ கணேசன், பழனி திகம்பரம், நாமல் ராஜபக்ஷ, ஜீவன் தொண்டமான், விஜயதாச ராஜபக்ஷ மற்றும் குழுவினர் இதில் பங்கேற்றனர்.

நாட்டின் எதிர்கால அரசியல் நிலைமை குறித்து விவாதிக்க இந்தச் சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டிருந்தது. மேலும், இந்த விவாதத்தை மிகவும் நடைமுறைக்கு ஏற்றதாக முன்னெடுப்பது என்று எதிர்க்கட்சித் தரப்பில் தீர்மானிக்கப்பட்டது.

### தமிழரசுக் கட்சியின் வழக்கு 4 மாதங்கள் தள்ளிவைப்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கு அதன் எதிராளி ஒருவரை ஆள்மாற்றம் செய்ய இடமளிப்பதா என்பது குறித்து ஆராய்வதற்காக எதிர்வரும் ஜூன் மாதம் நான்காம் திகதிக்குத் தள்ளிவைக்கப்பட்டது.

அந்தத் திகதியில் எதிராளி ஒருவரை மாற்றுவது குறித்துத் தீர்மானிக்கப்படும். அதன் பின்னரே வழக்கின் விசாரணை பற்றி ஆராயப்படும்.

கடந்த வியாழன் இந்த வழக்கு திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி பயஸ் ரஸாக் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே வழக்கு இவ்வாறு தள்ளிவைக்கப்பட்டது.

வழக்கை இணக்கமாக முடிவுறுத்துவதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்வதற்காகவே வழக்கு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

எனினும், வழக்கின் எதிராளிகளான சிறீதரன் எம்.பி., குகதாசன் எம்.பி. மற்றும் முன்னாள் எம்.பி. யோகேஸ்வரன் ஆகியோர் சார்பில் வழக்கை முடிவுறுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை குறித்து இன்றைய விசாரணையில் கடும் விவாதங்கள் இடம்பெற்றன.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கட்சியின் மத்திய குழுவில் ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டு, அது பற்றி தாம் ஒரு எதிராளி என்ற முறையில் நீதிமன்றத்துக்கு விவரமாக விடயங்களைச் சமர்ப்பித்திருக்கையில், மேற்படி மூன்று எதிராளிகளும் கட்சிக்குத் தெரியாமல், கட்சியை இருட்டில் வைத்துக்கொண்டு தம்பாட்டில் ஒரு திட்டத்தை, அதுவும் முன்னைய இணக்க ஏற்பாடுகளுக்கு மாறாக முன்வைத்து, இணக்கத்துக்கான வாய்ப்பை வேண்டுமென்றே குழப்பியடிக்க முயன்றுள்ளனர் என்று எதிராளிகளில் ஒருவரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

சுமந்திரன் தமது தரப்பில் தாமே முன்னிலையானார். கட்சியின் செயலாளர் மருத்துவர் ப. சத்தியலிங்கம் மற்றும் நிர்வாகச் செயலாளர் குலநாயகம் ஆகியோர் சார்பில் சட்டத்தரணி சயந்தன் முன்னிலையானார்.

கட்சியின் கொழும்புக் கிளையின் தலைவர் இரத்தினவடிவேல் சார்பிலும் சட்டத்தரணி ஒருவர் முன்னிலையானார்.

சுமந்திரன், சத்தியலிங்கம், குலநாயகம், இரத்தினவடிவேல் ஆகிய எதிராளிகள் கட்சியின் மத்திய குழுத் தீர்மானப்படி 156 உறுப்பினர்களுடன் கட்சியின் மாநாட்டை நடத்துவதற்கான இணக்கத் திட்டத்துக்குத் தாங்கள் சம்மதிக்கின்றார்கள் எனத் தெரிவித்தனர்.

அதேசமயம் சிறீதரன், குகதாசன், யோகேஸ்வரன் ஆகியோர் 324 உறுப்பினர்களுடன் கட்சியின் மத்திய குழுவைக் கூட்டும் திட்டத்தை வலியுறுத்தினர்.

இதையே ஆரம்பத்தில் எதிராளியான சுமந்திரன் தெரிவித்திருந்தார் என்று அவர்கள் மூவர் சார்பிலும் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி விவேகானந்தன் புவிதரன் தெரிவித்தார்.

வழக்கின் எதிராளிகளுக்கிடையே கருத்து முரண்பாடு இருப்பதை விசனத்துடன் சுட்டிக்காட்டிய வழக்காளி தரப்பு சட்டத்தரணி, இக்காரணத்தால் இணக்கமான தீர்வு காண்பதற்கான வாய்ப்புகள் அருகி உள்ளன என்றும் வழக்கு விசாரணை நடத்தியே முடிவு காண வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார். இச்சமயத்தில் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வழக்கின் எதிராளிகளில் ஒருவரான கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா அப்பதவியிலும் இல்லை, அவர் உயிரோடும் இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது. அதனால், அந்த இடத்துக்குப் பதில் தலைவரின் பெயரை வழக்கில் எதிராளியாகச் சேர்ப்பதா என்பது குறித்துத் தீர்மானிப்பதற்காக வழக்கு ஜூன் 04ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அந்தத் திகதியில் கட்சியின் பதில் தலைவர் எனக் கருதப்படுபவர் வழக்காளியாகச் சேர்க்கப்பட வேண்டுமா என்பது குறித்து தீர்மானிக்கப்படும் என நீதிமன்றம் தெரிவித்தது.

அந்த விடயம் தீர்மானிக்கப்பட்ட பின்னரே வழக்கை விசாரிப்பது குறித்த முடிவை நீதிமன்றம் எடுக்கும் என்றும் கூறப்படுகின்றது.

அதனால் இந்த வழக்கு விசாரணைக்கு வர நீண்ட காலம் செல்லும் என்று சட்ட வட்டாரங்கள் குறிப்பிட்டன.

### அகிலன் முத்துக்குமாரசாமிக்கு எதிரான வழக்கு ஏப்ரல் 29ஆம் திகதி விசாரணை

புதிய சுதந்திரன் இணையப் பத்திரிகையின் வெளியீட்டாளர் அகிலன் முத்துக்குமாரசாமிக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு விசாரணையை எதிர்வரும் ஏப்ரல் 29ஆம் திகதி முன்னெடுப்பதற்குத் திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் வியாழன் முடிவு செய்தது.

தமிழரசுக் கட்சி தொடர்பான வழக்கு கடந்த வியாழன் நீதிபதி பயஸ் ரஸாக் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது இந்த விடயம் தீர்மானிக்கப்பட்டது.

இந்த வழக்கின் எதிராளிகளில் ஒருவரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தொடர்பில் அகிலன் முத்துக்குமாரசாமி அந்தப் பத்திரிகையில் வரைந்த செய்திக் கட்டுரை நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கையாகுமென வழக்கின் எதிராளிகளில் ஒருவரான சுமந்திரன் குற்றஞ்சுமத்தியுள்ள நிலையில், அந்த விடயம் குறித்து விசாரணை நடத்துவதற்கு நீதிமன்றம் திகதி நிர்ணயம் செய்தது.

இந்த விடயத்துக்காக வழக்கின் எதிராளியாகச் சுட்டப்பட்டுள்ள அகிலன் முத்துக்குமாரசாமி நீதிமன்ற விசாரணைக்கு சமுகம் தரவில்லை. எனினும், அவர் சார்பில் சட்டத்தரணி பிரசன்னமாகியிருந்தார்.

வழக்குத் தவணைக்கு அகிலன் முத்துக்குமாரசாமி வருகை தராத நிலையில், அவருக்கு எதிராகப் பிடிவிறாந்து பிறப்பிக்கச் சட்டத்தரணி சுமந்திரன் கோரினார்.

எனினும், அவர் வெளிநாட்டில் இருக்கிறார் எனவும் அவர் பயணம் செய்ய உகந்த நிலையில் இல்லை என்றும் தெரிவிக்கும் மருத்துவச் சான்றிதழை அவரது சட்டத்தரணி நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

மருத்துவச் சான்றிதழின் அடிப்படையில் அவர் நீதிமன்றத்தில் பிரசன்னமாக இல்லாமல் இருக்க அனுமதிப்பது என நீதிமன்றம் முடிவு செய்தது.

### இலங்கை சட்டத்தரணிகள் சங்க நிலைப்பாட்டில் அதிருப்தி

சட்ட மா அதிபர் அநுர பி மெதகொட செயற்பட்ட விதத்தை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நியாயப்படுத்தியமை குறித்து படுகொலை செய்யப்பட்ட சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் மகள் கடும் விசனமும் அதிருப்தியும் வெளியிட்டுள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கபடநாடகமாடுகின்றார். இரட்டை நிலைப்பாட்டை பேணுகின்றாரென தனது கடிதத்தில் தெரிவித்துள்ள அஹிம்சா விக்கிரமதுங்க, சட்ட மா அதிபர் தனது தந்தையின் கொலை விசாரணைகளுக்கு வேண்டுமென்றே இடையூறு விளைவிக்கின்றார் எனத் தெரிவித்துள்ளார்

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவருக்கு எழுதிய கடிதத்திலேயே அஹிம்சா விக்கிரமதுங்க தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர், பிரதமர், நீதியமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கும் இந்தக் கடிதத்தை அவர் அனுப்பிவைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்குள்ள உரிமையைப் பாதுகாப்பதற்காகவும் எங்கள் குற்றவியல் நீதித்துறையின் நேர்மைத் தன்மையை பாதுகாப்பதற்காகவும் துணிச்சலான நடவடிக்கைகளை எடுத்தமைக்காக ஜனாதிபதியை அச்சுறுத்தும் விதத்தில் நீங்கள் 07-02-25 எழுதிய கடிதத்தை பார்த்து கவலையடைந்தேன்.

2024 ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்பதில் செயற்படுவதில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன்னணியில் நிற்பதாக நீங்கள் தெரிவித்திருந்தீர்கள்.

நீங்கள் விசேடமாக எனது தந்தை லசந்த விக்கிரமதுங்கவின் கொலை குறித்து குறிப்பிட்டிருந்தீர்கள். மிகச்சமீபத்தில் பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்க விவகாரம் தொடர்பில் நாங்கள் கவனம் செலுத்தியிருந்தோம். அவர் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினரும் கூட என நீங்கள் தெரிவித்திருந்தீர்கள்.

2009ஆம் ஆண்டு ஜனவரி 08ஆம் திகதி பரவலாகக் கண்டிக்கப்பட்ட அரசாங்கத்தின் படுகொலையால் அவரின் உயிர் பறிக்கப்படும் வரை எனது தந்தை இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினராக விளங்கினார்.

அவர் பாசத்துக்குரிய தந்தை, கணவர், மகன், சகோதரர். அவரது பத்திரிகைகள் சர்வதேச அளவில் வாசிக்கப்பட்டன.

எனினும், அவர் பணிக்குச் செல்கையில் படுகொலை செய்யப்பட்டு 16 வருடங்களின் பின்னரும் நீங்கள் அவரை பற்றியோ அவருக்கு நீதி வழங்கப்படவேண்டும் என்பது குறித்தோ ஒரு வார்த்தை கூட குறிப்பிடவில்லை.

எனது தந்தையின் வழக்கு தொடர்பில் சட்ட மா அதிபர் அலுவலகம் அதனது அதிகாரத்தை வெளிப்படையாக துஷ்பிரயோகம் செய்யும்போது சட்ட மா அதிபர் அலுவலகத்தின் அதிகாரத்தைக் குறைமதிப்புக்கு உட்படுத்துவதற்கான முயற்சிகளென நீங்கள் எதிர்ப்புத் தெரிவிப்பது பாசாங்குத்தனமானது.

உங்கள் கட்சிக்காரர்களில் ஒருவரின் நலன்களென வரும்போது நீங்களும் உங்கள் சட்டத்தரணிகள் சங்கமும் வேறுபட்ட நிலைப்பாட்டைக்கொண்டிருக்கின்றீர்கள்.

2022 ஒக்டோபர் 12ஆம் திகதி விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்ட பின்னர் சுட்டுக்கொல்லப்பட்ட மகேஸ் இந்திக பிரபாத்தின் சார்பில் நீங்கள் ஆஜராகியிருந்தீர்கள்.

உங்கள் கட்சிக்காரர் கொலை செய்யப்பட்டாரெனத் தீர்ப்பளித்த பலப்பிட்டிய நீதவான் இது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டுமென உத்தரவிட்டார்.

எனது தந்தை தொடர்பான வழக்கை போல இந்த வழக்கையும் தொடரவேண்டிய அவசியமில்லையென சட்ட மா அதிபர் 2024 ஆகஸ்ட் 27ஆம் திகதி தீர்மானித்தார். பெருமளவு ஆதாரங்கள் காணப்பட்ட போதிலும் அவர் இவ்வாறு தீர்மானித்தார்.

உங்கள் கட்சிக்காரரை சுட்டுக்கொன்ற விசேட அதிரடிப்படையைச் சேர்ந்தவருக்கு எதிரான வழக்கை தொடரவேண்டிய அவசியமில்லை என சட்ட மா அதிபர் தீர்மானித்தாரென்று லசந்தவின் புதல்வி சுட்டிக்காட்டியுள்ளார்.



# மின்வெட்டைத் தடுக்க நடவடிக்கை வேண்டும்

**உமர் அலி உஸ்மான்**

மின் கட்டணத்தை 33 சதவீதத்தால் குறைக்க முடியுமென கடந்த மாதம் அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருந்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்த விடயமானது,

"மின் கட்டணத்தை 33 சதவீதத்தால் குறைக்க முடியும். இந்த நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை. எதிர்வரும் 6 மாதங்களுக்கு மின் கட்டணத்தை அதிகரிக்காமல் இருப்பதற்கான நடவடிக்கையை நாம் இப்போது எடுத்துள்ளோம். அதன் பின்னர் மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும் வகையில் கட்டணத் திருத்ததை மேற்கொள்வோம். நாம் அரசாங்கத்தைப் பொறுப்பேற்றபோது இலங்கை மின்சார சபையில் மக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தில் பாரிய தொகை செலவிடப்பட்டிருந்தது. எனவே, தற்போது மின் கட்டணத்தை அதிகரிக்காமல் பேணுவதற்கான நடவடிக்கைகளையே மின்சார சபை முன்னெடுக்க வேண்டியுள்ளது. எதிர்வரும் 6 மாதங்களுக்கு அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

கிடைக்கும் முதலாவது சந்தர்ப்பத்திலேயே மின் கட்டணத்தில் திருத்தங்களை மேற்கொண்டு மக்களுக்கு நிவாரணத்தை வழங்குவோம். மின்கட்டணத்தை 33 சதவீதத்தால் குறைக்க முடியுமென்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாகவுள்ளோம். கடந்த அரசாங்கத்தால் மக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் தொடர்பான தரவை அடிப்படையாகக்கொண்டே நாம் அந்தக் கருத்தை முன்வைத்தோம். மின்சார சபை ஊழியர்களுக்கு எவ்வித விசேட கொடுப்பனவையும் தற்போது நாம் வழங்கவில்லை" - எனத் தெரிவித்துள்ளார்.

ஆனால், இன்று நாட்டில் இல்லாதவைகளின் பட்டியலில் அரிசி, தேங்காய், உப்பு போன்றவற்றை பின்தள்ளி மின்சாரமும் இணைந்துள்ளதாகக் கிண்டல் பேச்சுகள் ஆரம்பித்துள்ளன. ஆனாலும் உண்மை நிலையை நாம் ஆராயவேண்டியவர்களாக இருக்கிறோம்.

கடந்த வாரம் குரங்குச் சேட்டையில் சிக்கி முழு நாடும் மின்சாரமில்லாது திணறியது. சுருங்கக் கூறுவதாக இருந்தால் இன்று உலகம் மின்சாரத்தில்தான் இயங்குகிறது. ஐந்து நிமிடம் மின்சாரம் தடைப்பட்டால் தலையை பிய்த்துக்கொள்ளும் நிலைக்கு இன்று இலங்கையர்கள் தள்ளப்பட்டுள்ளனர். ஆனால், அன்று ஏறத்தாழ முழு நாளும் மின்சாரம் இல்லாத நிலையில் சிக்கிய இலங்கை திணறிய விதமே பரிதாபமாக இருந்தது.

அன்று (பெப்ரவரி 09) முற்பகல் 11.30 அளவில் ஏற்பட்ட இந்தத் திடீர் மின் விநியோகத் தடையானது மாலை 4.30 அளவில் வழமைக்குக் கொண்டுவரப்பட்டது. இதனால் இலங்கை பல்வேறு அசௌகரியங்களை நேரடியாகச் சந்தித்தது. பாணந்துறை உப மின் உற்பத்தி நிலையக் கட்டமைப்பில் குரங்கு பாய்ந்தமையே இந்த மின்சார தடைக்கான காரணமென மின்சக்தி அமைச்சர் குமார ஜயகொடி ஊடகங்களுக்கு அன்றைய தினம் தெரிவித்திருந்தார்.

அப்போது பாணந்துறை பகுதியிலுள்ள மின் பிறப்பாக்கியொன்றில் குரங்கொன்று மோதியுள்ளதையடுத்து ஏற்பட்ட கோளாறே இதற்கான காரணமாகியுள்ளது. அதனாலேயே நாடு முழுவதும் மின்சாரம் தடைப்பட்டுள்ளதென மின்சக்தி அமைச்சர் அன்று குறிப்பிட்டார். இதுபோன்றுதான் தேங்காய்த் தட்டுப்பாட்டுக்கும் குரங்குகள் காரணமென தேசிய மக்கள் சக்தி அரசின் அமைச்சர்கள் அறிக்கை விட்டார்கள். குரங்குகளை நாடுகடத்தும் வரை குரங்கு சேட்டை இந்த அரசில் தொடருமா என கேள்வியெழுப்புகிறது எதிரணி.

குரங்கு பாய்ந்தமையே மின்சாரம் தடைப்படக் காரணமென மின்சக்தி அமைச்சர் கூறிய நிலையில், பாணந்துறை மின் உற்பத்தி நிலையத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர் அதனை மறுத்திருந்தார். மின் பிறப்பாக்கி கட்டமைப்பில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்ட அதிகாரியொருவரே இவ்வாறு அதனை நிராகரித்திருந்தார். இதன்மூலம் அமைச்சர் எதையோ மறைக்க எத்தனித்து மூக்குடைந்தமை வெளிப்பட்டது.

''வழமையாக குரங்குகள் பாயும். குரங்குகள் பாயும்போது செயலிழந்து மீண்டும் வழமைக்குத் திரும்பிவிடும். ஆனால், குரங்கு பாயவில்லை. அப்படியென்றால், குரங்கின் உடல் இருக்க வேண்டும் அல்லவா? குரங்கைக் காணவில்லை. கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் மூன்று குரங்குகள் பாய்ந்தன. உடனே இறந்துவிட்டன. அதைவிடுத்து இந்த இடத்தில் பாயவில்லை. குரங்கு பாயும் நேரங்கள் இருக்கின்றன. எனினும், இன்று பாயவில்லை'' - என பாணந்துறை மின் உற்பத்தி நிலையத்தின் பாதுகாப்பு அதிகாரி தெரிவித்திருந்தார். இதன்மூலம் பல கேள்விகள் நமக்கு எழுவதைத் தவிர்க்க முடியாதுள்ளது.

இந்நிலையில், கடந்த ஒன்பதாம் திகதி நாடளாவிய ரீதியில் முன்னறிவித்தலின்றி முற்பகல் 11.15 மணியளவில் திடீர் மின் வெட்டு ஏற்பட்டுள்ளதாகவும் வழமைக்குக் கொண்டுவரும் நடவடிக்கையில் ஊழியர்கள் இணைந்துள்ளதாகவும் இலங்கை மின்சார சபை அறிவித்து தடைப்பட்ட மின்சார விநியோகம் மீண்டும் கிடைக்கும் வரை, வீடுகளின் கூரைகளில் பொருத்தப்பட்டுள்ள சூரிய மின்கல சக்தியைப் பயன்படுத்துவோர் அன்று (09) மாலை 4.00 மணிவரை தேசிய மின் கட்டமைப்பிலிருந்து தங்கள் இணைப்புகளைத் துண்டிக்குமாறு மின்சக்தி அமைச்சர் கேட்டுக்கொண்டிருந்தார்.

போதாக்குறைக்கு நாடு முழுவதும் மின்சாரம் மீண்டும் கிடைக்கும் வரை பொதுமக்கள் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு இலங்கை தேசிய நீர்வடிகாலமைப்புச் சபை மக்களைக் கேட்டுக்கொண்டிருந்தது. அதுபோல ரயில் நிலையங்களில் அறிவிப்புகளை வெளியிட முடியாத நிலையில், ரயில்களை அடையாளம் காண முடியாமல் பயணிகள் சில சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. வாகனப் போக்குவரத்திலும் கூட பல ஆபத்துகள் நிறைந்திருந்தன. இப்படியாக சிக்கல் நிறைந்த அன்றைய நாளை வைத்து அரசும் எதிரணியும் அரசியல் செய்தார்களே தவிர, உருப்படியாக எதையும் செய்ததாக இல்லை.



ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்களில் மின்சார தேவை குறைவாக இருப்பதும் மொத்த மின்சார உற்பத்தியில் பெரும் சதவீதத்தை வகிக்கும் ஒப்பீட்டளவில் நிலையற்ற சூரிய மின் உற்பத்தியும் முழு மின்சார அமைப்பின் வீழ்ச்சிக்கான முதன்மைக் காரணங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்திருந்தது. இருப்பினும், இந்த நிலைமையை முறையான விசாரணை மூலம் உறுதிப்படுத்த வேண்டுமென்று சங்கம் சுட்டிக்காட்டியிருந்தமையும் இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

நாடு முழுதுமுள்ள மின்சார அமைப்பு சரிந்தது. ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வேளைகளில் மின்சாரத் தேவை குறைவாக இருப்பதும் மொத்த மின்சார உற்பத்தியில் பெரும் சதவீதம் ஒப்பீட்டளவில் நிலையற்ற சூரிய சக்தியிலிருந்து உற்பத்தி செய்யப்படுவதும் இதற்கு முதன்மையான காரணமென அடையாளம் காணப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த நிலைமையை முறையான விசாரணை மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

பாணந்துறை துணை மின்நிலையத்தின் 33 33 kV Bus Bar நிலையத்தில் ஏற்பட்ட திடீர் மின் தடையால் குறைந்த மின்சார தேவை மற்றும் அதிக சூரிய மின் உற்பத்தி காரணமாக நிலையற்றதாக இருந்த தேசிய மின் அமைப்பு சமநிலையற்றதாக மாறியது. மேலும் தானியங்கி அவசரகால முறிவு மேலாண்மை செயல்முறையால் அமைப்பை மீட்டெடுக்க முடியவில்லை. இதன் விளைவாக நாடு முழுவதும் மின் தடை ஏற்பட்டது.

முந்தைய பல ஞாயிற்றுக்கிழமைகளில் தேசிய மின்சார அமைப்பு இத்தகைய ஆபத்தான சூழ்நிலையை நெருங்கி வந்தாலும் இலங்கை மின்சார சபையின் அமைப்பு கட்டுப்பாட்டுப் பிரிவின் திறமையால் முழுமையான மின் தடை தடுக்கப்பட்டது. இருப்பினும், அன்றைய தேசிய மின்சார அமைப்பின் மோசமான நிலை காரணமாக மொத்த மின்வெட்டைத் தடுத்திருக்க முடியாதுபோனதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்காலத்தில் இதுபோன்ற மின்வெட்டு ஏற்படாமல் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க பேட்டரி சேமிப்பு வசதிகள் மற்றும் பம்ப் சேமிப்பு நிலையங்கள் தொடர்பான திட்டங்களை விரைவுபடுத்த இலங்கை மின்சார சபையும் எரிசக்தி அமைச்சும் ஏற்கனவே இணைந்து செயற்பட்டு வருகின்றன. இலங்கை மின்சார சபையின் அமைப்பு கட்டுப்பாட்டுப் பிரிவு மற்றும் பிற துறைகள் முழு மின்சார அமைப்பையும் மீட்டெடுக்க விரைவாகச் செயற்பட்டன. "சில கட்சிகள் இது தொடர்பாக சில தவறான கருத்துகளைப் பரப்ப முயற்சிப்பதையும் நாங்கள் கவனித்துள்ளோம்" என்ற கருத்துகள் மறுக்க முடியாத உண்மையாகும்.

ஆனாலும் தேசிய மக்கள் அரசாங்கத்தின் வழக்கம் மாறாமல் மின்தடைக்கு முன்னைய அரசாங்கங்கள்தான் காரணமென அமைச்சர் குமார ஜெயக்கொடி பழியை இலகுவாக மாற்றிப்போட்டுக் கொண்டார். அன்று ஏற்பட்ட திடீர் மின்தடையால் தொழிற்சாலைகள், முதலீட்டு வலயங்கள் மற்றும் பிற வணிக நிலையங்களின் செயற்பாடுகளும் மக்களின் அன்றாட வாழ்க்கையும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தன.

மின்சார விநியோகம் தடைப்பட்டதைத் தொடர்ந்து போக்குவரத்து சமிக்ஞை அமைப்புகள் செயலிழந்ததால் கொழும்பு, கண்டி மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகள் உட்பட பல பகுதிகளில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. இவற்றையெல்லாம் பற்றி அலட்டிக்கொள்ளாமல் தேசிய மின் கட்டமைப்பின் ஸ்திரத்தன்மையைப் பராமரிப்பதில் உரிய கவனம் செலுத்தத் தவறிய முந்தைய அரசாங்கங்களின் குறுகிய பார்வை கொண்ட செயல்களாலும் தொழில்நுட்பத்தைப் பற்றிய புரிதல் இல்லாத மோசமான வழிகாட்டுதலாலும் இந்த நிலைமை ஏற்பட்டதாக ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. இருப்பினும், இந்த நிலைமைக்குப் பின்னால் உள்ள காரணங்களை நாங்கள் முழுமையாக ஆராய்ந்து, இது மீண்டும் நிகழாமல் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுப்போமென கடமைக்கு அறிக்கை விட்டார் அமைச்சர் குமார ஜெயக்கொடி

மின் விநியோகத் தடையால் பெரிதும் இன்னல்களுக்கு முகங்கொடுத்த மக்களுக்கு எமது வருத்தத்தை தெரிவித்துக்கொள்கிறோம் என்றும் மேலும், மின்சார அமைப்பை மீட்டெடுப்பதில் கடினமாக உழைத்து எங்களுக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி என்றும் அரசாங்கம் கூறினாலும் அன்றைய இழப்புகளை சீரமைப்பது யார்? நஷ்டங்களை ஈடுகட்டுவது எப்படி? நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக மூன்று மின் பிறப்பாக்கிகளும் செயலிழந்ததாக இலங்கை மின்சார சபையின் பேச்சாளர் ஒருவர்



தெரிவித்திருந்த கருத்தை ஆராய்ந்து மின்சக்தி அமைச்சு எடுக்கப்போகும் தீர்வென்ன?

நுரைச்சோலை நிலக்கரி அனல் மின் நிலையத்தை மீண்டும் மின் அமைப்புடன் இணைக்கும் வரை மின்வெட்டு விதிக்கலாமா வேண்டாமா என்பது குறித்து முடிவு செய்யப்படும் என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சிறப்பு கலந்துரையாடல்கள் கூட இலங்கை மின்சார சபையில் நடைபெற்று வருகிறது. இருப்பினும், பாதுகாப்பு அமைப்பு செயற்படுத்தப்பட்டதால் மூடப்பட்டிருந்த நுரைச்சோலை நிலக்கரி மின் நிலையத்திலுள்ள 3 ஜெனரேட்டர்களை மீண்டும் இயக்க சுமார் 4 நாட்களாகும் என்று கூறப்படுகிறது. அதன் பின்னரும் அது சீராக இயங்குமா என்பதை உறுதிப்படுத்த வேண்டிய தேவை உரிய அதிகாரிகளுக்கு இருக்கிறது.

நாட்டில் ஏற்பட்ட மின்வெட்டுக்கு முதலில் குரங்கு மீது பழி சுமத்திய அரசாங்கம், பின்னர் முந்தைய அரசாங்கங்கள் மீது பழி சுமத்தியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். ஆனால், உண்மையான பிரச்சினை என்ன என்பதை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்வெட்டு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது எக்ஸ் கணக்கில் பதிவொன்றை இட்டு இதனைத் தெரிவித்துள்ளார். சூரிய மின் உற்பத்தியை அதிகரிக்கத் தவறியதும் குறைந்த தேவையுள்ள காலங்களை நிர்வகிக்கத் தவறிய மோசமான நிர்வாகமும்தான் மின்தடைக்கான உண்மையான காரணமென எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

மின்தடை தொடர்பான உண்மை நிலையை இதுபோன்ற தவறான தகவல்கள்மூலம் மறைக்க முடியாதென்றும் மின் துறையில் சீர்திருத்தங்கள் மூலம் மட்டுமே அதை நிவர்த்திசெய்ய முடியுமென்றும் சஜித் பிரேமதாச தெரிவித்தார். அத்தகைய அமைப்பில் மாற்றம் மற்றும் வெளிப்படைத்தன்மை மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமென்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் கூறுகிறார். இது தொடர்பில் ஆளுந்தரப்பு "ஆடு திருடியவன் கூட்டத்தில் இருப்பதுபோல" இருந்து கொண்டிருக்கிறது.

நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின் துண்டிப்பால் ஏற்பட்ட நஷ்டம் தொடர்பில் மதிப்பீடுகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். மின்சக்தி அமைச்சும் இலங்கை மின்சார சபையும் மின்சார சபையின் பொறியியலாளர் சங்கமும் மின்வெட்டு தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளன. இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படும்போது அவற்றுக்கு நிரந்தரத் தீர்வை வழங்குவதற்குரிய தரப்புகள் நடவடிக்கை எடுத்துள்ளன. குறுகிய கால நடவடிக்கைகள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

மின் தடையால் ஏற்பட்ட நஷ்டம் தொடர்பில் இதுவரையில் மின்சார சபை எவ்வித அறிக்கையையும் சமர்ப்பிக்கவில்லை எனவும் நஷ்டம் தொடர்பில் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நுரைச்சோலை நிலக்கரி அனல் மின் நிலையத்தால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்க முடியுமென இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக பல மாத காலம் தொடர் மின்சார தடையை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்ததென்பதையும் அதனால் 2022ஆம் ஆண்டு காலப் பகுதியில் நாளொன்றுக்கு சுமார் அரைநாளுக்கும் அதிக மின்சாரத் தடை அந்த காலப்பகுதியில் ஏற்படுத்தப்பட்டமையால், நாடு முழுவதும் வாழும் மக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர் என்பதையும் நாம் மறக்க முடியாது.

இந்நிலையில், ஜனாதிபதியாக நாட்டைப் பொறுப்பேற்ற ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதையடுத்து மின்சாரத் தடை படிப்படியாகக் குறைக்கப்பட்டு மீண்டும் மின்சார விநியோகம் முழுமையாக வழமைக்குக் கொண்டுவரப்பட்டது.

எவ்வாறாயினும், 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 09ஆம் திகதி கொத்மலை முதல் பியகம வரையான மின்சார விநியோகக் கட்டமைப்பில் மின்னல் தாக்கியதையடுத்து நாடு முழுவதும் மின்சாரத் தடை ஏற்பட்டதென்பதையும் நாம் மறக்க முடியாது.

# தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வில் சுபீட்சம் ஏற்படுமா?



-மலைவாசன்-

தற்போது இந்த நாட்டை ஆட்சிபுரியும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் பெருந்தோட்ட மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் சமந்த வித்யாரத்ன நடப்பு வருடத்தில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 4700 வீடுகள் கட்டப்பட்டு அவர்களிடம் ஒப்படைக்கப்படுமென அறிவித்துள்ளார். மேலும், கெப்பெட்டிப்பொல பகுதியிலுள்ள ஒரு தோட்டத்துக்கு அண்மையில் சென்றபோதும் பிறிதொரு சந்தர்ப்பத்தில் நுவரெலியா மாவட்டத்திலுள்ள கபரகல தோட்டத்துக்குச் சென்றபோதும் தோட்டத் தொழிலாளர்கள் லயன் அறைகளில் எவ்வாறு வாழ்கிறார்கள் என்பதை நேரில் பார்த்ததாகவும் அவர்கள் வாழும் நிலை தனக்கு மிகவும் மனவேதனையை ஏற்படுத்தியதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

உண்மையை உள்ளது உள்ளபடி குறிப்பிடின், இந்த நாட்டில் வாழும் இந்திய வம்சாவளி தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்த நாட்டில் இருநூற்றொரு வருட வரலாறுள்ளது. ஆனால், அவர்களில் கணிசமான தொகையினர் இன்னும் ஆங்கிலேயரால் கட்டப்பட்ட லயன் அறைகளிலேயே பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங் கொடுப்பவர்களாக வாழ்கிறார்கள். பல பெருந்தோட்டங்களில் தோட்டத் தொழிலாளர்களுக்கு கழிவறை வசதிகள் கூட செய்து கொடுக்கப்படாத சூழ்நிலையும் காணப்படுகிறது.

இன்னொரு விதத்தில் தோட்டத் தொழிலாளர்களின் லயன் அறைகள் லயன்களில் அடுத்தடுத்து அமைக்கப்பட்டுள்ளதனால் தீ விபத்துகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் முழு லயன்களுமே முற்றுமுழுதாக எரிந்து சாம்பரான சம்பவங்கள் நாடளாவிய ரீதியில் பல பிரதேசங்களிலும் முன்னைய காலங்களில் நிகழ்ந்துள்ளமையை பத்திரிகைகள் வாயிலாக அறிய முடிந்தது.

தோட்டத் தொழிலாளர்களின் லயன் அறை குடியிருப்புகள், மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட சந்தர்ப்பங்களிலும் அவை முற்றுமுழுதாக பாதிக்கப்பட்டமை கொழும்பு மாவட்டத்தில் அவிசாவளை நகரத்துக்கு அருகிலுள்ள பென்றித் தோட்ட கீழ்ப்பிரிவில் புறத்தோட்டத் தொழிலாளர் குடும்பங்களின் குடியிருப்புகள் குளோரின் வாயு கசிவால் பாதிக்கப்பட்டு அந்த மக்கள் பல வருடங்களாக பாதிக்கப்பட்ட லயன் அறை குடியிருப்புகளிலேயே பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பவர்களாக மிகுந்த மன வேதனையுடன் வாழ்கிறார்கள்.

ஆகவே, பெருந்தோட்ட மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் சமந்த வித்யாரத்ன இந்த வருடம் கட்டவுள்ளதாக அறிவித்துள்ள 4,700 வீடுகளில் மேலே குறிப்பிட்டுள்ளவாறு பாதிக்கப்பட்டு தற்காலிக முகாம்களிலும் உறவினர்களின் வீடுகளிலும் கூடாரங் களிலும் பாதிப்புக்குள்ளான லயன் அறை குடியிருப்புகளிலும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்ப வர்களாக வாழும் தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு முன்னுரிமை அளித்து அவர்களுக்கு வீடுகளை நிர்மாணித்து



பகிர்ந்தளிக்க வேண்டும்.

அவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டு வீடுகள் எஞ்சியிருப்பின் அந்த வீடுகளை நிர்மாணித்து நாடளாவிய ரீதியில் பெருந்தோட்டங்களில் வீட்டுக் கூரைகள், சுவர்கள், கதவுகள், சேதமடைந்துள்ள நிலையில் வாழும் தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும். நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இணைய யுகமென வர்ணிக்கப்படும் இந்த இருபத்தோறாம் நூற்றாண்டில் மனித வாழ்வில் பல்வேறு வியக்கத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

ஆனால், இந்த நாட்டில் காலடி வைத்த காலந்தொட்டு ஐந்து பரம்பரைகளைக் கண்டுள்ள, தமது கடுமையான உழைப்பின் மூலம் இந்த நாட்டுக்குக் கிடைக்கும் அந்நிய செலாவணியை கொவிட்-19 கொரோனா நோய் தொற்றால் இந்த நாடு முற்று முழுதாக முடக்கப்பட்டிருந்த காலகட்டத்திலும் பொருளாதார நெருக்கடியால் சிக்கித் தவித்தபோதும் தோட்டத் தொழிலாளர்கள் மாத்திரமே இந்த நாட்டுக்குத் தமது உழைப்பை தங்கு தடையின்றி நல்கி இந்த நாட்டுக்கு வளம் சேர்த்தார்கள்.

எனவே, லயன் அறை முறையிலான வீடுகளை நிர்மாணித்து தீ விபத்துகள், இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அவர்களை நிலை குலையச் செய்யாது அவர்களுக்கு தனித்தனி வீடுகளை நிர்மாணிக்க பெருந்தோட்ட மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் சமந்த வித்யாரத்ன நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு தனித்தனி வீடுகளை நிர்மாணித்தால் அதிகளவு நிலப்பரப்பு தேவைப்படும் என்பதால் தோட்டத் தொழிலாளர்களுக்கு மாடி வீடுகளை நிர்மாணிப்பது உகந்ததாக இருக்குமென அமைச்சர் சமீபத்தில் குறிப்பிட்டிருந்தமையை பத்திரிகைகள் வாயிலாக அறிய முடிந்தது. பெருந்தோட்டங்கள் மலைப் பிரதேசங்களில் அமைந்துள்ளதனால் மாடி வீட்டுத் திட்டம் பயனுள்ளதாக அமையாது.

தற்போதைய பாராளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்தியின் ஆறு மலையக பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளார்கள். அவர்கள் அனைவரும் பெருந்தோட்ட மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்னவுடன் அடிக்கடி தொடர்புகொண்டு தோட்டத் தொழிலாளர்களுக்கான 4,700 வீடுகளை நிர்மாணிக்கும் பணியை துரிதப்படுத்த வேண்டும்.

முன்னைய காலங்களில் பழனி திகாம்பரம் தவிர்ந்த பெருந்தோட்ட மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர்களாகத் திகழ்ந்தவர்கள் வாய்ச்சொல் வீரர்களாகவே செயற்பட் டார்கள். அவர்கள் மூலம் தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிகளவு பயன்கள் கிட்டாதமையே வரலாறாக உள்ளது.

புதிய வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு அந்த வீடுகளில் தோட்டத் தொழிலாளர் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டால் பின்பு அவர்கள் முன்பு வாழ்ந்த குடியிருப்புகளை இடித்து நிர்மூலமாக்கி அந்த நிலப்பரப்புகளை பெருந்தோட்டக் கம்பனிகள் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுப்பின் தொடர்ந்தும் தங்குதடையின்றி வருமானத்தை ஈட்ட வாய்ப்புக் கிட்டும்.

இந்த நாட்டின் வரலாற்றில் அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி பாராளுமன்றத்திலுள்ள 225 ஆசனங்களில் 159 ஆசனங்களைப் பெற்று வரலாறு காணாத வெற்றியீட்டியது.

இந்த நாட்டின் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மலையகம் என அனைத்துப் பிரதேசங்களில் வாழும் அனைத்து மக்களின் வாக்குகளைப் பெற்று மகோன்னத வெற்றியீட்டியமையால் இந்த நாட்டில் வாழும் அனைத்து இன மக்களுக்காக சேவை செய்யவேண்டிய கடப்பாடு தேசிய மக்கள் சக்திக்கு உள்ளதனால் அந்தக் கடப்பாட்டை மனதில் இருத்தி செயற்பட்டால் இதுவரை காலம் இந்த நாட்டில் மிக ஒடுக்கப்பட்ட மக்கள் கூட்டமாக வாழும் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வில் சுபீட்சம் ஏற்பட வழி கிட்டுமென எதிர்பார்க்கலாம்.

---

# எப்போது இலங்கை சுதந்திரமடையும்?

இம்தியாஸ் ஹசன்

1948ஆம் ஆண்டு பிரித்தானிய காலனித்துவ ஆட்சியிலிருந்து முறையான சுதந்திரம் பெற்ற அந்நாள் முதல் உண்மையான அரசியல் மற்றும் பொருளாதார சுதந்திரத்தை நோக்கிய இலங்கையின் பயணம் சவால்கள் நிறைந்ததாகவே காணப்படுகின்றது. உள்நாட்டு முரண்பாடுகள், ஊழல் நிறைந்த ஆட்சிமுறை, பொருளாதார நெருக்கடிகள் மற்றும் உண்மையான இறையாண்மையை நோக்கிய அதன் முன்னேற்றத்துக்குத் தடையாகவுள்ள அனைத்து காரணிகளின் சார்புகளால் தேசம் சிக்கித் தவிக்கின்றது. இருப்பினும், சமீபத்திய முன்னேற்றங்கள் இந்தப் பாதையில் ஒரு சாத்தியமான திருப்புமுனையைப் பரிந்துரைக்கின்றன என எண்ணத் தூண்டுகின்றது.

சுதந்திரத்துக்குப் பிந்தைய 2009 வரை நீடித்த உள்நாட்டுப் போர் உட்பட குறிப்பிடத்தக்க அரசியல் எழுச்சிகளை இலங்கை எதிர்கொண்டது. இந்த உள்நாட்டு மோதல்கள் வளங்களையும் கவனத்தையும் பொருளாதார வளர்ச்சியிலிருந்து திசை திருப்பியது மட்டுமல்லாது, வெளிநாட்டு உதவி மற்றும் கடன்களை நம்பியிருப்பதை ஊக்குவித்தது. நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் சோஷலிச மற்றும் சந்தை சார்ந்த அணுகுமுறைகளுக்கிடையே தொடர்ந்து ஊசலாடிக்கொண்டிருக்கிறது. இது மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசாங்கங்களின் திறமையின்மையே காரணமாக அமைந்துள்ளது. பெரும்பாலும் இலங்கையின் புவிசார் அரசியலே வெளி நிறுவனங்களால் தாக்கம் செலுத்தப்பட்டு சீரற்ற வளர்ச்சிக்கு வழிவகுத்தது.

இலங்கை சுதந்திரத்துக்குப் பின்னர் அதன் மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடியை 2022இல் அனுபவித்தது என்று கூறலாம். இது இறையாண்மை இயல்புநிலையில் உச்சக்கட்டத்தை அடைந்தது. கொவிட்-19 தொற்றுநோய், தாங்க முடியாத கடன் அளவுகள் மற்றும் குறிப்பிடத்தக்க நிதிப் பற்றாக்குறை, சுற்றுலாத் துறையில் ஏற்பட்ட சரிவு போன்ற காரணிகளால் இந்த நெருக்கடி வகைப்படுத்தப்பட்டது.


2019ஆம் ஆண்டில் கணிசமான வரிக் குறைப்புகளைச் செயற்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முடிவு நிதி அழுத்தத்தை மேலும் அதிகப்படுத்தியது. இது அரசாங்க வருவாயில் கூர்மையான சரிவுக்கு வழிவகுத்தது. இந்தக் காரணிகள் கூட்டாக, அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை, வானளாவிய பணவீக்கம் மற்றும் பரவலான பொது அமைதியின்மை ஆகியவற்றில் பெரும் தாக்கத்தை விளைவித்தன. பொருளாதாரக் கொந்தளிப்பு வெகுஜன எதிர்ப்புகளைத் தூண்டியது. இது ஆளும் ஸ்தாபனத்தின் மீதான பொதுமக்களின் அதிருப்தியை அதிகப்படுத்தியது. இந்த அமைதியின்மை குறிப்பிடத்தக்க அரசியல் மாற்றங்களுக்கு வழி வகுத்தது.

2024 செப்டெம்பரில் தேசிய மக்கள் சக்தி கூட்டணியின் இடதுசாரித் தலைவரான அநுரகுமார திசாநாயக்க பாரம்பரிய அரசியல் பிரமுகர்களுக்கு எதிரான வியக்கத்தக்க வெற்றியில் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஊழலை எதிர்த்துப் போராடுவது, வறுமையை ஒழிப்பது மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பிணையெடுப்பு விதிமுறைகளை இலங்கைக்கு மிகவும் சாதகமாக மாற்றுவது போன்ற வாக்குறுதிகளை திசாநாயக்க பிரசாரம் செய்தார்.

தலைமை மாற்றமடைந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார சுதந்திரத்தை அடைவதில் இலங்கை கணிசமான தடைகளை எதிர்கொள்கிறதென்பதை யாராலும் மறுக்க முடியது.

இந்தியப் பெருங்கடலில் தேசத்தின் மூலோபாய இருப்பிடம் பிராந்திய சக்திகளுக்கு குறிப்பாக, இந்தியா மற்றும் சீனா ஆகியவற்றின் மையப் புள்ளியாக மாற்றியுள்ளது. இந்நாடுகள் செல்வாக்குக்காக போட்டியிடும் வேளையில் இந்த நாடுகளுடனான உறவுகளை சமநிலைப்படுத்துவது மிகவும் முக்கியமானதென்பதை மறுக்க முடியாது. ஏனெனில், இவை இரண்டும் முதலீடு மற்றும் உதவிக்கான குறிப் பிடத்தக்க ஆதாரங் களாக உள்ளதோடு பெரும் பங்களிப் புகளையும் செய்து வருகின்றன.

ஜனாதிபதி அநுரவின் நிர் வாகம் இந்தச் சிக்கலான புவிசார் அரசியல் இயக்கவியலை புத்திசாலித் தனமாக வழி நடத்த வேண் டும் என்பதே சர்வதேசத்தின் எதிபார்ப்பாகும்.






அதேவேளை, நாட்டின் பொருளாதார மீட்சிக்கு சிக்கலை ஏற்படுத்தக்கூடிய வெளிப்புறச் சார்புகளைக் குறைக்கப் பாடுபட வேண்டும் என்பது தேசப்பற்றாளர் களின் வேண்டுகோளா கும். உள்நாட் டில் வரலாற்று ரீதியாக முன்னேற்றத் துக்குத் தடை யாகவுள்ள ஆழமாக வேரூன்றிய பிரச்சினை களுக்குப் புதிய அரசாங்கம் தீர்வு காண வேண்டியது அதன் பிரதான கடமை யாகும். ஊழல், திருட்டு, கொலை மற்றும் அரச சொத்துக ளைத் தவறான முறை யில் கையாண்ட தேசத்துரோக செயற்பாடுகள் பற்றிய விடயங்களில் பாராளுமன்றத்தில் விவாதங்களை முடுக்கி விட்டு கவனச் சிதறல்களை ஏற்படுத்தும் விடயங்களில் அதிக கவனம் செலுத்தும் அதேவேளை, அரசாங்கம், கட்டமைப்பு ரீதியான பொருளாதார சீர்திருத்தங்களை செயற் படுத்துதல், நிர்வாகத்தை மேம்படுத்துதல் மற்றும் பல்வேறு இன மற்றும் மத குழுக்களிடையே சமூக ஒற்றுமையை வளர்ப்பது ஆகியவற்றைத் துரிதப்படுத்தவும் வேண் டும். நிர்வாகத்தின் வாக்குறுதிகளை நிறைவேற் றும் திறன் பொதுமக்களின் நம்பிக்கையை மீட்டெடுப்பதிலும் தேசத்தை தன்னிறைவு நோக்கி வழிநடத்துவதிலும் முக்கியமானதாக இருக்கும்.

இலங்கை அரசின் சமீபத்திய இராஜதந்திர முயற்சிகள் மற்றும் சர்வதேச நிதி ஈடுபாடுகள் அதன் எதிர்காலப் பாதையை வடிவமைக்கத் தயாராகி வருகிறது. ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் இந்தியா மற்றும் சீனாவுக்கான மூலோபாய விஜயங்கள், சர்வதேச நாணய நிதியம் (IMF) உடனான நாட்டின் பரிவர்த்தனைகள் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் கீழ் அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கைகளின் செல்வாக்கு ஆகியவை இலங்கை மக்களுக்கு ஒரு சிக்கலான வாய்ப்புகளையும் மற்றும் சவால்களையும் வழங்குகின்றன.

மார்ச் 2023 இல், IMF இலங்கையின் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க உதவுவதற்காக $3 பில்லியன் கடனுக்கு ஒப்புதல் அளித்தது. இந்த உட்செலுத்துதல் உடனடி நிவாரணம் அளித்தாலும் நிதி ஒருங்கிணைப்பு, வருவாய் மேம்பாடு மற்றும் கட்டமைப்பு சீர்திருத்தங்கள் உள்ளிட்ட கடுமையான நிபந்தனைகளைத் தாங்கி வந்தது. இந்த நடவடிக்கைகள், பொருளாதாரத்தை நிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டாலும் பாதிக்கப்படக்கூடிய மக்கள் மீது சாதக, பாதக விளைவுகளைப் பற்றிய கவலைகளைத் தூண்டியுள்ளன. இங்கு விமர்சகர்கள் வாதிடும் முக்கிய விடயம் யாதெனில், சிக்கன நடவடிக்கைகள் ஏழைகளுக்கு பொருளாதார நெருக்கடிகளை அதிகப்படுத்துவதோடு சமூக பாதுகாப்புகளை அரித்துவிடும் என்பதாகும்.

2024 டிசம்பர், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தனது முதல் வெளிநாட்டுப் பயணத்தை இந்தியாவுக்குத் தொடங்கினார். இது கொழும்பின் நெருங்கிய அண்டை நாடுகளுடன் உறவுகளை வலுப்படுத்துவதற்கான நோக்கத்தை

**ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் இந்தியா மற்றும் சீனாவுக்கான மூலோபாய விஜயங்கள், சர்வதேச நாணய நிதியம் (IMF) உடனான நாட்டின் பரிவர்த்தனைகள் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் கீழ் அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கைகளின் செல்வாக்கு ஆகியவை இலங்கை மக்களுக்கு ஒரு சிக்கலான வாய்ப்புகளையும் மற்றும் சவால்களையும் வழங்குகின்றன.**

சமிக்ஞை செய்தது. பிரதமர் நரேந்திர மோடியுடனான கலந்துரையாடல்கள் பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தங்களில் உச்சக்கட்டத்தை அடைந்தன.

அதனைத் தொடர்ந்து 2025 ஜனவரியில் இலங்கையின் மிகப்பெரிய இருதரப்பு கடன் வழங்குனரான சீனாவுக்கு ஜனாதிபதி திசாநாயக்க விஜயம் செய்தார். சீனத் தலைவருடனான சந்திப்பின் விளைவாக பல ஒத்துழைப்பு ஆவணங்கள் கையெழுத்தானது. அவை பொருளாதார மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை உள்ளடக்கியது. பிராந்திய வல்லரசுகளுக்கு இடையில் ஒரு நுட்பமான சமநிலையைப் பேணுகின்ற அதேவேளை, சீனாவுடனான பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் இலங்கையின் மூலோபாயத்தை இந்த விஜயம் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

அமெரிக்க வெளியுறவுக் கொள்கையானது தெற்காசியா போன்ற பிராந்தியங்களில் சீனாவின் செல்வாக்கை எதிர்கொள்வதில் கவனம் செலுத்தி பரிவர்த்தனை அணுகுமுறையை வெளிப்படுத்தியது.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்...)

# பெருந்தோட்டத் தொழிலாளரும் உயர்ந்துள்ள வாழ்க்கைச் செலவும்

சந்தனம் சத்தியநாதன்





இன்றைய இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பிரதான வகிபங்கைக் கொண்டுள்ள பெருந்தோட்டத் தொழிலாளர் வர்க்கத்தின் சமூக, கல்வி, கலை, கலாசார அரசியல் மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகளை அவதானிக்கையில், பெருந்தோட்டச் சமூகம் தேசிய அபிவிருத்தி மற்றும் தேசிய நீரோட்டத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட சமூகமாகவே இருக்கின்றது. இன்று உலகில் வாழும் தொழிலாளர்களின் ஊதியம் ஒழுங்காக வழங்கப்படுகின்றதா என்பதில் தீவிரம் காட்டப்படுகிறது. அவ்வாறு நடைமுறைகள் இருந்தாலும் கூட தொழிலாளர் வர்க்கம் என்ற ரீதியில் இன்னும் வறுமையின் உச்சத்தில் வாடுவதை எவராலும் தடுக்க முடியவில்லை என்பது மட்டுமே உண்மை.

இலங்கையைப் போலவே தேயிலைத் தொழிற்றுறையில் வெளிநாடுகளில் வேலை செய்யும் இத் துறைசார் தொழிலாளர்களும் அவர்தம் தொழிற்றுறை சார்ந்த பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்து வருவதை நாம் வெளிநாட்டு ஊடகங்கள் மூலமாக அறியக்கூடியதாகவுள்ளது.

அப்படியென்றால் உலகத் தொழிலாளர்களின் இந்தப் பிரச்சினைக்கு ஒட்டுமொத்த உலகத் தொழிலாளர்கள் ஒன்றுபடுவதன் மூலம்தான் தீர்வு கிடைக்குமா என்று எண்ணத் தோன்றுகிறது.

அவ்வாறு ஒப்புநோக்குகையில், இலங்கையில் ஏனைய தொழிற்றுறையினர்களுக்கு அவர்களின் வேலைக்கு நிகரான சம்பளம் வழங்கப்படுகிறது.

தோட்டங்களை முழுமையாக அரசாங்கம் நிறுவகித்து வந்த காலங்களில் பெருந்தோட்ட மக்களின் சம்பளம்,சம்பள நிர்ணய சபையால் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ற வகையில் அவ்வப்போது சம்பள உயர்வு வழங்கப்பட்டு வந்துள்ளது. ஆனால், 1992ஆம் ஆண்டு பெருந்தோட்ட முகாமைத்துவம் மறுபடியும் தனியார் கம்பனிகளிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னரே தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை உட்பட பலவிதமான உரிமை மறுப்புகளும் தொடர்ந்தவண்ணம் உள்ளன.

ஒவ்வொரு மனிதனும் தாம் செய்யும் தொழில் நிமித்தம் கௌரவமடைய வேண்டும். அதே போன்று தனது உழைப்புக்கான ஊதியம் நியாமான முறையில் வழங்கப்பட வேண்டும்.

நாட்டின் பொருளாதார விலைவாசிக்கமைவாக அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் சம்பளம் கிடைக்க வேண்டும்.

இன்று தோட்டத் தொழிலாளர்கள் கௌரவமாக நடத்தப்படுகின்றனரா? பெண் தொழிலாளர்கள் தேயிலை மலைகளில் உணவு, தேநீர் அருந்த ஓய்வறைகள் உள்ளனவா? பெண் தொழிலாளர்களின் மாதவிடாய் நேரங்களில் அவ்வாறு திடீரென ஏற்படும்போது தேயிலை மலையில் அவர்களுக்கான சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றனவா? இவை பற்றிய கேள்விகளை ஏற்கனவே தொழிற்சங்கங்கள் கேட்டுள்ளன. அவர்களை குறைவாக மதிப்பிட முடியாது. மலையகத் தொழிற்சங்கங்கள் பல போராட்டங்களை நடத்தி அதில் வெற்றியும் கண்டுள்ளன. இல்லை என்று மறுத்துவிட முடியாது.

ஆனாலும் மேற்குறிப்பிட்ட சில கேள்விகளுக்கு அதற்கான பதில் இதுவரைக்கும் சட்டபூர்வமாகக் கிடைக்கவில்லை என்பதே உண்மை.

இப்பின்புலத்தோடு சம்பளம் சம்பந்தமாகப் பார்க்கின்றபோது உயர்ந்துள்ள வாழ்க்கைச் செலவோடு ஒரு குடும்பம் வாழ்வதற்கான அடிப்படைச் செலவுகளை அவதானிக்கும்போது வீட்டுச் செலவு, உணவுத் தேவைக்கான செலவு, எதிர்பாராத வகையில் மரணம், திருமணம் பூப்புனித நீராட்டுவிழாக்கள், பிள்ளைகளின் கல்விச் செலவினங்கள் - இப்படி அவரவர் குடும்ப நிலைக்கேற்றவாறு செலவினங்கள் அதிகரித்துச் செல்லலாம்.

அத்தோடு வீடுகளில் திருத்தம் சம்பந்தமான செலவுகளைப் பார்த்தால் முன்பு தோட்டக் கணக்கில் திருத்த வேலைகளைச் செய்து கொடுத்தார்கள். தற்போதிருக்கின்ற வீட்டுக்கு பெயின்ட் பூசுதல், மின் இணைப்பு எடுப்பதற்கான செலவினங்கள் மற்றும் தண்ணீரையும் விலை கொடுத்து வாங்கும் நிலைமை இப்படி பட்டியல் தொடர்ந்து கொண்டே போகிறது.

இதில் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, உடை, வீட்டு உபகரண தொடர்பு சாதனங்கள் மற்றும் கலை, கலாசார நிகழ்வுகள் என்று பார்க்கின்றபோது அதற்கான செலவினங்கள் ஆகாயத்தைத் தொட்டு நிற்கின்றன. இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் பொருளாதார மாற்றத்தோடு ஒப்பிட்டுப்பார்க்கின்றபோது பெருந்தோட்ட மக்கள் - அதாவது, தோட்டத் துறையில் வேலை செய்கின்ற மக்களின் வருமானம், உயர்ந்துள்ள வாழ்க்கைச் செலவைப் பார்க்கின்றபோது போதாத ஒரு நிலையைக் காட்டுகின்றது.

இந்த உண்மைகளை வெளிக்கொணர வரும்போது தனியார் கம்பனிகள் இவ்வாறான கருத்துகளை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றன.

சமூகம் சார்ந்த இந்தக் கருத்துகளை மக்களிடம் சென்று அவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் நிலையை பத்திரிகை வாயிலாக உலகுக்குச் சொல்கிறோமே தவிர, எந்தவொரு தனிநபர் மீதும் தனிப்பட்ட பகை எமக்குக் கிடையாது. இதில் தனிப்பட்ட இலாப நோக்கமும் எமக்கில்லை. தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியலில் மாற்றம் வரவேண்டுமென்பதோடு அவர்களுக்கு ஒரு சிறப்பான பொருளாதார மாற்றத்துடன் கூடிய நல்வாழ்வு பிறக்கவேண்டுமென்பது மட்டுமே எமது நோக்கம்.

---

# தமிழ் மக்களது கல்வி, சமயத் துறைக்கு பாரிய பங்காற்றியவர் சேர் பொன். இராமநாதன்

யூ.எல்.ஏ. மஜீட்



சேர் பொன். இராமநாதன் எனும் பெரும் ஆழி 1851ஆம் ஆண்டு பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணம், மானிப்பாயிலும் சட்டக் கல்வியை கொழும்பிலும் கற்று சட்ட வல்லுநராக பிரவேசிக்கலானார். சட்டத்துறையில் பயிற்சி பெற்றிருந்த இவர் நீதி பரிபாலன நாயகமாகவும் தற்காலிக சட்ட மா அதிபராகவும் விளங்கியதுடன், 1892இல் சட்ட நிரூபண சபையில் முதல் தமிழ்ப் பிரதிநிதியாகவும் பணிபுரிந்தார்.

1913இல் யாழ்ப்பாணத்தில் பெண்களின் கல்வியை ஊக்குவிக்குமுகமாக இராமநாதன் மகளிர் கல்லூரியைத் திறந்துவைத்தார். அதே போன்று 1921இல் திருநெல்வேலி பரமேஸ்வரா ஆண்கள் கல்லூரியையும் தொடக்கிவைத்தார். அத்துடன், பரமேஸ்வரா கோயிலொன்றையும் அங்கே கட்டுவித்தார். மக்கள் சேவையே தனது சேவையெனக்கொண்டு விளங்கிய இராமநாதன் அந்தப் பணியில் சிறப்பான வரலாற்றுமிக்க வெற்றியையும் பெற்றுக்கொண்டார்.

குறுகிய நோக்கு, சுயநல சிந்தனை, இனவாதம், மதவாதம், பிரதேசவாதம், நிறம் மொழி வாதங்களை நிராகரித்த அவர், இந்நாட்டில் வாழும் சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் அனைவரும் இந்நாட்டு குடிமக்களே என்ற தூர சிந்தனைகொண்டு விளங்கினார். இந்நாட்டு மக்கள் அனைவரும் தாங்கள் சார்ந்துள்ள மதக் கோட்பாடுகளுக்கு மதிப்பளித்து கலாசார விழுமியங்களைப் பேணி நற்குணம், நற்பண்பு, அஹிம்சை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, விட்டுக்கொடுப்பு, பொறுமை, மன்னிக்கும் மனப்பான்மை, நீதி, நியாயம், நேர்மை, கருணை, காருண்யம், அன்பு, இரக்க சுபாவம், தூய உள்ளம், சாந்தி, சமாதானம், நல்லிணக்கம், புரிந்துணர்வு, மனிதாபிமானம், மனிதநேயம் கொண்ட நல்லொழுக்கமுடைய மக்களாகவும் தமது பெற்றோர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள், ஆசிரியர்கள், மதத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள், வயோதிபர்கள், ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் மாற்றுத் திறனாளிகள் போன்றவர்களைக் கண்ணியப்படுத்துவதுடன், நாள் தவறாது இறைவனை துதிசெய்யவேண்டியது இவ்வுலகில் மனிதர்களாக சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொரு ஆத்மாவினதும் கடமையாகும்.

மனிதர்களாகிய நாம் மேற்கூறப்பட்ட நல்ல பண்புகளைக் கொண்டவர்களாகவும் இறை நேசர்களாகவும் வாழ்ந்து மரணிக்கவேண்டுமென்ற யதார்த்தத்தை மக்கள் மத்தியில் அடிக்கடி நினைவூட்டிய இராமநாதன், அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் ஆன்மீகப் போதனைகள் புரிந்துள்ளதுடன், சைவ சித்தாந்த மாநாடுகள் பலவற்றுக்குத் தலைமைதாங்கியுமுள்ளார்.

கொழும்பு தலைநகரிலே கலையழகு மிளிர அவர் கட்டுவித்த பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில் சைவசமயத்துக்கான அவரது மற்றுமொரு சேவையாகும். சேர். பொன். இராமநாதன் சட்ட வல்லுநராக மட்டுமன்றி, ஆங்கிலத்திலும் தமிழிலும் அரிய நூல்களை எழுதக்கூடிய ஆற்றல் வாய்ந்த அறிஞராகவும் விளங்கினார். திருக்குறட் பாயிரம், இராமநாத பாஷ்சியம், ஔவையின் ஆத்திசூடி, திருமந்திர விளக்கம், பகவத்கீதை, தமிழ்மொழிபெயர்ப்பும் விருத்தியுரையும் போன்ற சமயத்துறைசார்ந்த நூல்களையும் அவர் எழுதியுள்ளார்.

சமயப்பொறை உடையவராக மிளிர்ந்த இவர், பௌத்த, முஸ்லிம் மக்களுக்கும் சேவையாற்றியுள்ளார் என்பதும் சிறப்பம்சமாகும். 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற வாசகத்தை உரத்துக் கூறிய இராமநாதன், இந்நாளில் வாழும் சகல இனங்களும் சமநலன் பெற்று வாழவேண்டுமென்ற யதார்த்தத்தை தனது தனி வாழ்க்கையிலும் பொது மற்றும் அரசியல் ஆன்மீக வாழ்க்கையிலும் கடைப்பிடித்து அதற்கமைவாக வாழ்ந்து காட்டிய தீர்க்கதரிசியாகவும் காணப்பட்டார்.

மேலும் பௌத்த ஆலயங்களின் சொத்துரிமைச் சட்டம், முஸ்லிம்களின் திருமணச்சட்டம் என்பன பிரித்தானிய அரசு ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் நிறைவேற அதற்கான முழு ஒத்துழைப்பையும் ஆதரவையும் நல்கினார். தேசபிதாவாகக் கருதப்பட்ட இராமநாதன் பிரித்தானிய அரசின் நைட் பட்டத்தையும் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும், 1915 இல் சிங்கள, முஸ்லிம்களுக்கிடையில் ஏற்பட்ட கிளர்ச்சியின் காரணமாக கிளர்ச்சியைத் தூண்டினார்கள் என்ற காரணத்தால் பிரித்தானிய ஆட்சியாளர்கள் சிங்களத் தலைவர்களை சிறையிலடைத்தனர். ஆனால், சேர். பொன் இராமநாதன் மிகவும் துணிச்சலுடன் லண்டனுக்குச் சென்று அவர்களை விடுவிக்கும் அனுமதியைப் பெற்று நாடு திரும்பி வந்தபோது சிங்களத் தலைவர்களால் கௌரவிக்கப்பட்டார்.

**அன்னாரின் நினைவு தினம் நாளை 17ஆம் திகதியாகும். அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவத்துக்கும் தமிழுக்கும் அருட்தொண்டாற்றிய ஆறுமுகநாவலர் ஆற்றிய சேவையை அவரது மறைவுக்குப் பின் சேர் பொன். இராமநாதன் மற்றும் சேர் பொன் அருணாசலம் போன்றவர்கள் சமயத் துறைகளுக்கு பெரும் பங்களிப்புச் செய்து சிறப்பான வரலாறும் படைத்தனர். வெற்றியும் பெற்றனர்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலமான 1925இல் யாழ். மண்ணில் இராமநாதனுக்குப் பின்னர் பலதரப்பட்ட அறிஞர்கள், சட்டமேதைகள் உருவாகினார்கள்.

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...)

---




த.யுவராஜ்

**கங்காணி** – என்னபுள்ள செல்வி தனியா நிக்கிற உன் கூட்டாளி ரமணி எங்க?

**லெச்சுமி** – பாவோ கங்காணி. அந்தக்கா நேத்து வேல விட்டு போகுள்ள படில வழுக்கி விழுந்துச்சிருச்சி. ரொம்ப அடி. அந்திக்கு ஹொஸ்பிடல் கூட்டிட்டு போனாங்க. போன ரோட்டு சரியான மோசம் தானே. அடிபட்டது கூட வர்த்தம் போல அதா இன்னக்கி வரல.

**கங்காணி** – ஆமா ஆமா அந்த ஹொஸ்பிடல் ரோட்டு சரியான மோசம் தா. இந்த கொழுந்து டக்கு பொய்ட்டு பொய்ட்டு ரோட்டு முழுக்க வெறும் கல்லு மட்டும் தா கெடக்குது.

**லெச்சுமி** – இன்னக்கி வேல முடிந்து போய்ட்டு தா அந்த அக்காவ பாத்துட்டு வரணும்.

**கங்காணி** – ஆமா நீ போறப்போ சொல்லு நானும் வாறேன்.

**லெச்சுமி** – என்னண்ணே பண்றது. இந்த ஹொஸ்பிடல் ரோட்டு நாள எவலோ பிரச்சன.. ஒரு சொகமில்லாத ஆள கூட்டிட்டு போக முடியல. பபா கெடைக்கிற புள்ளைய கூட்டிட்டு போக முடியல. எத்தனையோ பேருக்கிட்ட எத்தனையோ தடவ சொல்லியாச்சு. ஆனா செவிடன் காதுல ஊதுன சங்கு மாறி எதுமே நடக்கல என்னண்ணே பண்றது.

**கங்காணி** – இந்த அரசியல்வாதிங்க இருக்கானுங்களே. ரொம்ப மோசம். ஓட்டுக் கேட்டு வாரப்போ, ஓட்டுப் போடுங்க. அத செஞ்சி தாரோம், இத செஞ்சி தாரேனு சொல்றதோட சரி. ஓட்டு வாங்கின பெறகு இந்த பக்கம் தல வச்சி படுக்குறது இல்ல.

இவனுங்க இப்படினா நம்ம ஆளுங்களும் அதுக்கு மேல. அவனுங்க கொடுக்குறது எல்லாத்தையும் வாங்கி தின்னுட்டு அதுக்கு பெறகு எதையுமே கண்டுகிறது இல்ல. இப்படி இருந்தா நம்ம ஊருக்கு எப்படி ஒரு நல்லது நடக்கும்.

**லெச்சுமி** – இந்த மனுசனுங்க எல்லா அப்படி தாண்ணே. நம்ம புள்ளைங்க எல்லா இஸ்குல் போக எவளோ கஸ்டப்படுது தெரியுமா. இந்த மழ காலம் வந்தா ரோட்டு புல்லா வெறும் சேரும் சகதியும் தா கெடக்குது. இதுநால அவங்க போடுற சப்பாத்துல இருந்து வெள்ள உடுப்பு எல்லா நாசமாக போகுது. அத தொவைக்கிறப்ப படுற கஸ்டம் எங்களுக்கு மட்டும் தா தெரியும்.

**கங்காணி** – அட நீ வேறப்புள்ள. இந்த நாடு போற போக்கப்பாத்தா எதுமே சரியில்ல.

**லெச்சுமி** – அது ஏண்ணே அப்படி சொல்றீங்க.

**கங்காணி** – அட வேறென்னத்த சொல்ல. மலையகத்துல வெறும் குடும்ப ஆட்சி தானே நடக்குது. ஒரு பக்கம் அவனுங்க அடிச்சுகிறானுங்க. மறுபக்கம் புதுசா வந்தவங்க என்ன செய்றாங்கனே தெரியல. இப்போ ஒன்னுக்கு அஞ்சி பேரு பாராளுமன்றத்துல இருக்காங்க. என்னத்த பண்றானுங்கனே தெரியல. ஒரு தமிழ் அம்மா பேச குடுத்தா சிங்களத்துளயே பேசும். மத்தவங்க யாரும் பேசுறதே இல்ல. இப்படி போன நம்ம பிரச்சனைய எப்படி பேசி மத்தவங்களுக்கு புரிய வைப்பாங்க.

**லெச்சுமி** – நீங்க சொல்றது நூத்துக்கு நூறு உண்மண்ணே.

**கங்காணி** – இந்த ஹொஸ்பிடல் ரோட்டு செய்றதுக்கு பல தடவ பல பேரு வந்து கல்லு நாட்டிட்டு பொய்ட்டாங்க. ஆனா அத இன்னவரைக்கு செஞ்ச பாடு இல்ல.

அந்த ரோட்டுல நாலு எடத்துல கல் நாட்டி வச்சிருக்கதுங்க. மூணு எடத்துல மண்ணும் கல்லும் கொட்டி வச்சுருங்காங்க. ஆனா எதுமே நடக்கலயே. அதுல பாதிய ஊரு ஆளுங்க அல்லிக்கட்டு போனது தா மிச்சம்.

இதுக்கு நடுவுல கொட்டகலையில் ஏர்போட்டு கட்டுறே, மலையகத்து கெம்பஸ் கட்டுறேன்னு பெரும பீத்துன ஆளயே இன்னக்கி பல்ல புடுங்கி ஒக்கார வச்சிட்டானுங்க. அந்த பொடியே உட்டு அப்பா பாதிய சொரண்ட, வந்த மகன் மீதிய சொரண்டி திண்ணுட்டு பொய்ட்டாரு. இப்போ நம்ம உள்ளதும் போச்சிடி நொல்ல கண்ணானு ஒக்காத்தி இருக்காங்க.

**லெச்சுமி** – ஏண்ணே அப்போ நம்ம மக்களுக்கு எப்போ தா விடிவு காலம் வரும்?

**கங்காணி** – அதுதா அம்மாளு எனக்கும் தெரியல. நம்ம கடைசி வரைக்கும் இவனுங்களுக்கு ஒலைச்சி கொடுத்து கொடுத்து ஒரு நாள் செத்து மடிய வேண்டியது தா.

**லெச்சுமி** – வேண்டாதவன் பொண்டாட்டி கைப்பட்டாலும் குத்தம், கால் பட்டாலும் குத்தோனு சொல்ற மாறி. இந்த அரசாங்கத்துக்கிட்ட எது கேட்டாலும், கோவப்படுறாங்களே தவிர அத செஞ்சித் தர மாட்டேங்குறாங்க.

**கங்காணி** – சரி சிரி நெருவைக்கு நேரமாச்சி எடுத்த கொழுந்த எடுத்துகிட்டு கொழுந்து மடுவத்துக்கு வந்து சேரு.

# பிழையற்ற தமிழ் அறிவோம்

## சில்லரையா? சில்லறையா? கருப்பா? கறுப்பா?

ஒரு ரூபாயில் சிறிய பகுதிகளோ நூறு, ஆயிரம், பல்லாயிரம் எனும் எந்தத் தொகையிலும் வரும் சிறிய பகுதிகளோ அவை சிலவாக அறுக்கப்பட்டவை (பிரிக்கப்பட்டவை). ஆதலின் சில்லறை என்றே எழுதுதல் வேண்டும். சில அரை எனில் அரை அரையாகத்தான் அளவிடல் முடியுமன்றி, கால், அரைக்கால் என்னும் சிறியவற்றை அது குறிப்பிடல் இயலாது. 10 காசு, 50 காசு முதலியவை ஒரு ரூபாயில் சில்லறை; 50 ரூபா, 100 ரூபா ஆயிரத்துள் சில்லறை. இப்படியே அடுக்கிச் செல்லலாம். ஆதலின் சில்லறையே சரியான பொருள் கொண்ட சொல்.

**கருப்பு / கறுப்பு:**

கருப்பினத் தலைவர், கருப்புப் பணம் என்றெல்லாம் செய்தித் தாள்களில் பார்க்கிறோம். கறுப்பினத் தலைவர், கறுப்புப் பணம் என்று வல்லினம் இட்டு எழுத வேண்டும். கருப்பு என இடையினம் போட்டால் பஞ்சம் என்று பொருள். கரிய, கருமை எனும்போது இடையின 'ர' வரினும் கறுப்பு என்று எழுதும்போது மட்டும் வல்லின 'று'தான் போட வேண்டும். தமிழ்ப் பேரகராதி, சிற்றகராதி எதிலும் சரிபார்த்துக் கொள்க. கருப்புப் பட்டியல் எனில் பஞ்சப் பட்டியல் என்றே பொருளாம்.

**மேனாள் / முன்னாள்:**

இப்போதெல்லாம் முன்னாள் அமைச்சர், முன்னாள் தலைவர் என்று குறிப்பிட்டு வந்த இடங்களில் மேனாள் அமைச்சர், மேனாள் தலைவர் என்று எழுதுகிறார்கள். புறநானூற்றில் வந்துள்ள மேனாள் என்னும் சொல்லுக்கு நேற்றைக்கு முந்தைய நாள் (மேல்+நாள்) எனும் பொருளே காண்கிறோம். நெருநல் உற்ற செருவிற்கு.. என்ற வரியின் முன் மேனாள் உற்ற செருவிற்கு.. எனும் வரி இடம்பெற்றுள்ளது. முன்னாள் எனில் அது நேற்றாகவும் பலநாள் முன்னாகவும், பல திங்கள், பல ஆண்டு முன்னதாகவும் பொதுத் தன்மை கொண்டுள்ளது. இந்தப் பொருள் மேனாளில் இல்லை. இதனை எழுதத் தெரியாதவர் மே நாள் என்று எழுதிவிட்டால் அது மே தினத்தைக் (மே-01) குறிக்கும். பழைய நாளில் பதவியில் இருந்தோரை முன்னாள் என்றே குறிப்போமாக.

**(தமிழ் வளரும்)**
**( நன்றி தினமணி)**

## குறுக்கெழுத்துப் போட்டி - 55

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | ■ | 2 | ■ | ■ | | | 3 |
| | ■ | | ■ | 4 | | | ■ | ■ | |
| | 5 | 6 | ■ | | ■ | ■ | 7 | | |
| | ■ | ■ | ■ | ■ | 8 | | ■ | ■ | ■ |
| ■ | 9 | | | 10 | | ■ | | | 11 |
| 12 | | ■ | ■ | | ■ | ■ | ■ | ■ | |
| ■ | | ■ | 13 | | | ■ | ■ | ■ | |
| 14 | 15 | | ■ | | ■ | ■ | ■ | ■ | |
| | | ■ | 16 | ■ | ■ | 17 | | | |
| | ■ | 18 | | ■ | ■ | | ■ | ■ | ■ |

**இடமிருந்து வலம்**
01. காலத்தைக் குறிப்பிட்டுக் காட்டுவது.
04. நோயை இப்படிக் குறிப்பிடுவர்.
07. குரங்கு.
08. நீண்டகாலப் பயிர்.
09. புத்திரன்.
12. ஒருவர் ஆபத்தினின்றும் தப்பிவிட்டால் இது வந்தாகக் கூறுவர் ஓரெழுத்து இல்லை.
13. இல்லாமல் போதல்.
15. கட்டிடங்களுக்கு இது பூசுவர் (குழம்பியுள்ளது).
17. ஓர் இராசி.
18. ஆடை.

**மேலிருந்து கீழ்**
01. சிலர் கோயில்களில் இதனை நிறைவேற்றுவர்.
02.வீட்டு வாசலிலும் இது கட்டுவர்.
03.வணக்கம்.
08. ஆகாயம்.
09. அறிவாளி.
10. காய்ந்தவற்றை இப்படி அழைப்பதுண்டு (குழம்பியுள்ளது).
11. வாசனை நிறைந்தது.
14. தைரியம்.
16. சேனை.
17. யுத்தம்.

**கீழிருந்து மேல்**
06. இது ஓர் உற்பத்திப் பொருள் (குழம்பியுள்ளது).

**வலமிருந்து இடம்**
03. விலையுயர்ந்த துணிவகை.
05. தசமம் (குழம்பியுள்ளது).
11. நான்கு வீதிகள் சேர்ந்த இடம்.

**மூளைக்கு வேலை பகுதியில் தரப்படுகின்ற ஆக்கங்களுக்கான சரியான விடைகளை thamilanweekly@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதி அனுப்பலாம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 54க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 கு | ப் | பை | ■ | ■ | 2 த | ■ | 3 மு | த் | 4 து |
| ரு | ■ | ■ | 5 க | ட் | ட | ளை | ■ | ■ | ளை |
| 6 தி | 7 யா | ன | ம் | ■ | ண் | ■ | தி | ■ | ■ |
| ■ | னை | ■ | பி | ■ | னை | ■ | 8 பொ | ட் | டு |
| 9 ப | ■ | ■ | ■ | ■ | ■ | 10 வா | ■ | ட | ■ |
| ர | க | 11 க | ம் | ■ | 12 மூ | ழ் | கு | 13 த | ல் |
| ப் | ■ | ள் | ■ | 14 ஊ | ■ | த் | ■ | ம் | ■ |
| 15 பு | ள் | ளி | 16 மா | ன் | ■ | து | ■ | ■ | 17 தா |
| ■ | ளு | ■ | ய | ■ | 18 க | ■ | னி | ■ | க |
| ய் | 19 தெ | வ | ம் | ■ | 20 வி | ஞ் | 21 ஞா | ன | ம் |

**சரியான விடைகளை அனுப்பியவர்**
**ஏ.எல்.எம்.சித்திக் அமானுல்லா - காத்தான்குடி -06**

## கிழக்காசியாவின் கலங்கரை விளக்கு

கிழக்காசியாவின் கல்விக்கடலில் ஒரு கலங்கரை விளக்காகத் திகழும் மட்டக்களப்பு மாவட்டத்தின் வரலாற்றுச் சின்னங்களில் மிக நீண்ட ஆயுளைக்கொண்ட மட்டக்களப்பு பொது நூலகம், மட்டக்களப்பில் நிலைகொண்டிருந்த பிரித்தானிய தென்னந்தோட்டத் துரைமார்களின் பயன்பாட்டுக்கென அப்போதைய கலக்டர்களான ஆர். அதர்டன் (1839) மற்றும் ஜே.மொர்பியு (1854) ஆகியோரின் சேவைக்காலத்தின்போது மட்டக்களப்பின் கேந்திரமான புளியந்தீவில் நிர்மாணிக்கப்பட்டதாக வரலாற்றுத் தகவல்களிலிருந்து அறியக்கூடியதாகவுள்ளது.

அன்றிலிருந்து இன்றுவரை பலதரப்பட்ட அபிவிருத்திகளையும் முன்னேற்றங்களையும் கண்ட இந்த நூலகம், பல்வேறு சந்தர்ப்பங்களில் வெள்ளம், சூறாவளி, சுனாமி போன்ற பல அனர்த்தங்களையுஒம் எதிர்கொண்டது.

இவ்வனர்த்தங்களின் விளைவாக ஏராளமான தகவல் சேகரிப்புகள், புத்தகங்கள், பருவ வெளியீடுகள், கட்டுரைக் கோப்புகள் போன்றவை கடுமையாக சேதங்களுக்குள்ளாகின. இதற்கான காரணங்களில் ஒன்று இந்நூலகக் கட்டிடம் மட்டக்களப்பு வாவிக்கு மிக அருகாமையில் அமைந்திருப்பதும் மற்றுமொன்று இந்நூலகத்தின் மேற்கூரை பாதுகாப்பற்ற அஸ்பெஸ்டஸ் கூரையால் அமைந்திருப்பதுமாகும்.

இருப்பினும், தேசிய மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்களின் உதவிகளுடனும் அரச நிதி ஒதுக்கீடுகளுடனும் ஒரு ஸ்திரமான நிலையை இந்நூலகம் தற்போது அடைந்துள்ள சந்தர்ப்பத்தில் இதற்கான ஒரு பிரமாண்டமான – உறுதியான புதிய கட்டிடமொன்று புளியந்தீவிலுள்ள ஒரு ரம்மியமான சூழலில் நிர்மாணிக்கப்பட்டு முடிவுறும் தறுவாயை எட்டியுள்ளது.

200 வருட நிறைவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் இப்பழைமையான நூலகம், இம்மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து இன மக்களுக்கும் இன, மத பேதமின்றி அவர்கள் வாழ்வில் அறிவெனும் ஒளியேற்றும் ஒரு பாரிய உள்ளூராட்சி நிறுவனமாகத் தனது சேவையை வழங்கி வருகின்றது.

இவ்வாறு தனது முறைசாராக் கல்விப்பணியை மௌனமாக ஆற்றிக்கொண்டிருக்கும் இந்நூலகமும் எதிர்காலத்தில் சில சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அதில் முக்கியமான தொன்று இந்நூலகத்தைப் பயன்படுத்துவோர், அங்கத்தவர்கள், வாசகர்கள் போன்றோரின் எண்ணிக்கையையும் வருகையையும் அதிகரிக்கச் செய்வதாகும். ஏனெனில், தற்போதைய யுகத்தில் பெருமளவானோர் தமது வீடுகளிலும் அலுவலகங்களிலும் தமக்கு விரும்பிய ஓர் இடத்திலிருந்துகொண்டே தமக்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புகள் அமையப்பெற்றிருப்பதால் இக்காலத்தில் நூலகங்களை நாடிச் செல்வோர்கள் குறிப்பாக, மாணவர்கள், அலுவலகர்கள், வாசகர்கள், ஊடகவியலாளர்கள் போன்றோர் வெகுவாகக் குறைந்துவிட்டனர்.

அவர்கள் தங்களின் இடங்களிலிருந்தவாறே விரல் நுனியில் தேவையான விடயங்களை நொடிப்பொழுதினில் மிக விரைவாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய இணையதள வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதனால் தங்களது நேரத்தைச் செலவழித்து தூரமான இடங்களுக்குச் சென்று தகவல்களை அல்லது தங்களுக்குத் தேவையான விடயங்களைப் பெற்றுக்கொள்ளப் பின்னிற்கின்றனர்.

ஆகவே, இந்நூலகத்தின் பயன்பாட்டை ஓர் உச்ச நிலைக்குக் கொண்டுசெல்ல வேண்டுமாயின் இங்கு மேலதிகமாக சில விசேட பிரிவுகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அவையாவன, இலங்கையின் 100 வருட அரசியல் வரலாற்றில் மட்டக்களப்பைச் சேர்ந்த 60 பாராளுமன்ற உறுப்பினர்கள் இம்மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்கள். அவர்களின் புகைப்படங்களுடன் வாழ்க்கை வரலாறு காட்சிப்படுத்தப்படல் வேண்டும். அதேபோன்று, இம்மாவட்டத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், கலைஞர்கள் மற்றும் பெரும் உயர் பதவிகளில் அர்ப்பணிப்புச் செய்த இராஜதந்திரிகள், பேராசிரியர்கள், சட்டவல்லுனர்கள் போன்றோரின் உருவப்படங்களும் அவர்களின் பணிகள் என்பனவும் எதிர்காலச் சந்ததியினர்களுக்காக காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

மேலும், இந்நூலகத்தில் ஆவணக்காப்பகம், சுவடிக்கூடம், கண்காட்சிக்கூடம், அருங்காட்சியகம் என்பவற்றையும் அமைத்து வருங்காலத் தலைமுறையினருக்கு வழியமைத்துக் கொடுப்பதுடன், இம்மாவட்டத்தில் அச்சிட்டு வெளியிடப்படாமல் தேங்கிக் கிடக்கும் பல அரிய தொகுப்புகளைப் பிரசுரித்து வெளியிடக்கூடிய சில கலை, கலாசாரப் பண்பாட்டுக் கழகங்களை உருவாக்கலாம்.

இவ்விடயங்களில் மிகக் கூடுதலான கரிசனை கொண்ட புலம்பெயர் கல்விமான்களையும் திறமையான பற்றாளர்களையும் உள்ளடக்கிய சிறந்த மதியுரைக்குழு ஒன்றை அமைப்பதனூடாக இத்தொன்மையானதும் பிரமாண்டமானதுமான நூலகத்தை மேலும் வினைத்திறனான ஒரு நூலகமாக மிளிரச் செய்யலாம் என்று திடமாக நம்புகின்றேன்.

இந்நூலகத்தினூடாகத் தங்கள் வாழ்வை மேம்படுத்திக்கொண்ட ஆயிரமாயிரம் பயனாளிகளில் நானும் ஒருவன் என்ற ரீதியில் இந்நூலகத்தின பணகள் நீடூழி காலம் தொடரப் பிரார்த்திக்கின்றேன்.

**இ.ஆதம் லெப்பை,**
**காத்தான்குடி.**

## எப்போது இலங்கை.... (13ஆம் பக்கத் தொடர்ச்சி...)

(13ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியப் பெருங்கடலில் மூலோபாய ரீதியாக அமைந்துள்ள இலங்கை, அமெரிக்க - சீனா போட்டியின் சந்திப்பில் தன்னை இனங்கண்டது. இந்தோ-பசுபிக் மூலோபாயத்தில் ட்ரம்ப் நிர்வாகத்தின் வலியுறுத்தல், சீனாவின் பெல்ட் அன்ட் ரோடு முன்முயற்சியை சமநிலைப்படுத்த இலங்கை போன்ற நாடுகளுடன் உறவுகளை வலுப்படுத்த முயன்றது. இந்த புவிசார் அரசியல் இழுபறியானது இலங்கைக்கான வாய்ப்புகளையும் சவால்களையும் முன்வைத்தது. ஏனெனில் அது அதன் இறையாண்மையைப் பேணுவதற்கும் அதன் அபிவிருத்தி இலக்குகளைப் பின்தொடர்வதற்கும் பாடுபடும் அதே வேளையில் வெளிப்புற அழுத்தங்களுக்கு வழிவகுத்தது.

***இலங்கை மக்களுக்கான வாய்ப்புகள் மற்றும் சவால்கள்***

இந்த சர்வதேச ஈடுபாடுகளின் சங்கமம் இலங்கையின் குடிமக்களுக்கு ஒரு கலவையான பொதியை அளிக்கிறது.

**சாதகங்கள்:**

***பொருளாதார மறுமலர்ச்சி:*** அதிகரித்த முதலீடுகள், உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்பு உருவாக்கம், பொருளாதாரத்தைப் புத்துயிர் பெறச்செய்தல் போன்ற விடயங்கள் இந்தியா மற்றும் சீனாவுடனான வலுவூட்டப்பட்ட உறவுகளால் ஏற்படும்

***கடன் மறுசீரமைப்பு:*** IMF மற்றும் இருதரப்புக் கடன் வழங்குபவர்களுடனான ஈடுபாடுகள், நீண்டகால நிதி நிலைத் தன்மையை இலக்காகக்கொண்டு, ஏற்கனவே உள்ள கடனை மறுகட்டமைப்பதற்கான வழிகளை வழங்குகின்றன.

***புவிசார் அரசியல் அந்நியச் செலாவணி:*** முக்கிய சக்திகளுடன் உறவுகளை சமநிலைப்படுத்துவதன் மூலம், சர்வதேச பரிவர்த்தனைகளில் சாதகமான நிபந்தனைகளைப் பெறுவதற்கு இலங்கை தனது மூலோபாய நிலையைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

**பாதகங்கள்:**

***சிக்கன நடவடிக்கைகள்:*** IMF விதித்துள்ள நிதி இறுக்கம் அத்தியாவசிய சேவைகளுக்கான பொதுச் செலவினங்களைக் குறைக்க வழிவகுக்கும். இது குறைந்த வருமானம் கொண்ட மக்களை விகிதாசாரத்தில் பாதிக்கும்.

***இறையாண்மை கவலைகள்:*** சக்திவாய்ந்த நாடுகளுடனான பொருளாதார உறவுகளை ஆழப்படுத்துவது உள்நாட்டுக் கொள்கைகள் மீது தேவையற்ற செல்வாக்குக்கு வழிவகுக்கும். தேசிய இறையாண்மையை சமரசம் செய்யக்கூடும்.

***சமூக அமைதியின்மை:*** பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் சிக்கன நடவடிக்கைகள் பொதுமக்களின் எதிர்ப்பைத் தூண்டலாம். இது மக்களுக்கு தீங்கு விளைவிப்பதாகக் கருதப்படும் அரசாங்கக் கொள்கைகளுக்கு எதிரான முந்தைய போராட்டங்களில் காணப்பட்டது.

இலங்கையின் தற்போதைய பாதையானது இராஜதந்திர ஈடுபாடுகள், நிதிப் பேச்சுவார்த்தைகள் மற்றும் புவிசார் அரசியல் இயக்கவியல் ஆகியவற்றின் சிக்கலான ஒன்றோடொன்று இணைந்து வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் ஜனாதிபதி திசாநாயக்கவின் இராஜதந்திர வெளிப்பாடுகள், IMF உடனான நாட்டின் பரிவர்த்தனைகள் மற்றும் ட்ரம்பின் கீழ் அமெரிக்கக் கொள்கைகளின் நீடித்த விளைவுகள் ஆகியவை நாட்டின் முன்னோக்கிச் செல்லும் பாதையில் கூட்டாக செல்வாக்கு செலுத்துகின்றன. இந்த அபிவிருத்திகள் பொருளாதார மீட்சி மற்றும் வளர்ச்சிக்கான வழிகளை வழங்கும் அதேவேளை, அனைத்து இலங்கையர்களிடையேயும் நன்மைகள் சமமாக பகிர்ந்தளிக்கப் படுவதை உறுதிசெய்வதற்கு நுட்பமான சவால்களையும் அவை முன்வைக்கின்றன. உள்நாட்டு முன்னுரிமைகளுடன் வெளிப்புற ஈடுபாடுகளை சமநிலைப்படுத்தும் அரசாங்கத்தின் திறன், நாட்டை நிலையான மற்றும் வளமான எதிர்காலத்தை நோக்கி அழைத்துச் செல்வதில் முக்கியமானதாக இருக்கும்.

எனவே, உண்மையான அரசியல் மற்றும் பொருளாதார சுதந்திரத்துக்கான பாதை சவால்கள் நிறைந்ததாக இருக்கும் அதேவேளை, இலங்கையின் அண்மைய அரசியல் மாற்றம் நம்பிக்கையின் ஒளியை அளிக்கிறது எனப் பேசப்படுகிறது.

சீர்திருத்தத்துக்கான புதிய தலைமையின் அர்ப்பணிப்பு மற்றும் மாற்றத்துக்கான பொதுமக்களின் விருப்பம் போன்றவை நிலையான எதிர்காலத்துக்கான ஊக்கியாக செயற்படும். எவ்வாறாயினும், இந்தப் பார்வையை உணர்ந்துகொள்வதற்கு விவேகமான கொள்கை உருவாக்கம் சர்வதேச உறவுகளை திறம்பட நிர்வகித்தல் மற்றும் ஒரு மீள்தன்மை கொண்ட பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான தொடர்ச்சியான முயற்சிகள் தேவைப்படும்.

முடிவாக நாம் எதிர்பார்க்கும் சுதந்திரத்துக்கான இலங்கையின் வேட்கையானது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும். தேசத்தின் சவால்களை சமாளித்து தன்னிறைவை அடைவதற்கான திறனானது அதன் தலைமையின் செயற்றிறன், இராஜதந்திர முன்னெடுப்புகள் அதன் நிறுவனங்களின் பொறுப்புக்கூறல், சுருங்காத வணிகச்சுழல், அதன் மக்களின் விருப்புகள் நிறைவேறுதல், நீதித்துறைச் சுதந்திரம் மற்றும் பத்திரிகைச் சுதந்திரம் போன்றவற்றைப் பொறுத்தது என்பதைச்சுட்டிக்காட்டுவது அவசியமாகும்.



# ரேவதி இயக்கத்தில் பிரியாமணி, ஆரி புதிய வெப் தொடர்

80, 90களில் முன்னணி நடிகையாகத் திகழ்ந்தவர் நடிகை ரேவதி. தமிழ், தெலுங்கு, ஹிந்தி, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் நடித்துள்ளார். இயக்குநராக ஹிந்தி மற்றும் மலையாள மொழிகளில் ஒருசில படங்களை இயக்கியுள்ளார்.

தற்போது முதல்முறையாக ரேவதி தமிழில் ஒரு வெப் தொடரை இயக்கியுள் ளார். இதனை அவருடன் இணைந்து சித்தார்த் ராமசுவாமி என்பவரும் இயக்கியுள்ளார். இதில் முதன்மை கதாபாத்திரத்தில் பிரியாமணி, ஆரி அர்ஜூனன் ஆகியோர் நடித்துள்ளனர். அம்ரிதா ஸ்ரீனிவாசன், சம்பத் ஆகியோரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இப்போது இந்த வெப் தொடரின் போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் வெப் தொடரின் தலைப்பு, முதல் பார்வை, டீசர் ஆகியவை அடுத்தடுத்து வெளியாகவுள்ளன. இந்தத் தொடர் ஹாட் ஸ்டார் ஓடிடி தளத்தில் ஒளிபரப்பாகும் எனக் கூறப்படுகிறது.



# அற்புத நடிகர் எஸ்.வி.ரங்கராவ்



60 வயது கதாநாயகர்கள் 18 வயது கதாநாயகிகளுடன் நடிப்பதை நாம் பார்த்து ரசித்திருக்கிறோம். நாம் சொல்லும் செய்தி கொஞ்சம் புதுசு. 1950களில் தொடங்கி 60, 70களில் கண்ணியமான அப்பா பாத்திரத்தில் நடித்த எஸ்.வி.ரங்கராவ் தன் வாழ்நாளில் முதுமையை பார்த்ததில்லை. ஆம், அவர் மறைந்தபோது அவருக்கு வயது 56தான். எம்.ஜி.ஆரை விட வயதில் இளையவர்.

ஆனால், அவருக்கு தந்தையாக – 'நீதிக்குப் பின் பாசம்' (1963) படத்தில் பாசமுள்ள தந்தை வேடம். மேலும், 'தாய்க்குத் தலைமகன்' (1967), 'எங்க வீட்டுப் பிள்ளை' (1963) போன்ற படங்களில் எம்.ஜி.ஆருக்கு மாமனாராக நடித்தார்.

எம்.ஜி.ஆர். கதாநாயகனாகவும் எஸ்.வி.ரங்கராவ் வில்லனாகவும் நடிக்கவிருந்த படம்தான் 'ராஜா' (1972). ஏதோ ஒரு காரணத்தால் அப்படத்தில் எம்.ஜி.ஆர். நடிக்கவில்லை. பின்னர் சிவாஜி கதாநாயகனாகவும் எஸ்.வி.ரங்கராவ் வில்லனாகவும் உருப்பெற்றது 'ராஜா' என்ற படம். பின்னர் எம்.ஜி.ஆர். நடித்து 1969ஆம் ஆண்டு வெளிவந்த படம்தான் 'நம் நாடு'. இப்படத்தில் வில்லர்களாக ஏ.எஸ்.அசோகன், தங்கவேலு, ராமதாஸ் போன்றோர்களுடன் பயங்கர வில்லனாக இவர் நடித்தார்.

இவர் ஆரம்ப காலத்தில் பயங்கர மந்திரவாதியாக பல படங்களில் நடித்தார். அவற்றுள், 'மாயா பஜார்', 'பாதாள பைரவி', 'அலாவுதீனும் அற்புத விளக்கும்', 'சௌபாக்கியவதி' போன்ற படங்கள் சில. அந்தக் காலகட்டத்தில் அப்பா வேடங்களில் நடித்த ரங்கராவ், நாகையா போன்றவர்கள் அழுது எம்மையும் அழ வைத்தபோது தன்னுடைய கம்பீரமான நடிப்பாலும் ஆஜானுபாகுவான சரீரத்தாலும் நம் தமிழ் ரசிகர்களைத் தம்பால் இழுத்தவர். இந்த மாதிரி தந்தையோ, மாமனாரோ நமக்கு அவரைப்போல இருக்க மாட்டாரோ என ஏங்க வைத்தவர்.

தெலுங்கு தேசத்தில் பிறந்தாலும் தமிழை டப்பிங் இல்லாமல் சுத்தமாக உச்சரித்தாலும் யதார்த்தமான நடிப்பாலும் தமிழ்த் திரையுலகில் ஒரு தனி இடம் பிடித்தவர். தெலுங்குப் படங்களை இயக்கி விருது பெற்றவர். அந்தக் காலத்தில் பட்டதாரிகள் படிக்க வருவது குறைவு. ரங்கராவ் ஒரு பட்டதாரி. ஒரு நடுத்தர வயதினரை மாயா பஜாரில் யார் யார் நடித்தார்கள்? என்று கேட்டுப் பாருங்கள். யாரும் அதில் நடித்த ஜெமினி, சாவித்திரியை சொல்லமாட்டார்கள். டக்கென்று ரங்கராவ் என்றுதான் சொல்வார்கள்.

சில படங்களில் அவருடைய கதாபாத்திரம் அதில் நடித்த கதாநாயகரையும் மிஞ்சிவிடும். மாமனார், மருமகன் பாசப் பிணைப்பை உணர்த்திய 'நானும் ஒரு பெண்' அதில் ஒன்று. 'அன்னை' திரைப்படத்தில் மனைவியைப் புரிந்துகொண்ட கணவன் பாத்திரமாகட்டும், வளர்ப்புத் தந்தை மகனிடம் காட்டும் பாசத்தை உணர்த்திய 'படிக்காத மேதை'யாகட்டும், ரங்கராவைத் தவிர யாரும் அவ்வளவு அற்புதமாக நடித்திருக்க முடியாது.

'கண்கண்ட தெய்வம்' மற்றும் 'அன்புச் சகோதரர்கள்' ஆகிய படங்களில் தோன்றிய அண்ணனை நாம் மறக்க முடியுமா? இப்படி எத்தனையோ திரைப்படங்கள். ஆங்கில புலமை மிகுந்த அவர் நிறைய ஷேக்ஸ்பியர் நாடகங்களில் நடித்துள்ளார். 'கை கொடுத்த தெய்வம்' படத்தில் சாவித்திரிக்கு தந்தையாக நடித்து நம் கண்களைக் குளமாக்கினார். 'சர்வர் சுந்தரம்' படத்தில் சிறிய வேடத்தில் தோன்றினாலும் தம் நகைச்சுவை நடிப்பால் நம்மை குலுங்க குலுங்க சிரிக்க வைத்தார்.

இவர் சிவாஜியுடன் பல படங்களில் நடித்தவர். அவற்றில் 'பாவ மன்னிப்பு' (1961), 'சிவந்த மண்' (1962), 'பேசும் தெய்வம்' (1967), 'சிவந்த மண்' (1969), 'வசந்த மாளிகை' (1972) போன்ற படங்கள் குறிப்பிடத்தக்கவை.

இவருடைய குரலுக்குச் சிறந்த பின்னணிப் பாடகர்தான் கண்டசாலா. இவரின் கடைசிப் படம் 'அன்புச் சகோதரர்கள்.'

**கலாபூஷணம்**
**கல்லொளுவை பாரிஸ்**



# பழைய நினைவுகளைப் பகிர்ந்து காதலர் தினத்துக்கு வாழ்த்திய பார்த்திபன்




நடிகரும் இயக்குநருமான பார்த்திபன் தனது காதல் அனுபவம் குறித்து எக்ஸ் தள பக்கத்தில் வெளி யிட்டுள்ள பதிவில்,

காதல் ஒழிக... இன்றைய அரசியலில் தவிர்க்க இயலா கர்ஜனை நண்பர் சீமான். அவர்கள் இயக்க நான் நடிப்பதற்காக கால் நூற்றாண்டுக்கு முன் இதே நாளில் வைக்கப்பட்ட தலைப்பு. படம் கை விடபட்டாலும் நட்பு அப்படியே ஒருவரை ஒருவர் ரசித்தபடி தொடர்கிறது. என் சில கவிதைகளை அவர் சிலாகித்து மேடையில் பாராட்டும்போது அந்தக் கவிதைகளிலுள்ள கருத்து விதைகளில் சில புது தளிர்கள் துளிர்க்கச் செய்கிறது. நானும் ஒரு ஒலிவாங்கிப் போல் அவர் பேச்சை மிக அருகிலிருந்து ரசிப்பேன். இருவரின் அரசியலும் தத்துவமும் கருத்தும் விருப்பமும் வெவ்வேறாக இருப்பினும்,

கடவுள் இல்லை - பெரியார்
பெரியாரே இல்லை - சீமான்

அவரவரது குரலை உரக்க ஒலிக்கச் செய்வதாகவே நான் பார்க்கிறேன். நானும் அப்படியே எனக்கு சரியெனப் பட்டதை பட்டவர்த்தனமாகப் பேசுகிறேன். (அரசியல் + இன்ன பிற லாப நோக்கின்றி)

புரிந்தோர் பிஸ்தாக்கள்
புரியாதோர் பிஸ்கோத்துகள்!
சரி காதலுக்கு வருவோம் !
வருவதும் போவதும் வாடிக்கையே
காதலுக்கு.
வருவதெல்லாம் போவதும்
வாடிக்கையே சாதலுக்கு!

என்றோ பிடித்துப்போனது இன்று பிடிக்காமல் போய் சீமான் சுவரில் பெரியார் புகைப்படம்போலதான் இந்தப் பாழாய் போன காதலும்.

என் இதயத்தில் அவள் அடித்துவிட்டுச் சென்ற ஆணியில் கூட அவள் புகைப்படத்தைத்தான் மாட்டி விட்டிருக்கிறேன் என என் நண்பர் ஒருவர் எழுதியதைப் போல.

போன வருடம்
போன காதல்
வேறு பூமியில்
வேர் பிடித்துப் பூத்துக் குலுங்கும்
-அது
புரியாத - இன்னும்
பிரியாத - உயிர்வரை
பிரிந்திடாத ஒரு
காதலை
காதல் ஒழிக என
இக் காதலர் தினத்தில்
கொண்டாடும்!- புதிதாய்
பூத்தவர்கள்
பூத்தரேக்குலு (pootharekhulu )
சுவைத்து
கொண்டாட்டும்,
தோத்தவர்கள்
காத்திருங்கள்..
அவளை/அவனை
சுமந்து கர்ப்பமான இதயத்தில்
கன்றாவி கவிதையாவது
பிறக்கலாம்.
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
சிறப்பொவ்வா காதல் உய்க்கும் -
பின் பொய்க்கும்.
இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# 'லவ் மேரேஜ்' பெர்ஸ்ட் லுக் வெளியீடு




விக்ரம் பிரபு நடிப்பில் உருவாகியுள்ள 'லவ் மேரேஜ்' படத்தின் ஃபர்ஸ்ட் லுக்கை வெளியிட்டுள்ளது படக்குழு.

அறிமுக இயக்குநர் சண்முகப்பிரியன் இயக்கத்தில் விக்ரம் பிரபு புதிய படமொன்றில் நடித்து வந்தார். இப்படத்துக்கு 'லவ் மேரேஜ்' எனத் தலைப்பிடப்பட்டு படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை வெளியிட்டுள்ளது படக்குழு. இதற்கு இணையத்தில் வரவேற்பு கிடைத்துள்ளது.

இதில் கவுதம் மேனன், சுஷ்மிதா பட், மீனாட்சி தினேஷ், ரமேஷ் திலக், அருள்தாஸ், கஜ ராஜ், முருகானந்தம், கோடாங்கி வடிவேலு உள்ளிட்ட பலர் விக்ரம் பிரபுவுடன் நடித்துள்ளனர். இவர்களுடன் சத்யராஜ் சிறப்புத் தோற்றத்தில் நடித்துள்ளார். இசையமைப்பாளராக ஷான் ரோல்டன், ஒளிப்பதிவாளராக மதன் கிறிஸ்டோபர், எடிட்டராக பரத் விக்ரமன் ஆகியோர் பணிபுரிந்துள்ளனர்.

இப்படத்தின் கதை களம் குறித்து இயக்குநர் சண்முகப் பிரியன், ''கிராம பின்னணியில் அனைவரது மனதையும் கவரும் வகையில் குடும்ப பொழுதுபோக்கு படமாக லவ் மேரேஜ் தயாராகிறது. தாமதமான திருமணம் என்ற சூழலில் போராடும் ஆண்களின் நகைச்சுவையான மற்றும் பார்வையாளர்களுடன் எளிதில் தொடர்புகொள்ளக்கூடிய சம்பவங்களை மையமாகக்கொண்டு படத்தின் திரைக்கதை அமைக்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

இப்படத்தின் படப்பிடிப்பு முழுமையாக முடிவடைந்து இறுதிகட்டப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இதனை ரைஸ் ஈஸ்ட் என்டர்டெயின்மென்ட் மற்றும் அஸ்யூர் பிலிம்ஸ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து தயாரித்துள்ளன. கோடை விடுமுறை இப்படத்தை வெளியிட படக்குழு முடிவு செய்திருக்கிறது.

# வாழ்க்கைப் படகு

இந்தியத் திரையுலகில் வெற்றிச் சின்னமாக விளங்கிய பட நிறுவனம் ஜெமினி பிலிம்ஸ். இதன் அதிபர் எஸ்.எஸ்.வாசன் தமிழ், ஹிந்தி, தெலுங்கு, மலையாளம் என்று பல மொழிகளில் படமெடுத்துச் சாதனை புரிந்தவர். 1961ஆம் ஆண்டு 'இரும்புத் திரை' படம் எடுத்து நான்காண்டுகள் கழிந்த நிலையில், 1965ஆம் வருடம் மீண்டும் அவர் தயாரித்த படம் 'வாழ்க்கைப் படகு'.

முதலில் ஹிந்தி மொழியில் இந்தப் படம் உருவானது. ஜிந்தகி என்ற பெயரில் உருவான படத்தில் ராஜேந்திரகுமார், வைஜெயந்திமாலா, ராஜ்குமார் ஆகியோர் நடித்தனர். படத்தின்



கதாநாயகி நடனப் பெண் என்பதால் அப் பாத்திரம் வைஜயந்திமாலாவுக்கு மிக பொருந்தியது. ஆனால், தமிழில் அவர் நடிக்காததால் தேவிகா அப்பாத்திரத்தை செய்திருந்தார். 1965இல் தமிழ்,



தெலுங்கு இரு மொழிகளிலும் படம் தயாரானது. ஜெமினியில் தயாராகி ஜெமினி கணேசன் ஆனவர் ஜெமினி. இப்படத்தில் அவர் ஹீரோவாக நடிக்க, தெலுங்கில் என்.டி.ராமராவ் ஹீரோவானார். இரண்டிலும் ஹிரோயின் தேவிகா!

ஏழைப் பெண்ணான சீதா கோபாலின் நடன மன்றத்தில் நாட்டியக்காரியாக பணியாற்றுகிறாள். அவளுடைய அழகு, குணம் என்பன கோபாலை கவர, ஒருதலையாக அவளை காதலிக்கிறான். அதேசமயம் தியேட்டர் முதலாளி கண்ணபிரானும் சீதாவை தன் இச்சைக்குப் பயன்படுத்த முயற்சிக்கிறான். அவளைக் கடத்தி வர அவன் எடுக்கும் முயற்சி ஜமீன்தார் சொக்கநாதனின் மகன் ராஜன் மூலம் முறியடிக்கப்படுகிறது.

சீதா ஒரு நடனப் பெண் என்று அறிந்தும் ராஜன் சீதாவை விரும்புகிறான். அந்தஸ்து வித்தியாசமின்றி இருவரிடையே காதல் மலர்கிறது. ஜமீன்தார் இவர்களின் காதலை எதிர்க்கிறார். ஆனால், ராஜனின் பிடிவாதத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் திருமணத்துக்கு சம்மதிக்கிறார். ஆனாலும் கோபாலுடன் எந்தத் தொடர்பும் சீதாவுக்கு இருக்கக் கூடாது என்று நிபந்தனையும் விதிக்கிறார். சீதாவும் அதனை ஏற்கிறாள். கல்யாணத்துக்குப் பிறகு கடைத்தெருவுக்குச் செல்லும் சீதா திடீரென்று பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் காரணமாக ஓர் இரவை கோபாலின் இல்லத்தில் கழிக்கிறாள். அதே இரவு கண்ணபிரான் கொல்லப்பட அப்பழி கோபால் மீது விழுகிறது. அவனைக் காப்பாற்ற சீதா தான் அன்றிரவு அவன் இல்லத்தில் தங்கியிருந்ததை கோர்ட்டில் சொல்கிறாள். கோபாலுக்கு விடுதலை கிட்டுகிறது. ஆனால், சீதா மீது களங்கம் சுமத்தப்படுகிறது. ராஜன் அவளை ஜமீனை விட்டே விரட்டி விடுகிறான். ஆனாலும் பிரிவின் வேதனை தாங்காது தவிக்கிறான். மீண்டும் ராஜன், சீதா இணைந்தார்களா என்பதே மீதி கதை.

படத்தில் ஜெமினி, தேவிகா இருவரும் இணையாக நடித்திருந்தனர். படத்தின் கதை தேவிகாவை முதன்மைப்படுத்தி அமைக்கப்பட்டதால் சீதாவாக நடித்த தேவிகாவின் நடிப்பு நிறைவாக இருந்தது. எந்த இடத்திலும் மிகையின்றி தன் நடிப்பை வழங்கியிருந்தார். ஜெமினி மகிழ்ச்சியாக இருக்கும் காட்சிகளை விட சோகமாக இருக்கும் காட்சிகளே அதிகம். அது ஒன்றும் அவருக்கு கஷ்டமில்லையே!

எஸ்.வி.ரங்கராவ் ஜமீன்தார், வித விதமாக ஆடை அணிந்து காட்சித் தருகிறார். ஆனால், நடிப்பு வழக்கமானது தான். முத்துராமனின் மேக்கப் அவரின் பாத்திரத்தின் தன்மையை உணர்த்தி விடுகிறது. டீ.எஸ்.பாலையா, எம்.வி.ராஜம்மா, எஸ்.ராமராவ், எஸ்.என்.லக்ஷ்மி ஆகியோரும்



நடித்திருந்தனர். ஆர்.எஸ்.மனோகர், பாலாஜி இருவரும் வில்லன்கள். அவர்கள் இன்றி படம் எப்படி நகரும்.

படத்தின் விறுவிறுப்பு நாகேஷ், பி.டி .சம்பந்தம், கீதாங்சலி மூவரின் நகைச்சுவையால் காப்பாற்றப்படுகிறது. இவர்களும் இல்லாவிட்டால் கஷ்டம்தான்.

'வாழ்க்கைப் படகு' படத்தின் மூலம்தான் கண்ணதாசன், விஸ்வநாதன், ராமமூர்த்தி



மூவரும் இரும்புத் திரையை அகற்றி ஜெமினி கோட்டைக்குள் நுழைந்தார்கள். அவர்களுடன் அருமையான பாடல்களும் நுழைந்தன. வாசனின் கண்டிஷனுக்கு எல்லாம் ஏற்றாற்போல் செயற்பட்டு பாடல்களை உருவாக்கினார்கள்.

## ஸ்வீட் கிக்ஸ்டி

ச.சுந்தரதாஸ்

நேற்று வரை நீ யாரோ நான் யாரோ, சின்ன சின்ன கண்ணனுக்கு, உன்னைத்தான் நான் அறிவேன், ஆயிரம் பெண்மை மலரட்டுமே பாடல்கள் கருத்துடன் இனிமையாக ஒலித்தன.

படத்துக்கு கதை வசனம் வேப்பத்தூர் கிட்டு. பிரெஞ்சு நாவலொன்றை அடிப்படையாகக்கொண்டு கதையை கிட்டு எழுதியிருந்தார். தன் திறமையை காட்ட கிடைத்த வாய்ப்பை அவர் நழுவ விடவில்லை. ஒளிப்பதிவு எல்லப்பா. படத்தை முதலில் வாசனின் மகன் எஸ்.எஸ்.பாலன் டைரக்ட் செய்வதாக இருந்தது. பின்னர் படத்தை சி.சீனிவாசன் (எஸ்.எஸ்.வாசன் அல்ல) இயக்கினார். மூவர் பணியும் ஓகே.

ஹிந்தியில் 1962இல் வந்த ஜிந்தகி பெற்ற வெற்றியை வாழ்க்கைப் படகு ஏனோ பெறவில்லை. படத்தின் உச்ச காட்சி ரசிகர்களின் ரசனைக்கு ஏற்றாற்போல் அமையாதது காரணமாகியிருக்கலாம். ஆனாலும் வாழ்க்கைப் படகில் சவாரி செய்வது சுக அனுபவம்தானே!

s.suntheradas@hotmail.com

# அணுவணுவாய்...

இராட்சத மலையாய்
அது பருத்து இருந்தது
மெய் பிதுங்க
அழுத்தி அழ வைத்தது

காற்றழுத்த
மண்டலத்தில்
கட்டிப்போட்டு வைத்தது

எட்டுத்திக்கும் இடிந்து
விழுவதாய்
எங்கும் அசரீரி முழங்க
மலங்க மலங்க
விழிக்க வைத்தது

நாளொரு மாமேனியும்
பொழுதொரு
பெருவண்ணமுமாய்
ஞாபகத்தி லெரிந்து
கொண்டிருந்தது

அணுவணுவாய்த் தின்னும்
பெரும்பசியில்
சின்னாபின்னம் செய்தது

சோதனையென்பதை
எழுதப்பட்ட விதியென்பதை
ஏற்க மறுத்து புலம்புவதையே
பூரணமாய்ப் புத்தி புரிந்தது

உறக்கம் தொலைத்த வலி
விழிகளில் போலிக்
கனவுகளின் பிம்பங்களைத்
தோற்றுவித்தது

பின் காலத்தின் குத்தூசிகள்
அதனைச் சிறுகச் சிறுக
காற்றிழக்க வைத்தன

உருவம் படிப்படியாக
குறைந்து
உப்பியிருந்த அது
உடைந்து மெதுவாயழிந்து
சிறுத்துக் கிடக்கிறது
காலடியில் இப்போது ...

துயரமொரு பலூன் போலும்
துயரமொரு சருகு போலும்

கனம் குறைந்தாலும்
கணங்களில் தொலைந்து
போனாலும் அவ்வப்போது
பெருங்காட்சி தரும்
சித்திரமாய் சிந்தனையில்
தொங்கிக்கொண்டுதான்
இருக்கிறது!

**Dr. ஜலீலா முஸம்மில்,**
**ஏறாவூர்.**



# விமரைக்கூ கவிதைகள்



உயரமான திருவள்ளுவர் சிலை
பாராட்டும் வண்ணம் உயர்ந்து நிற்கிறது
சிற்பியின் உயிரோட்டக் கலை.

★★★

விஞ்ஞானத்தின் விசித்திர விந்தை
அளவு கடந்து செல்கையில்
ஆயுளைக் குறைக்கிறது சிந்தை.

★★★

இயற்கையாய் உருவாகும் மரம்
உயிரிகளுக்கு எப்போதும் நிழல் தரும்
இறைவனின் இணையில்லா வரம்.

★★★

பாட்டியின் நாட்டார் பாடல்
கேட்டு மகிழ அவரிடம் செல்கையில்
பிறக்கும் நல்ல ஆடல்.

★★★

**விவேகவெளி தமிழேந்திரன்,**
**(வெல்லபதியான்)**
**கிழக்கு மாகாணம்.**

# தடையில்லை

என்னவளே
உனது மடியில்
படுத்துப் புரண்டேன்

இதழில்
முத்தமிட்டேன்
சரசம் செய்தேன்



ஏன் நீ
மறுக்கவில்லை?
ஓ நமக்குத் திருமணம்
முடிந்துவிட்டதா?

**கல்லொளுவை பாரிஸ்,**
**மல்வானை.**

# விண்ணைத் தொடு

மண்ணில் மகுடம் தாங்கிடப்
பிறந்தாய்
கண்ணில் கணக்கற்ற கனவுகள்
சுமந்தாய்
எண்ணம் எங்கிலும் இலட்சியம்
விதைத்தாய்
வண்ணமாய்ச் சாதனை படைத்திடத்
துணிந்தாய்

உலகம் உனது உணர்ந்திட முயல்வாய்
அவலம் நீக்கி மகிழ்வுடன் வாழ்வாய்
கலகம் வேண்டாம் கல்வியைப்
பெறுவாய்
அழகிய வாழ்வினை அனுபவித்து
மலர்வாய்

வரமே வாழ்க்கை பெறுமதி காண்பாய்
தருமே நிம்மதி திருப்தியை
உணர்வாய்
விரக்தியில் வீணே விழுவதை
விடுவாய்
விரல்கள் உனதே விண்ணைத்
தொடுவாய்

**ஹாஜறா கலீலுர் ரஹ்மான்,**
**காத்தான்குடி.**

# அவளின் நினைவுக்கீறல்கள்

அன்பே, உன் புன்னகை போது
வானமும் பூமியும் சேர்ந்து வாழ்வதாய் தோன்றும்
காற்றில் தென்றலாய் காதல் எழுவதைப் போல
நெஞ்சுக்குள் மெழுகாய் உருகும் ஓர் உணர்வு!

உன் புன்னகை பொழியும் ஒளியில்
சூரியனும் மறைந்து விடுமோ என எண்ணுகிறேன்
முடிவில்லா ஆசைகள் தோன்றினாலும்
உன் ஒரு பார்வையால் நிம்மதி காண்கிறேன்

தவிப்பு எனது இதயத்தில் இருந்தாலும்
உன் சிரிப்பு எதையும் மறந்து விடச் செய்கிறது
மழையில் துளிகள் குளிர்வது போல
உன் புன்னகை என் வாழ்வை நிரப்புகிறது

உறக்கம் தொலைத்த இரவுகளும்
உன் நினைவால் கனவாய் மாறுகிறது
அன்பே, உன் சிரிப்பின் ஓசை கேட்டவுடன்
நேரம் கூட நிற்கும் ஆச்சரியமாய்!

என் கவலைகளின் எல்லையும் நீக்கும்
உன் சிரிப்பு தரும் பேரின்பமே எனது வாழ்வு
அன்பே, உன் புன்னகை எந்நாளும்
எனக்குள் ஆயுள் கைதியாய் பூக்கிறது!

**கவிஞர் த.ரூபன்,**
**ஈச்சிலம்பற்று.**

# தூறல்கள்

# குடிக்கத் துடிக்கும் மனம்

மதுவெறி கொண்ட ஆசிரியரொருவர் மற்றொரு மதுவை விரும்பும் வெறியன் ஒருவனை வேலைக்கமர்த்தினார். அந்த மதுவெறியன் வைத்திருந்த மதுவினில் பெரும் பகுதியை வேலைக்காரனே குடித்துத் தீர்த்தான். எனவே, அந்த ஆசிரியர் வேலைக்காரனையே அதன்பின் அமர்த்தவில்லை. அப்படியே ஒருவேளை வேலைக்கு அமர்த்தினாலும் மதுவைப் பற்றி சிறிதும் அறியாத சிறுவனையே அமர்த்தவேண்டுமென்று மனதில் தீர்மானித்துக்கொண்டார்.

ஒரு நாள் ஆசிரியரின் நண்பர் ஒருவர் ஒரு சிறுவனை அழைத்து வந்து அவனை வேலைக்காரனாக அமர்த்திக்கொள்ளும்படி பரிந்துரை செய்தார்.

ஆசிரியர் அச்சிறுவனிடம் மஞ்சள் நிறமான மது போத்தலைக் காட்டி, ''இது என்ன?'' என்று கேட்டார். சிறுவன் அம் மதுவின் பெயரைச் சரியாகச் சொன்னான். மதுவின் பெயர்களை அறிந்து வைத்திருக்கும் இச்சிறுவன் அவற்றின் சுவைகளையும் அறிந்திருப்பான் என்று எண்ணி அவனை வேலைக்கு அமர்த்திக்கொள்ள மறுத்தார்.

பின்னர் வேறொரு சிறுவனை வேறொரு நண்பர் வேலைக்குப் பரிந்துரைத்தார். அவனிடம் மிக உயர்வகை மதுவைக் காட்டி அதன் பெயர் கேட்டார். அச்சிறுவனோ அதன் பெயரைத் தப்பாது செப்பினான். உறுதி, இவன் பெருங்குடிகாரனாக இருக்கவேண்டுமென நினைத்து அவனையும் புறக்கணித்தார்.

எதிர்பாராத வகையில் மூன்றாவது ஒரு சிறுவன் பரிந்துரைக்கப்பட்டான். இம்முறை இச்சிறுவன் வெள்ளை நிற மதுவுக்கும் மஞ்சள் நிற மதுவுக்கும் வேறுபாடு தெரியாமல் திகைத்தான். அவன் மதுவைப் பற்றி ஒன்றும் அறியாதவன் எனக் கணித்து அவனை வேலைக்கு அமர்த்திக்கொண்டார்.

ஒருநாள் ஆசிரியர் வீட்டை வேலைக் காரனிடம் ஒப்படைத்துவிட்டு வெளியில் சென்றார். அப்படி அவர் செல்லும்போது வேலைக்காரனிடம், “சமையல் அறையின் சுவரில் ஒரு பன்றியின் தொடை தொங்கிக்கொண்டிருக்கிறது. முற்றத்தில் கோழி மேய்ந்து கொண்டிருக்கிறது. எனக்காக அவற்றைப் பாதுகாத்துக்கொள். உள் அறையில் வெள்ளை மது நிரம்பிய குடுவை ஒன்றும் சிவப்பு மது நிறைந்த ஒரு குடுவையும் வைத்துள்ளேன். அவற்றைத் தொட்டுக்கூட பார்க்காதே. யாராவது அதனை அருந்தினால் அவர்களின் வயிறும் குடலும் ஒரு மணிநேரத்தில் வெடித்துச் சிதறிவிடும்” என்று மூன்று தடவைகள் வற்புறுத்திச் சொல்லிவிட்டு அங்கிருந்து அகன்று சென்றார்.




அவர் சென்றதும் முற்றத்தில் மேய்ந்து கொண்டிருந்த கோழியை அறுத்து சமைத்துச் சாப்பிட்டான். பின் பன்றியின் தொடையையும் தின்று தீர்த்தான். பின்னர் இரண்டு குடுவைகளிலும் இருந்த மதுவில் மூழ்கியெழுந்தான். போதை தலைக்கேறியது.

திரும்பி வந்த ஆசிரியர் சிறுவன் மரக்கட்டைபோல் தரையில் கிடந்து உறங்குவதைக் கவனித்தார். அங்கு நிரம்பி வழிந்த மணத்திலிருந்து நிலைமையை நன்கு புரிந்துகொண்ட ஆசிரியர் அவனைக் காலால் எட்டி உதைத்து எழுப்பினார் சினத்தில்.

கண்ணீரில் குழந்தை கதறியது, “நீங்கள் சென்றதும் நான் வீட்டிலுள்ள அனைத்து உடைமைகளுக்கும் பொறுப்பேற்றுக் கொண்டேன். எல்லாவற்றையும் நான் என் ஆதிக்கத்தில் அடக்கி ஒடுக்கிக் கட்டுப்படுத்தி வைத்திருந்தேன். திடீரென்று பூனை ஒன்று பதுங்கி வந்து பன்றித் தொடையைக் கவ்விச் சென்றது. அடுத்து நாய் ஒன்று ஓடி வந்து முற்றத்தில் நின்று மேய்ந்துகொண்டிருந்த கோழியைப் பக்கத்து வீட்டு முற்றத்துக்குத் துரத்திவிட்டது. இந்த முறைகேடுகளைக் கண்டு அதிர்ந்துபோன நான், என் வாழ்க்கையை முடித்துக்கொள்ள நினைத்தேன். குடுவைகளிலிருந்த மதுவைப் பற்றி நீங்கள் கூறிய எச்சரிக்கை மொழிகள் என் நினைவுக்கு வந்தன. எனவே, சிவப்புக் குடுவையிலிருந்த மதுவை காலி செய்தேன். ஆனால், நான் அதனைக் குடித்த பின்னும் உயிரோடிருப்பதை உணர்ந்தேன். எனவே, நான் மஞ்சள் குடுவை மதுவையும் குடித்தேன். பின்னர் நீங்கள் தற்போது கண்ட வண்ணம் வாழ்வுக்கும் சாவுக்குமிடையேயான் இப்பரிதாப நிலைக்குள்ளானேன்” என்றான். கேட்டுக் கிறுகிறுத்தார் ஆசிரியப் பெருமகனார்.




# முயற்சி மனிதனது பலம்



காலமும் சூழ்நிலையும் ஒரு நாள் மாறும் என்ற நம்பிக்கையில்தான் மனிதன் பெரும்பாலும் வாழ்கின்றான்.

ஆனால், சூழ்நிலைகள் மாறும் என்பதை விட சூழ்நிலைகள்தான் மனிதனை மாற்றும் என்பதுதான் நடைமுறை உண்மை.

எத்தகைய சூழ்நிலையிலும் தான் எடுத்துக்கொண்ட முயற்சியில், எண்ணத்தில் உறுதிப்பாடு இருக்கும் ஒருவனது மனதில் சூழ்நிலையானது எத்தகைய மாற்றத்தையும் ஏற்படுத்தாது.

அவனது பயணம் மாற்றத்தை நோக்கியதாகச் செல்லும். மாற்றங்களுக்கேற்ப எங்களது முயற்சியையும் மாற்றியமைத்துக்கொள்ளல் வேண்டும்.


எமது முயற்சியில் முன்னேற்றம் குறைவாகத் தென்பட்டால், எமது முயற்சியின் அளவை அதிகரிக்கும்போது, பலன் தானாகவே கிடைக்கும்.

முயலாமை மனிதனது பலவீனம். முயற்சி மனிதனது பலம்.

முயன்று தோற்றால், அது பாடம். அனுபவம். அடுத்தகட்டத்துக்கான அடித்தளம். முயன்று வென்றால், அது வெற்றி, மகிழ்ச்சி, அடுத்த நகர்வுக்கான மூலதனம்.

முயற்சி செய்யுங்கள். முயற்சி செய்யுங்கள். முயற்சி செய்துகொண்டே இருங்கள். உங்களது இலட்சியத்தை அடையும் வரை முயற்சி செய்யுங்கள்.

**“அடுத்தடுத்து இரு ஜவுளிக்கடைகளில் திருடியிருக்கியே..?”**
**“புடவை திருடினேன்.. மேட்சிங் பிளவுஸ் இல்லை.. அதான் இன்னொரு கடைக்குப் போனேன்.. எஜமான்..”**



# பாடுவதை மறந்து அழுத எஸ்.ஜானகி

தமிழ்ச் சினிமா பாடலாசிரியர்களில் தனக்கென்று தனி பாணியை வைத்திருந்தவர் வாலிபக் கவிஞர் வாலி. அனைத்து வயதினருக்கும் ஏற்ற, அந்த காலகட்டத்துக்கு ஏற்ற பாடல்களை இயற்றுவதில் வல்லவர் வாலி.

காதல், தத்துவம், ஏக்கம், சோகம், காமம், குத்துப்பாட்டு என எந்தச் சூழ்நிலைக்கும் பாடல்களை இயற்றி, ரசிகர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தவர் வாலி.

தன் வரிகளால் ரசிகர்களை மயக்கும் வாலி, பாடகி ஜானகியை பாட முடியாமல் அழச்செய்த சம்பவமும் நடந்துள்ளது.

1978ஆம் ஆண்டு வெளியான திரைப்படம் அச்சாணி. காரைக்குடி நாராயணனின் கதையில் உருவாகிய இந்தப் படத்தில் முத்துராமன், லட்சுமி ஆகியோர் முக்கிய வேடத்தில் நடித்திருந்தனர்.

இந்தப் படத்துக்கு இளையராஜா இசையமைத்திருந்தார். பாடல்களை வாலி எழுதியிருந்தார்.

இந்தப் படத்தில் இடம்பெற்று மிகப்பெரிய வரவேற்பைப்பெற்ற பாடல்தான் ‘மாதா உன் கோயிலில் மணி தீபம் ஏற்றினேன்’. இந்தப் பாடலை ஜானகி பாடியிருந்தார்.

அருமையான டியூன், சிறப்பான பாடல் வரிகள் அமைந்ததால் இளையராஜா தன் பங்குக்கு இசைமூலம் இப்பாடலுக்கு உயிர் ஊட்டியிருந்தார்.

இயேசுவை பெறாமல் பெற்ற தாயாக மேரி மாதா இருந்ததுபோல இந்தப் படத்தின் கதாநாயகிக்கு காட்சிகள் அமைக்கப்பட்டு, அந்தச் சூழலில் இந்தப் பாடல் இடம்பெறும்.

முன்னதாக இந்த பாடல் உருவானபோது பல தடங்கல்கள் ஏற்பட்டன.

பிரசாத் ஸ்டுடியோ பிஸியாக இருந்ததால் இளையராஜாவால் காலையில் இந்தப் பாடலை ஒலிப்பதிவு செய்ய முடியவில்லை.

எனவே, வேறொரு ஸ்டுடியோவுக்குச் சென்றனர். ஆனால், அங்கு சில கருவிகள் வேலை செய்யவில்லை.

எனவே, மதியம் மீண்டும் பிரசாத் ஸ்டுடியோ வந்து பாடலை ஒலிப்பதிவு செய்தனர்.



அப்படி ஒலிப்பதிவு செய்தபோது, ஸ்டூடியோவில் மியூசிக் கண்டக்டர் என ஒருவர் இருப்பார். அவர் கை அசைவுக்கேற்ப இசைக் கலைஞர்கள் இசையை வாசிக்கத் தொடங்குவார்கள்.

ஆனால், இந்தப் பாடல் இசையில் மயங்கி அவர் கை காட்டவே இல்லை. இசைக் கலைஞர்கள் வாசிக்காததால் இளையராஜா என்ன ஆச்சு எனக் கேட்டபோது ''டியூனில் என்னை மறந்துவிட்டேன்'' எனச் சொன்னாராம்.

அதன்பின் எல்லாம் சரியாக நடந்து கொண்டிருந்தபோது, பாடலை பாடிக்கொண்டிருந்த ஜானகி, ''பிள்ளை பெறாத பெண்மை தாயானது. அன்னை இல்லாத மகனைத் தாலாட்டுது'' என்கிற வரிகளை பாடாமல் நிறுத்திவிட்டாராம்.

எல்லோரும் ஜானகியைப் பார்த்தபோது அவர் தொடர்ந்து பாட முடியாமல் அழுது கொண்டிருந்தாராம்.

ஜானகியிடம், ''என்ன ஆச்சு'' என இளையராஜா கேட்க, ''இந்த இசையும், வரிகளும் என்னை ஏதோ செய்கின்றன'' எனச் சொல்லியிருக்கிறார்.

பின்னர் ஜானகியை ஆசுவாசப்படுத்தி சிறிதுநேரம் கழித்தே அந்தப் பாடலை ஒலிப்பதிவு செய்து முடித்துள்ளனர்.

இதனிடையே இந்தப் பாடலை கேட்டுவிட்டு இதே மாதிரி பாடல் எனக்கு வேண்டுமென இயக்குநர் ஆர்.சுந்தர்ராஜன் இளையராஜாவிடம் கேட்டு அடம்பிடித்துள்ளார்.

அப்படி உருவான பாடல்தான் ‘பயணங்கள் முடிவதில்லை’ படத்தில் இடம்பெற்ற ''மணி ஓசை கேட்டு எழுந்து'' என்கிற பாடல்.

இந்தப் பாடலையும் ஜானகியே பாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# நம்ம தோட்டம் 02

## வெள்ள மண்ணும் சுண்ணாம்புக் குளியலும்

அருணா

என்னா கதை எப்படி இருந்தாலும் ஒவ்வொரு வருசமும் பொங்கல்னாலே வீட்டுக்கு சுண்ணாம்பு அடிச்சிருவோம்.

சுண்ணாம்பு கரைக்கிறதே புதுமையா இருக்கும்.

சுண்ணாம்ப வாளில போட்டு, வடிச்ச கஞ்சை ஊத்தி, கொஞ்சம் தண்ணீயையும் கலந்து செவுத்தில பூசுறதுக்கு ஏத்த மாதிரி நல்லா கலக்கிருவோம்.

வடிச்ச கஞ்சி ஊத்தினா, சுவர்ல அடிக்கிற சுண்ணாம்பு காஞ்சதுக்கு அப்புறம் உடம்புல ஒட்டாது.

இப்பிடி கஞ்சி ஊத்தாம அடிக்கிற வீட்ல சுண்ணாம்பு அடிச்சி கொஞ்ச நாளைக்கு போட்டிருக்கிற உடுப்பெல்லாம் வெள்ளையா ஒட்டிக்கிட்டு இருக்கும்.

பொதுவா முதுகு பக்கந்தான் உடுப்புகள்ல சுண்ணாம்பு அச்சி படும்.

ஏன்னா, பலாக்கட்டை அல்லது சாக்கிலதான் ஒக்காருவோம். அப்பிடி ஒக்காருற நேரம் முதுக சுவருல சாத்திதான் உக்காருறது வழமை.

இப்பிடி சுண்ணாம்பு அடிக்கிற நேரம் உடம்பே பட்டிரும். சுண்ணாம்புல குளிச்ச மாதிரியே இருக்கும்.

சாமான் சட்டு முட்டெல்லாம் வாசல்ல எடுத்து வச்சி, சுண்ணாம்பு அடிச்சி முடிக்க முன்னுக்கு வேனானுப் போயிரும்.

வெங்கல சாமான்கள மினு மினுன்னு வெளக்கி வைச்சிருவோம்.

சுவர் நிலத்த தொடுர ஓரமா தாரை லாமெண்ணை ஊத்தி கரைச்சி அரை அடிக்கு கரை அடிச்சாதான் சுண்ணாம்பு அடிச்ச மாதிரியே இருக்கும்.

வீட்டுக்குள்ளயும் நிலத்தில் வெள்ள வெள்ளையா ஒட்டிக்கிட்டு இருக்கும். சாணில இரண்டு பெற்றிய ஒடைச்சி போட்டு கரைச்சி மெலுகுனா நிலம் கறுப்பா இருக்கும். செவுற சுத்தி அரை அடிக்கு நிலத்திலயும் கரை அடிச்சிருவோம்.

மிச்சப்பட்ட சுண்ணாம்பு கலவ இருந்தா மட்டும் அதுலயே கரை அடிப்போம். இல்லனா நம்ம தோட்ட வெள்ள மண்ணுதான்.

ஒவ்வொரு தோட்டத்துக்கும் ரெண்டு மூனு வெள்ள மண்ணு குளியாவது இருக்கும். அப்பிடி இல்லனா பக்கத்து தோட்டத்துக்கு போயிட்டாவது வெள்ள மண்ணு நோண்டிக்கிட்டு வருவோம்.

வெள்ள மண்ணு குழி சில இடங்கல்ல குகை மாதிரி இருக்கும். வெள்ள மண்ணு வெட்டிக்கிட்டு இருக்கிற நேரம் அந்த குழி இடிஞ்சி விழுந்து நெறைய பாதிப்புகளும் ஏற்பட்டிருக்கு.

குசினி செவுருக்கு ஒவ்வொரு மாசமும் வெள்ள மண்ணுதான் பூசுவோம். ரெண்டு கிழமைக்கு ஒரு தடைவ சரி வெள்ள மண்ணு பூசணும்.

இல்லன்னா கருவடைஞ்சு போயிரும். அடுப்பு பொகை குசுனி செவுத்தில் அப்பிடியே அப்பிக்கிரும். வீட்டுக்குள்ளையும் இந்த பொகைனால பெரிய கரைச்சல். லாம்பு பொகை அதைவிட மோசம்.

அதுனாலதான் வருசத்துக்கு ரெண்டு மொறையாவது சுண்ணாம்பு அடிச்சே ஆகணும்.

குசினி செவுத்துக்கு வெள்ள மண்ணு பூசுரதும் நம்ம தோட்டத்து பொண்ணுங்களுக்கு கை வந்த கலை.

டிசைன் டிசைனா பூசுவாங்க. ரெண்டு கோட்டுக்கு நடுவுல காவடி வளைஞ்சி இருக்கிற மாதிரி வளைச்சி, வளைச்சி பூசுவாங்க. கோது (அடிமட்டம்) வைச்சி பூசுற மாதிரி நேரா இருக்கும்.

வெள்ள மண்ணு பூசுறதே ரொம்ப பெரிய கலையா பாப்பாங்க.

அட நல்ல வெள்ள மண்ணு இருந்தா தோட்டம் போற நேரம் ஒரு பொட்டனமா கட்டி எடுத்திட்டு போவாங்கனா பாத்துக்கிருங்களே!

இந்த வெள்ள மண் இருக்கிற இடத்தில செம்மண்ணு மாதிரியான மண்ணுகளும் இருக்கும். அதையெல்லாம் வச்சி நம்ம ஆளுக எப்புடி கலைநயமா பூசுவாங்க தெரியுமா?

பொண்ணு பாக்க வர்ரவங்க மெதுவா குசினிக்கு வந்து, அடுப்பங்கரைய பாத்தும் பெண்ண முடிவு பண்ணுவாங்க தெரியுமா?

அடுப்ப சோடிச்சி வைச்சிருக்கிறதே ரொம்ப பெரிய வேலை.

அடுப்ப அலங்கரிக்கிறது மாதிரியே அடுப்பு போடுறது அதைவிட பெரிய கலை.

அடுப்பு போடுறதுக்குனே தோட்டத்துக்கு இரண்டு அல்லது மூன்று பேர் இருப்பாங்க. அவுங்களுக்கு அந்த தோட்டத்தில ரொம்ப டிமாண்டா இருக்கும். பக்கத்து தோட்டங்கள்லயும் ரொம்ப செல்வாக்கு இருக்கும்.

ஒவ்வொரு வருசமும் பொங்கலுக்கு தோட்டத்தில் சுண்ணாம்பு, நீலம், பிரஸ் கொடுப்பாங்க. இதுக்குள்ள ஒரு புடிமானம் இருக்கு தெரியுமா?

தோட்டத்தில் வேலை செய்யாதவங்களுக்கும் சுண்ணாம்பு கொடுப்பாங்க. இப்பவும் கொடுக்கிறாங்க. இப்ப ஒவ்வொரு தோட்டத்திலயும் முப்பது நாப்பது பேருதான் வேலை செய்றாங்க.

இருந்தாலும் தோட்டத்தில உள்ள எல்லாருக்கும் கொடுக்கிறது எதுக்கு தெரியுமா?

இவ்வளவு நாள் இந்த வீட்ல இருக்கிறோம். இது எங்களுக்கு சொந்தம்னு சொன்னா?

இல்ல, இந்த வருசம் கூட நாங்கதான் சுண்ணாம்பு கொடுத்தோம். இது எப்புடி ஒங்க வீடாகும், அப்புடினு சட்டத்துக்கு முன்னாடி முன் வைக்க தேவையான ஏற்பாடுதான். புரியுதா?

இல்லனா இப்ப யாரு சுண்ணாம்பு அடிக்கிறாங்க.

பொதுவா தோட்டத்தில இப்படி ஒரு பழமொழி இருக்கும். “செவுத்தில் அடிக்கிற சுண்ணாம்பும் சரி, ஸ்டாப்ஸ்மாறு உறவும் சரி” அப்புடினு சொல்லவாங்க.

இந்த பழமொழி தர்ற அர்த்தங்க ஏராளம்.

இப்ப அடிச்ச சுண்ணாம்பு இருக்கிற வரைக்கும் தான்.

அடுத்த தடவ சுண்ணாம்பு அடிச்சதுக்கப்புரம் அது மாறிடும். தோட்டத்து உத்தியோகத்தர்கள் அடிக்கடி எடமாற்றம் பெற்றதைதான் இப்பிடி சொல்லுவாங்க.


ஒரு பக்கம் பார்தா உத்தியோகம் செய்றவங்க பாவம். இவுங்களை மேல் மட்டத்தில உள்ள தொரமாரும் சேர்த்திக்க மாட்டாங்க. இவங்க தோட்டத்து ஆளுகளோடையும் சேரவும் மாட்டாங்க.

மத்தது என்னான்னா, சில பேரு தோட்டத்து ஆளுகள காட்டி கொடுத்து ஐயாமாருக பக்கம் இருப்பாங்க. அவுகள பாத்தும் இப்புடிதான் வலியுறுத்துவாங்க.

நம்ம ஆளுக தேவையான எடத்துக்கு பொருத்தமா பழமொழிகளை சொல்லுவாங்க.

**தோட்டத்தில் வலம் வருவோம்**













**தலவாக்கலை அருள்மிகு ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தின் வருடாந்த தைப்பூச திருவிழாவின் 10ஆம் நாள் சித்திரை முத்தேர் பவனியும் காவடியாட்டமும் இடம்பெற்றன. (தலவாக்கலை நிருபர்)**

### எடப்பாடிக்கு எதிராக...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி...)

, கோபிசெட்டிபாளையத்திலுள்ள செங்கோட்டையன் வீட்டில் தினமும் நூற்றுக்கும் மேற்பட்ட அவரின் ஆதரவாளர்கள் சந்திப்பு நடைபெற்று வருகிறது.

இதனிடையே அவருக்கு துப்பாக்கி ஏந்திய பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. இது கழகத்தினுள் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினால் கோபிசெட்டிப்பாளையத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பங்கேற்ற செங்கோட்டையன், எடப்பாடி பழனிச்சாமியின் பெயரைத் தவிர்த்து வேறு அனைவரின் பெயர்களையும் கூறினார்.

டெல்லியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அலுவலகத்தை, சென்னை ராயப்பேட்டையிலுள்ள தலைமை நிலைய அலுவலகத்தில் இருந்தபடி, காணொளி வாயிலாக பழனிச்சாமி திங்கட்கிழமை காலையில் திறந்து வைத்தார். மூத்த தலைவர்கள் பெரும்பாலானோர் பங்கேற்ற நிலையில், செங்கோட்டையன் அதிலும் பங்கேற்கவில்லை. கட்சி நிர்வாகிகள் நியமனத்தில் செங்கோட்டையன் பரிந்துரைத்த சிலரை, எடப்பாடி பழனிச்சாமி போடாததும் புதிய நிர்வாகிகள் நியமனத்தில் அவரிடம் கலந்து பேசாததுமே அதிருப்திக்கு காரணமென்று தெரிகிறது.

அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் தொடர் தோல்விகளை சந்தித்துவரும் நிலையில், கட்சியை ஒன்றிணைக்கும் வேலையில் ஆறு தலைவர்கள் ஈடுபட்டதாக செய்தி ஒன்று சமீபத்தில் வெளியானது. அதில் செங்கோட்டையன், நத்தம் விஸ்வநாதன் உள்ளிட்டோர் அடங்குவர். இவர்கள் கடந்த ஜூலை மாதம் எடப்பாடி பழனிச்சாமியை சந்தித்து, கட்சியை ஒன்றுபடுத்தாவிட்டால் வருங்காலத்தில் பெரிய தோல்விகளை சந்திக்க நேரிடும் என்று எச்சரித்தனர். ஆனால், எடப்பாடி பழனிச்சாமி ஏற்கவில்லை.

இப்படி ஒரு விஷயம் நடக்கவே இல்லை என்று ஊடகங்களிடம் தெரிவித்தார். எனவே, இந்த ஆறுபேர் மட்டுமின்றி, கட்சியின் பல்வேறு தலைவர்களும் எடப்பாடி மீது அதிருப்தி அடைந்துள்ளனர். செங்கோட்டையன் தற்போது அளித்துள்ள விளக்கம் என்பது அதிருப்தியின் நீட்சிதான்.

எடப்பாடியின் தலைமையில் 10 தேர்தல்களில் தொடர்ந்து தோல்வியடைந்ததால் அடுத்தகட்டத் தலைவர்கள் நொந்து போயுள்ளனர். செங்கோட்டியன் பூனைக்கு மணி கட்டியுள்ளார்.

### தமிழ் மக்களது...

15ஆம் பக்கத் தொடர்ச்சி...


உண்மையாகவே யாழ்ப்பாணம் எனும் அந்த மண்ணுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு என்பதை அன்றுதொட்டு இன்றுவரையும் காண்கின்றோம். அந்த வகையில், அந்த மண் கல்விமான்கள், புத்திஜீவிகள், சட்ட மேதைகள், சட்டவல்லுனர்கள், பண்டிதர்கள், இலக்கியவாதிகள், வித்துவான்கள், சமயத் தலைவர்கள், நீதிபதிகள், எழுத்தாளர்கள், அரசியல் சாணக்கியர்கள், ஆசிரியர்கள், சமூகத் தொண்டர்கள், சமூகசேவையாளர்கள், ஆன்மீகத் தலைவர்கள் போன்றவர்களைப் பெற்றுத்தந்த பூமியாகக் காணப்படுகின்றது.

அதன் பிரகாரம் 1925க்குப் பின்னர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம், ஜீ.ஜீ.பொன்னம்பலம், அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், மு.திருச்செல்வம், டாக்டர் நாகநாதன், பண்டிதர் கா.பொ.ரட்ணம், மு.சிவசிதம்பரம், ரி.சிவசிதம்பரம், ஆலாலசுந்தரம், நீலன் திருச்செல்வம், குமார் பொன்னம்பலம், வை.யோகேஸ்வரன், எக்ஸ்.எம்.மார்ட்டின் அல்பிரட் துரையப்பா, எக்ஸ்.எம்.செல்லத்தம்பு, ஆனந்தசங்கரி, வீ.என்.நவரட்ணம் போன்றவர்களை அந்த மண் பெற்றுத்தந்ததோடு அவ்வாறானவர்கள் தமிழ், முஸ்லிம் மக்களின் குரலாக ஒலித்ததைக் காண்கின்றோம்.

இவ்வாறான தீர்க்கதரிசிகளைப் பெற்றுத்தந்த பெருமையும் புகழும் யாழ். மண்ணுக்குரியதாகும் என்பதில் நாம் அனைவரும் பெருமையடைய வேண்டும்.

அந்த வகையில், தனது அறிவாலும் ஆற்றலினாலும் பொருளாலும் சைவமும் தமிழும் தழைத்தோங்க இறுதிவரை உழைத்த இப்பெருமகனார் சேர் பொன். இராமநாதன் 1938 பெப்ரவரி 17இல் சிவபதமடைந்தார்.

# பேசவேண்டியவை மூடியே கிடக்கின்றன



– ஷாமிலா ஷெரீப்

நினைவு 31

இன்று பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் அதிபர்களும் அவர்களின் வினைத் திறனற்ற நிர்வாகமும் ஒரு காரணம் என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது.

நான் கடமையாற்றிய பாடசாலையில் 17 வருடங்களில் 11 அதிபர்களின் கீழ் கடமையாற்றியிருக்கிறேன். ஓர் அதிபரையேனும் ஒழுங்குமுறையாக கடமையாற்ற விடாது இடைஞ்சல் கொடுக்கும் ஒரு சூழ்நிலை காணப்பட்டது. போராட வேண்டிய நிலை காணப்படுகிறது.

எனது சிறுபராயக் கல்வி குறித்து பேசுவதெனில் மர்ஹூம் மீராசாஹிப் அவர்களின் கல்விப்பணி மகத்தானது.

இன்று பியகம வர்த்தக வலயம் போன்று மாறியிருக்கும் புலமைப்பரிசில் பரீட்சைக்கான பிரத்தியேக வகுப்பு மாபியா போன்றதல்ல. அப்போது மீராசாஹிப் சேரின் மேலதிக வகுப்பு. அவரின் வீட்டிலேயே நடைபெறும். நாங்கள் செம்மண்ணோடையிலிருந்து கால் நடையில் அவரின் வீட்டுக்குச் செல்வோம். சிலநேரங்களில் வாப்பா ஏற்றிக்கொண்டுபோய் விடுவார். வரும்போது நடந்து வருவோம். பின்னேரம் ஸ்கூல் விட்டுச் சென்றால் அவரது வீட்டில் தங்கி அதிகாலையில் எழும்பி வீடு வந்த நாட்களும் உண்டு.

குருகுலவாசக் கல்வியை நாங்களும் சில மாதங்கள் அனுபவித்திருக்கிறோம் என்றுதான் சொல்ல வேண்டும். எங்களால் மர்ஹூம் மீராசாகிப் அதிபருக்கு சேவகம் செய்ய முடியாவிட்டாலும் அவர் தம் மாணவர்களுக்கு தங்க இடமும் உண்ண உணவும் கொடுத்து அவரும் மகன் ஜிப்ரியும் கற்பித்தனர்.

இன்றும் பல ஆசிரியர்களிடம் இம்மனப்பாங்கு இருக்கத்தான் செய்கிறது. என்றாலும் எல்லோரிடமும் இருக்குமா என்பது கேள்விக்குறியாகும்.

அல்ஹிதாயா மகா வித்தியாலயத்தின் பொற்காலம் மீராசாஹிப் சேர் அதிபராக கடமையாற்றிய காலம் என்பேன். ஒரு பாடசாலை திறம்பட இயங்குவதில் அதிபரின் முகாமைத்துவ வகிபாகம் முக்கியமானதாகும்.

ஓர் அதிபருக்கு இருக்கவேண்டிய அத்தனை பண்புகளையும் உள்ளடக்கியவராக மீராசாஹிப் அதிபரை உணர்கிறேன்.

நம்பகத்தன்மை, உண்மைத்தன்மை, தூரநோக்கான சிந்தனை, ஏனையவர்களுடன் சுமுகமாக உறவாட செல்வாக்குச் செலுத்தும் தன்மை, நெகிழ்வுத் தன்மை, குழுவாகச் சேர்ந்து வேலை செய்யும் பண்பு, பயிற்சியளித்தலும் விருத்தி செய்தலும், தீர்மானிக்கும் ஆற்றல், திட்டமிடல், கலந்துரையாடல் என அனைத்துப் பண்புகளையும் தன்னகத்தே கொண்டிருந்ததே மனிதப்பலம்.

தினமும் பாடசாலை வளாகத்தைச் சுற்றி மேற்பார்வை செய்வார். ஆசிரியர்கள் தங்கள் பணிகளைச் செவ்வனே நிறைவேற்றுவர். மகிழ்ச்சிகரமாக கற்றல் கற்பித்தல் நிகழும். அதிபரைக் கண்டால் ஒருவித மதிப்பும் மரியாதையும் இருந்தது. பயந்து ஓடியொளிவதில்லை. மாணவர்களும் ஆசிரியர்களும் மிகச் சுதந்திரமாகச் செயற்பட்டனர். காலைக்கூட்டம் போதனைகளால் நிரம்பி வழியும். குண்டூசி விழுந்தாலும் சத்தம் கேட்கும் பாடசாலையில் மயான அமைதி நிலவும். அதிபர் பாடசாலைக்கு சமுகமளிக்காவிட்டாலும் இந்நிலை தொடரும்.

வாழ்வில் ஆறாம் மாதம் ஆறாம் திகதி மறக்க முடியாத தினம். பாடசாலைக்காகவே வாழ்ந்து பாடசாலை நினைவுகளுடனே ஒரு நிர்வாகி மரணிக்கும் பாக்கியம் எல்லோருக்கும் அமைந்து விடுவதில்லை. கல்வியியலாளரின் மறைவுகள் எங்கள் மனதில் கலக்கத்தை உண்டுபண்ணும். ஊருக்காக ஆடும் கலைஞன் தன்னை மறப்பான் என்ற பாடல் வரிகள் நினைவுக்கு வருகிறது. கண்கள் குளமாகின்றன. கல்விப்பணி செய்த மகானின் மண்ணறை வாழ்வுக்காக பிரார்த்திக்க ஆயிரம் மாணாக்கர்களை உருவாக்கிவிட்டார். அதில் நானும்....

தொடர்வாள்...

# முதிர்ச்சி

தமிழன் சிறுகதை

வரக்காமுறையூர் ராசிக்



அது மார்கழி மாதத்தின் கடைசி வாரம். கடைத் தெருக்கள்தோறும் சனக்கூட்டம் நிரம்பி வழிந்தது. எதிர்வரும் புத்தாண்டுக் கொண்டாட்டங்களுக்காக பொருட்களைக் கொள்வனவு செய்வதில் சகல இன மக்களும் முண்டியடித்துக்கொண்டிருந்தார்கள். வருடத்தின் கடைசிப் பகுதி என்பதால் மலிவு விற்பனை என்றும் கழிவு விற்பனை என்றும் வியாபாரிகள் பல்வேறு உத்திகளைக் கையாண்டு விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். குறைந்த விலையில் பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியும் என்ற நம்பிக்கையில் மக்கள் கடைக்குக் கடை தாவிக்கொண்டிருந்தனர்.

மக்களோடு மக்களாக மலீக் சேரும் அவருடைய நண்பர் அன்வரும் குறைந்த விலையில் ஒரு மடி கணினியை வாங்கிவிட வேண்டுமென்ற நோக்கில் கடைக்குக் கடை ஏறி இறங்கிக்கொண்டிருந்தனர். மலீக் சேர்தான், அவருக்கான மடி கணினி ஒன்றை வாங்குவதற்காக நண்பர் அன்வரையும் அழைத்து வந்திருந்தார். அந்த நகரத்திலுள்ள பத்துக்கும் மேற்பட்ட கடைகளுக்குச் சென்றாகிவிட்டது. ஆனால், ஒரு மடி கணினியை வாங்குவதாகத் தெரியவில்லை. அன்வருக்கு எரிச்சலாக இருந்தது.

“சேர் நீங்க இன்டக்கி லெப்டொப் வாங்க மாட்டீங்க. சும்மா டைம்ம வேஸ்ட் பண்ணாம வாங்க வீட்ட போவம்” என்று பொறுமையிழந்து கூறிய அன்வரை கொஞ்சம் கோபத்துடன் பார்த்தார் மலீக் சேர். “என்ன அன்வர் இப்படி சொல்றீங்க. நீங்க என் கூடத்தானே இருக்கீங்க. எல்லா இடத்துலயும் ரெண்டு இலட்சத்துக்கு மேல வில சொல்றான்கள். இந்தக் காலத்துல நல்ல டிஸ்கவுண்டுக்கு வாங்க ஏலும்னு பார்த்தா குதிர வில யான விலயெல சொல்றான்கள். நாங்க எங்கடப்பா ரெண்டு இலட்சத்துக்கெல்லாம் லெப்டொப் வாங்குற.” தனது இயலாமையை வெளிப்படையாகவே கூறினார் மலீக் சேர்.

“அது எனக்கும் தெரியும் சேர். இப்ப உங்கட பட்ஜெட்டுக்கெல்லாம் புது லெப் வாங்க ஏலா. யாருக்கிட்டயாச்சும் சொல்லி பழசொன்டதான் வாங்க ஏலும். தெரிஞ்சவங்க யாரக்கிட்டயாவது சொல்லி வச்சா யூஸ் பண்ணின லெப் ஒன்ற உங்க பட்ஜெட்டுக்கு வாங்கலாம்.” தனக்குத் தெரிந்த ஓர் ஆலோசனையை முன்வைத்தார் அன்வர்.

மலீக் சேருக்கும் அது சரியாகவே பட்டது. இருந்தாலும் முயற்சியை கைவிட அவர் மனம் விரும்பவில்லை. “நீங்க சொல்றது சரிதான் அன்வர். ஆனாலும் இன்னம் ஒரு அஞ்சி கடதான் இருக்கு அதுகள்றயும் ஒருக்கா பார்த்துட்டு முடிவெடுப்போம். கஷ்டமா இருந்தா வாங்க ஒரு டீய குடிச்சிட்டு மீதி கடைகள பார்ப்பம்.” மலீக் சேரின் பிடிவாதம் அவருடைய பேச்சில் வெளிப்பட்டது. அவரைப் பார்த்தால் ஒருபுறம் பாவமாகவும் இருந்தது. தனது வருமானத்துக்குள் ஒரு மடி கணினியை வாங்க அவர் படும்பாட்டைப் பார்த்து கவலைப்பட்ட அன்வர், “சரி சேர் வாங்க முதல்ற டீய குடிப்பம்” என்று ஹோட்டலுக்கு அழைத்துச் செல்கிறார்.

இருவரும் தேநீருக்குச் சொல்லிவிட்டு மேசையில் அமர்ந்தபோது மலீக் சேரின் தொலைபேசி அலறுகிறது. அதை கையிலெடுத்து காதில் வைத்தபோது “அஸ்ஸலாமு அலைக்கும் சேர். நான் இபாம் பேசுறன். இப்ப பேச ஏலுமா சேர்?’

“வஅலைக்கும் ஸலாம். சொல்லுங்க இபாம் என்ன விஷயம்?’

“இல்ல சேர் போன மாசம் நீங்க ஒரு லெப்டொப் வேணும்னு கேட்டீங்க. லைட்டா யூஸ் பண்ணின ஒரு லெப் வந்திருக்கு. கன்டிஷன் நல்லாவே இருக்கு. வேணும்னா சொல்லுங்க போட்டோ போட்றன்.”

“ஆ..ஆ.. நான் இப்ப டவுன்லதான் ஈக்கிறன் இபாம். இன்னுமொரு பத்து நிமிஷத்துல நேர்ல வந்து பார்க்குறன்” தொலைபேசி உரையாடல் துண்டிக்கப்படுகிறது. மலீக் சேரின் முகத்தில் ஒருவித மலர்ச்சி தோன்றியது.

‘‘அன்வர் உங்களுக்குத் தெரியுமே. என்கிட்ட படிச்ச ஒரு ஸ்டுடென்ட் ஒரு கம்பியூட்டர் சொப் வச்சிருக்காரு. அவருக்கிட்ட லைட்டா பாவிச்ச ஒரு லெப் இருக்காம். நாங்க டீய குடிச்சிட்டு அங்க போய் பார்ப்போம்.” உற்சாகத்துடன் கூறிய மலீக் சேரை ஒருவகை அனுதாபத்துடன் நோக்கினார் அன்வர்.

“அது நல்லம் சேர் உங்க கிட்ட படிச்ச ஸ்டுடென்ட் என்றா கொறஞ்ச வெலக்கி எடுக்கலாம்.” கருத்துச் சொன்ன அன்வரை ஒருமாதிரியாகப் பார்த்தார் மலீக் சேர்.

“இல்ல அன்வர் யாவாரம் வேற. ஆசிரியர் மாணவர் உறவு வேற. நாங்க அப்படியெல்லாம் எதயும் எதிர்பார்க்கக் கூடாது.”

மலீக் சேரின் இந்த வார்த்தைகளின் யதார்த்தத்தைப் புரிந்துகொண்ட அன்வர் மேற்கொண்டு எதையும் பேசாது அடுத்தகட்ட நகர்வுக்குத் தயாரானார்.

மிகுந்த எதிர்பார்ப்புடன் அவர்களின் பயணம் தொடர்கிறது. அந்தக் கடையை அடைந்ததும் ஒருவருக்கொருவர் ஸலாம் உரைத்துக்கொண்டனர். மலீக் சேரைக் கண்டதும் அந்த மாணவர் மரியாதையாக எழுந்து நின்று வரவேற்றான்.

இந்த காலத்தில் இப்படி ஒரு மாணவனைப் பார்க்க அன்வருக்கு ஆச்சரியமாக இருந்தது. அப்படியே பாடசாலை நாட்களைப் பகிர்ந்துகொண்ட அந்த மாணவர் மடி கணினியை எடுத்து நீட்டுகிறார். அது பார்ப்பதற்குப் புதிதாகவே இருந்தது. முதற் பார்வையிலேயே மலீக் சேருக்கு அது பிடித்துப்போய் விட்டது.

“சரி இபாம் லெப் நல்லாவே இருக்கு. விலைய சொல்லுங்க” என்றார் மலீக் சேர்.

“உங்களுக்கு எப்படி சேர் வில சொல்ற. நான் எடுத்த வில நாற்பத்திரெண்டாயிரம்தான் அத மட்டும் தாங்க சேர்.” ஒருவித தயக்கத்துடன் கூறிய அந்த மாணவனையே கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தார் அன்வர். வியாபாரம் முடிந்து காசும் கணினியும் பரிமாற்றம் செய்யப்படுகிறது.

மலீக் சேரின் முகத்தில் புன்னகையின் ரேகைகள் படர்ந்தன. தனது வருமானத்துக்கேற்ப நல்லதொரு மடி கணனி கிடைத்ததிருப்தியில் அவர் தன்னை மறந்திருந்தார். அப்போது “சேர் இந்த லெப்ப ஒரு பேக்ல போட்டு பாவிச்சாத்தான் நல்லம்” என்று மலீக் சேரின் சிந்தனையைத் திருப்பினான் அந்த மாணவன்.

“ஆமா இபாம். உங்கக்கிட்ட விற்கிறதுக்கு லெப்டொப் பேக் இல்லயா?” “ஒரு பேக் இருக்கு சேர் இந்தாங்க இத பாருங்க”

“இது நல்லா இருக்கே இபாம். இந்த லெப்புக்கு பொருத்தமாவும் இருக்கும்.. இதுக்கு எவ்வளவு இபாம்?”

“இதுக்கு ஒரு ரெண்டாயிரூவா கொஸ்ட்டாவது அதக்கொடுத்தா போதும் சேர்” ரொம்ப அப்பாவியா இருக்கிறானே என நினைத்துக்கொண்டே பணத்தைக்கொடுத்து பேக்கை வாங்கினார் மலீக் சேர்.

எல்லாம் முடிந்து வரும் வழியில் ஒரு சந்தேகத்தை வெளியிட்டார் அன்வர். “சேர் உங்கட ஸ்டுடென்ட்ட ரொம்ப நல்லவர்னு நெனச்சிட்டன். ஆனா அவரு உங்கக்கிட்ட பொய் சொல்றாரு. ஏன்னா அந்த பேக் இந்த லெப்புக்கு உரிய பேக்தான். அத வேறாக்கி வித்து லாபம் உழச்சிருக்காரு. படிச்சு கொடுத்த ஒரு சேருக்கிட்ட இப்படி நடந்துக்குவார்ன்னு நான் எதிர்பார்க்கவே இல்ல சேர்.” அன்வர் சரியாக முடிக்கவும் இல்லை. எந்த சலனமும் இல்லாமல் தொடர்ந்தார் மலீக் சேர்.

“அன்வர் இது எனக்கும் தெரியும். அதனாலதான் அப்பவே நான் சொன்னன் யாவாரம் வேற ஆசிரியர் மாணவர் உறவு வேற. அவருக்கு நான் படிச்சு கொடுத்ததற்கு அரசாங்கம் எனக்கு சம்பளம் தந்துருச்சி. அதனால படிச்ச கடனுக்கு அவர் எதையும் சும்மா தரணும்னு அவசியமில்ல. நான் இத ஒரு யாவார உத்தியாத்தான் பார்த்தன் அன்வர். என்ட படிச்ச மாணவன் எவ்வளவு அழகா பிஸ்னெஸ் பண்றான் பார்த்தீங்களா?.’’

எதையும் எதிர் மறையாகப் பார்க்காமல் நேர்மறையாக நோக்கும் மலீக் சேரின் மனோபாவம் அன்வரின் உள்ளத்தைத் தொட்டது. தொடர்ந்தும் எதையாவது பேசி தனது மனநிலையை காட்டிக் கொடுத்துவிடக் கூடாது என்ற எண்ணம் மனதில் தளிர்விட அன்வர் அமைதியானார்.

மலீக் சேரின் முதிர்ச்சிக்கு முன்னால் அன்வரின் எதிர்மறையான எண்ணங்கள் எல்லாம் எரிந்து சாம்பலாயின.

## மலையகத்தின் சொல்ல மறந்த கதை

### பிரிவுகள்

பார்க்கும் இடமெல்லாம்
பிணங்களாய் மிதந்து வந்து
மக்கள் சனங்கள் கூட
இந்தக் கோப்பி காட்டு
தேசத்திலே அழிஞ்சு
போகும் கோப்பையை போல்
சீரழிஞ்சி நிக்கையிலே.....

அடுத்து வரும் சீரழிவு
தேயிலை தோட்டத்திலே
ஆட்டமாக அரங்கேற
கூட்டம் கூட்டமாக
தென்னகத்து தேசம் இங்கே
வந்து வந்து சேர்கிறது......

பாப்பாத்தி நிலமை கூட
முன்ன போல இப்போ இல்ல
அப்பப்போ எப்படியும்
புரியாத பாஷையிலே
புலம்பி விட்டு திரியும் அவ
முழு பேச்சும் அடங்கிருச்சு....

உயிருள்ள பிணமாக
படங்குச்சாக்கு
படுக்கையிலே
அப்படியே படித்திருக்கா
சிந்தை கலங்கி போயி
நினைப்பெல்லாம் மறந்து
போயி படுத்திருக்கும்
பாப்பாத்தி தன்னையுமே
மறந்து விட்டா......

சாக்கோட மலம் போக
சாப்பிடும் உணவு கூட
கொஞ்சம் நேரமும் கூட
வயிற்றிலே ஒட்டவில்லை
ஒரு நிமிஷம் கூட அவ
ஓரிடத்தில் நின்றதில்லை
கசக்கி பிழியும் அவ
கை மருந்து வைத்தியத்தில்
பிழைச்சவங்க
எத்தனை பேர்....

பிழைக்க வச்ச கைகளிப்போ
பிழைக்க வழி இன்றி
செயலத்து கிடைக்கிறது
விதி என்று சொல்லிவிட்டு
நொந்து தான் போகிறதா
தேடிக்கிட்ட வழியென்று
தன்னையே நோகுவதா.....

முனியாண்டி முடிகள்
இப்போ
கருத்த மயிரை கூட
முற்சாக துறந்து விட்டு
வெள்ளையாய் மாறியது
வருஷ காலமாக
தேடிவந்த சொந்தங்களே...

முழுசாக பார்க்கும் நேரம்
சிந்தைக்கலங்கி விட்டும்
நெனப்பு மாறிவிட்டும்
இப்படி இறுதிகாலத்திலே
இறுதியாக பார்க்கணுமோ....

பாப்பாத்தி படுத்திருக்கும்
தலையணை
படுக்கை விட்டு
முனியாண்டி அணுவலவும்
அகலவில்லை....

பிறந்த அண்ணனாட்டம்
தலையை கோதிவிட்டு
வடித்து வைத்திருந்த
முடக்கத்தான் ரசம் அதனை
மெதுவாக ஊட்டுகிறார்.....

பூமியிலே ஊத்துகிற
செம்பு தண்ணி மீண்டும்
வந்து ஊத்தாக ஊறுவதை
போலே தான் இங்கே
வாயினிலே விட்ட தண்ணீர்
கடைவாயில் வடுகிறது....

எம்ம படைச்சு விட்ட
ஆண்டவனே நாங்க செய்த
பாவம் என்ன பஞ்சம்
பிழைக்கு நாங்க பஞ்ச
பரதேசிகளின் பொய்யான
வார்த்தைகளை நம்பி
வந்ததிதெங்கேபெருங்குற்றம்
ஆயிருச்சோ....

நம்பி வந்த மண்ணில் கூட
ஒரு பொய்யும்
சொன்னதில்லை
உண்மையான உழைப்பை
இங்க வேர்வையாக
சிந்திவிட்டும் எங்க சிந்தை
கலைந்ததென்ன நெஞ்சம்
வெடித்ததென்ன.....

முனியாண்டியின் ஆழ் மனது
ஏதேதோ எண்ணி நிற்க
பழனியாண்டி கிட்ட வந்து
தோல்மாட்டை தடவுகிறான்

இனி என்னாகப்
போகுதுன்னே மூச்சுப் பேச்சு
ஒன்னும் இல்லை அவ
சொல்லிப்போன கை மருந்து
எத்தனையோ செஞ்சுகிட்டு
அவளுக்கு மருத்துவம்
பார்த்தாச்சு....

சிந்தை தெளியவில்லை
தேகம் மசியவில்லை....
நேத்து வேற பேசினவ
இப்ப மூச்சுக்காத்தும் சத்தம்
இல்லை....

முனியாண்டி கை மேல
தன் கைய வைத்து விட்டு
கையிரண்டில் கண்ணை
ஒத்தி கதறுகிறான்
பழனியப்பன்.....

நெஞ்சில் நின்ற காத்து
எல்லாம் ஒன்று சேர
வெளியேற உடம்பெல்லாம்
ஒருவாட்டி மின்னல் போல
துடித்து விட.....
ஒரு மூச்சு வெளி வருது...
சத்தமாக மிக சத்தமாக......
பாப்பாத்தி நிலைமை
என்ன....

(சொல்ல மறந்த கதை
இன்னும் சொல்லப்படும்)

எம்.ராமதாஸ்,
இறம்பொடை.

## புலரும் பொழுது

தமிழன் தொடர்கதை

கலாபூஷணம் சபீனா வைத்துல்லாஹ்

அத்தியாயம் 09



தன் தகப்பனாரின் சொத்தை விற்க அவருக்கு விருப்பமில்லை.

மாலாவின் அந்தக் கேள்வியும் அவரை வேதனைப்படுத்தியது.

“யோசிப்போம் மாலா” என்றார். மாலாவும் அவரின் மனநிலையைப் புரிந்து மௌனமானார்.

பொத்திப் பொத்திப் பத்திரமாய் வளர்த்த புத்திரர்களால் சோகம் ஏற்படுவது சகஜந்தான் என மாலா புரிந்தார். கணவனை ஆசுவாசப்படுத்தி மென்மையாக நடந்தார்.

“இஞ்சப் பாருங்க! நம்மட மனநிறைவும் மகிழ்ச்சியும் நமக்குள்ளேதான் இருக்குது. அதனை வேற எங்கையும் தேட ஏலாது” என்று அடிக்கடி விளங்கப்படுத்தினார்.

“நம்ம தேடின செல்வம் புள்ளையளுக்குத் தானே. ஒன்றை இழந்துதான் இன்னொன்றைப் பெறவேணுமப்பா. அவங்கட சந்தோசந்தான் நம்ம சந்தோசம்” என்றார்.

மாலாவின் வார்த்தைகளில் சிலவற்றை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஒரு நாள் பின்னேரம் கட்டிலில் சாய்ந்திருந்தவர் சாடையான நெஞ்செரிச்சலை உணர்ந்தார்.

‘‘மாலா இஞ்ச வாங்களேன்” என்றார்.

உடனே வந்த மாலா, அவருக்கு வேர்த்துக் கொட்டுவதைக் கண்டார். உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்சென்றார்.

அங்கு நாதன் அட்மிட் பண்ணப்பட்டார். அவருக்கு மைனர் அட்டாக் ஏற்பட்டதாக வைத்தியர்கள் கூறினார்கள்

மருந்துகள் கொடுத்துக் குணமாக்க முயற்சிகள் நடந்துகொண்டிருந்தன. நாதன் ஈன்றெடுத்த முத்துக்கள் மூவரும் செய்தியறிந்து ஓடோடி வந்தனர்.

சொந்தங்களைச் செதுக்கிய கரங்களைப் பற்றியழுதனர்.

மாலாவின் விழிகளும் நனைந்தன.

அப்பாவை நன்கு அவதானித்துவிட்டு,

“பெரிய பிரச்சினை ஒன்னுமில்லப்பா! நல்லா ரெஸ்ட் எடுக்கச் சுகமாகிடும்!”

என்றாள் வருங்கால வைத்தியர் மலர். எல்லோரும் சிறிது ஆறுதலடைந்தனர்.

மூவரும் அப்பாவை அன்பாகக் கவனித்தனர். அவர் ஓரளவு சுகம் கண்டார்.

பரீட்சை நெருங்குவதால் ஆயத்தமாகும்படி புதல்வர்களை அனுப்பி வைத்தார் அப்பா.

நாதனின் வீட்டுப் பிரச்சினைகளை விளங்கிய கவிதாவின் கணவர், தன் மகளுக்கு வேறிடத்தில் வரன் பார்த்துவிட்டார்.

இடர்வந்த வேளையில் உடன்பிறப்பு விலகியமை அவருக்கு இன்னும் வேதனையளித்தது.

“ஒன்னும் யோசிக்காதீங்கப்பா! எல்லாம் நன்மைக்கே. நம்மட கஷ்டங்கள் கொஞ்ச நாள்ல தீர்ந்து போகும்!” என்று மாலா கூறிய ஆறுதல் வார்த்தைகள் கும்மிருட்டில் ஊடுருவும் ஒளிக்கீற்றுக்களாய்த் தெரிந்தது.

மனதுக்கு மிகவும் இதமளித்தது. ஆனால், அது நீடிக்கவில்லை. அப்போது நாதனைச் சுகம் விசாரிக்க கலியாண புரோக்கரும் அங்கு வந்தார்.

அவரைக் கண்டவுடன் நாதனுக்கு மகளின் கல்யாண விடயம் நினைவுக்கு வந்ததும் மனம் கலங்கியது.

“என் வாழ்க்கையிலே நான் எவ்வளவு தியாகங்கள் செஞ்சிருந்தேன். அஞ்சு சகோதரிகள வாழ வெச்சி அழகு பார்த்தேன். இண்டைக்கு என்ர மகள வாழ வைக்க டவுனுக்குள்ள வீடு வேணும்’’ என நினைத்து வேதனைப்பட்டார்.

பின்னர், புரோக்கருடன் பேசிக்கொண்டிருந்தவர் சிறிதுநேரத்தில் மயங்கிவிட்டார். அங்கிருந்தவர்கள் அவரை உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர்.

அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட தந்தை நாதன் சில மணித்தியாலங்களின் பின்னர் கண் திறந்து பார்த்தார். விசேட வைத்திய நிபுணர்களின் கண்காணிப்பிலே வைத்தியர்கள் மருந்து வழங்கிக்கொண்டிருந்தார்கள். அவருக்கு இருதய சத்திர சிகிச்சை செய்யவேண்டியதற்கான நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது. மாலாவின் குடும்பத்தில் நெருக்கடிகளும் சோதனைகளும் தொடர்ந்தன. அதை விளங்கிய மாலா மிகக் கவனமாகவும் பொறுமையாகவும் நடந்து கொண்டாள். மகள் மலரின் திருமணத்துக்காகச் சேர்த்து வைத்திருந்த நகைகள் பணமாக மாறின. நாதனின் வைத்தியச் செலவுக்குத் தாராளமாக உதவின.

அப்பாவுக்குச் சுகமில்லாத செய்தி கேட்டு இரண்டு நாள் விடுமுறையில் மலர் ஓடி வந்தாள். அங்கு நடந்த செய்திகளை அறிந்தாள்.

“ தங்கநகையை விட என்னைப் பெத்தவங்க தான் பெரிசும்மா. காசு பணம் தேடிக் கொள்ளலாமே” என்று மன உறுதியோடு அம்மாவுக்கு ஆறுதல் கூறினாள் மலர்.

“அப்பா சுகமாகிட்டாப் போதுமம்மா மலர்’’ மாலா டீச்சரின் விழிகள் நனைந்தன.

“மூணு பேரைப் பெத்து வளத்து ஆளாக்கி யாச்சு. ஒரு புள்ளயைக் கூடக் கரை சேக்கலையே’’ என்பதை எண்ணிய மாலாவின் நெஞ்சம் வெடித்து விடும் போலிருந்தது. தாயின் அழுத கண்ணீர் மகளையும் கலங்க வைத்தது. அங்கு நிசப்தம் நிலவியது. அழுகையை அடக்கிக் கொண்டாள் மலர்.

“அம்மா! அப்பாவுக்குச் சுகமாகிடும்மா. நீங்க ஒன்னும் பயப்பட வேணாமம்மா’’ என்று கையைப் பிடித்து கண்ணில் ஒற்றிக்கொண்டு சொன்னாள்!

சத்திர சிகிச்சைக்கான திகதியும் குறிக்கப்பட்டது.

ஒரு வாரம் வைத்தியக் கவனிப்பிலிருந்த நாதன் வீடு சென்றார். குறிப்பிட்ட நாள் வரும் வரையில் வீட்டிலிருந்தார்.

“இஞ்சருங்கப்பா! கொஞ்சம் கேளுங்கப்பா. நம்மட புள்ளையள் நல்லாப் படிச்சிட்டாங்கப்பா. இனி அவங்க ஒழச்சிக் கொள்ளுவாங்க. இனி எதற்கும் நம்ம கவலைப்படத் தேவையில்லப்பா. நீங்க ஒன்னும் யோசிக்க வேணாம். எல்லாம் நல்லபடியா நடக்கும். கடவுள் மேல பாரத்தைப் போட்டுட்டு நல்லாத் தூங்குங்க” என்று ஆறுதல் சொன்னார் மாலா.

ஓய்வுடன் ஒழுங்காக மருந்தும் எடுத்துக் கொண்டார் அப்பா நாதன்.

அவருக்கு வாழ்வாதாரம் வழங்கிய வயலையும் மாடு கன்றையும் பார்த்துப் பராமரிக்கச் சுந்தரம் என்பவரைத் தேடிக் கொண்டனர். அவர் நன்றி விசுவாசமுள்ள ஒருவர். நாதனைச் சுகம் விசாரிக்க அடிக்கடி அவரின் உறவுகள் வந்துபோயின. உள்குத்துகளை தாராளமாகப் பொழிந்துவிட்டுத் தான் சென்றன. அவை எதுவுமே மாலாவிடம் செல்லுபடியாகவில்லை. அவர்களை நாதனிடம் அதிகம் நெருங்க விடாமலும் யுக்திகளைக் கையாண்டார் மாலா.

(தொடரும்)

# குளிர்கால ஆசியப் போட்டியில் சீனா முதலிடத்தில்

சீனாவில் நடைபெறும் குளிர்கால ஆசியப்போட்டியில் 32 தங்கம், 26 வெள்ளி, 24 வெண்கலப் பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் சீனா முதலிடத்தைப் பிடித்துள்ளது. தென் கொரியா 15 தங்கங்களுடன் இரண்டாவது இடத்திலும் ஜப்பான் 9 தங்கங்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன. 2011ஆம் ஆண்டு நடைபெற்ற 7ஆவது அஸ்தானா-அல்மாட்டி ஆசிய குளிர்கால விளையாட்டுப் போட்டிகளில் கஜகஸ்தான் படைத்த 32 தங்கங்களின் சாதனையை சீனா சமன் செய்து.

வியாழக்கிழமை நடைபெற்ற பயத்லான் பெண்களுக்கான 4X6 கி.மீ. ரிலேயில் மீண்டும் வெற்றிபெற்றதன் மூலம், ஹார்பின் ஆசிய குளிர்கால விளையாட்டுப் போட்டிகளில் பனிப் போட்டிகளில் சீனா தனது 19ஆவது தங்கப் பதக்கத்தைப் பெற்றது. இது ஒரு குளிர்கால ஆசியப் போட்டியில் சீனக் குழுவுக்கு இதுவரை இல்லாத அதிகபட்ச எண்ணிக்கையாகும்.

பயத்லான் மகளிர் 4X6 கி.மீ. ரிலேயில், சீன

ஆண்களுக்கான 4X7.5 கி.மீ. தொடர் ஓட்டத்தில், ஜப்பான் ஒரு மணி 24 நிமிடங்கள் 20.3 விநாடிகளில் ஓடி தங்கப் பதக்கத்தை வென்றது. கஜகஸ்தான் 58.4 விநாடிகள் பின்தங்கி வெள்ளிப் பதக்கத்தையும் சீனா 1:25:32.7 விநாடிகளில் ஓடி மூன்றாவது இடத்தையும் பிடித்தது.

மேலும் யாபுலியில், வியாழக்கிழமை திட்டமிடப்பட்டிருந்த ஆண்கள் மற்றும் பெண்கள் ஸ்னோபோர்டு அரை-குழாய் இறுதிப் போட்டிகள் பலத்த காற்று காரணமாக இரத்துச்செய்யப்பட்டன. பல மறுசீரமைப்பு முயற்சிகளுக்குப் பிறகு, புதன்கிழமை தகுதிச் சுற்றின் முடிவுகள் இறுதிப் புள்ளிகளாகப் பயன்படுத்தப் பட்டன. ஜப்பானின் சாரா ஷிமிசு மற்றும் தென் கொரியாவின் கிம்



நால்வர் குழுவான டொங் ஜியாலின், வென் யிங், சூ யுவான்மெங் மற்றும் மெங் ஃபன்கி ஆகியோர் ஒரு மணி 29 நிமிடங்கள் 6.3 விநாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்து வெற்றிபெற்றனர். 26 வயதான மெங் அற்புதமான இறுதிப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பிடித்த தென் கொரியாவை வீழ்த்தி வெற்றியை உறுதிசெய்தார், அதேநேரத்தில் கஜகஸ்தான் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றது.

ஜியோன்-ஹுய் ஆகியோர் முறையே பெண்கள் மற்றும் ஆண்கள் பிரிவுகளில் தங்கப் பதக்கங்களைப் பெற்றனர்.



# ரைபகினாவின் முன்னாள் பயிற்சியாளர் வுகோவ் இடைநீக்கம்



எலெனா ரைபாகினாயின் முன்னாள் பயிற்சியாளர் ஸ்டெஃபனோ வுகோவ் நடத்தை விதிகளை மீறியதாக WTA தனது நிர்வாகக் குழுவின் விசாரணையைத் தொடர்ந்து, அவரைத் தடைசெய்ய முடிவு செய்தது.

செவ்வாயன்று, WTA தனது விசாரணையை முடித்துவிட்டதாகக் கூறியது. அவரது இடைநீக்கம் அமுலில் உள்ளது என்றும் கூறியது. அவர் எவ்வளவு காலம் தடையில் இருப்பார் என்பதைக் குறிப்பிடவில்லை. தற்காலிக இடைநீக்கத்தின் கீழ் இருந்த குரோஷிய பயிற்சியாளர் வுகோவ் தான் தவறு செய்யவில்லை என்று மறுத்துள்ளார்.




2022 விம்பிள்டன் சம்பியனான ரைபகினா, கடந்த மாதம் அவுஸ்திரேலிய ஓபனில், வுகோவ் இணைந்து பணியாற்றிய ஆண்டுகளில் "என்னை ஒருபோதும் தவறாக நடத்தவில்லை" என்றும் தற்காலிக இடைநீக்கத்துடன் தான் உடன்படவில்லை என்றும் கூறினார்.

## தாய்லாந்து டென்னிஸ் வீரருக்குத் தண்டனை

தாய்லாந்து டென்னிஸ் வீரர் ஜதுபோர்ன் நா லாம்புன்ஹாஸ் தற்காலிகமாக இடைநீக்கம் செய்யப்பட்டார் என்றும் 2016ஆம் ஆண்டில் சட்டவிரோத பந்தயம் கட்டியதற்காக 18 மாத தடையைப் பெற்ற பின்னர் டென்னிஸ் ஊழல் எதிர்ப்புத் திட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்படுவார் என்றும் உறுதிப்படுத்தியது.

ஜதுபோர்ன் நா லாம்புன்ஹாஸ் 2024ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் திகதி முதல் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். அனுமதியை எதிர்த்து மேன்முறையீடு செய்யப்போவதில்லையென அவர் தெரிவித்துள்ளார்.

2016ஆம் ஆண்டில், 22ஆவது வயதில் அவர் டென்னிஸ் போட்டிகளில் பந்தயம் கட்டியதற்காக 18 மாதங்கள் தடை மற்றும் $5,000 (4,800) அபராதம் விதிக்கப்பட்டது.

டென்னிஸ் போட்டிகளில் பந்தயம் கட்டுவதைக் கண்டிப்பாகத் தடைசெய்யும் ஊழல் எதிர்ப்புத் திட்ட அலுவலகத்தில் ஜதுபோர்ன் நா லாம்பூன் மூன்று குற்றங்களை ஒப்புக்கொண்டார். நிகழ்ச்சியின் தலைவரான இயன் மில், வீரர் மீதான தடையை விதித்தார், மேலும், விசாரணைக்கு ஒத்துழைக்கத் தவறியதற்கான கூடுதல் குற்றச்சாட்டில் அவர் குற்றவாளி எனக் கண்டறியப்பட்டது.



# சாம் கெர் குற்றவாளி அல்ல; நீதிமன்றம் தீர்ப்பு



உலகின் தலைசிறந்த பெண் உதைபந்தாட்ட வீராங்கனைகளில் ஒருவரான சாம் கெர், பொலிஸ் அதிகாரி ஒருவரை இன ரீதியாக மோசமாக துன்புறுத்திய வழக்கில் செவ்வாய்க்கிழமை குற்றமற்றவர் என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அவுஸ்திரேலியா, ஆங்கில கிளப் செல்சியா ஆகிய அணிகளின் வீராங்கனையான கெர், ஜனவரி 2023இல் லண்டனில் பொலிஸ் நிலையத்தில் நடந்த சூடான வாக்குவாதத்தின்போது பொலிஸ் கான்ஸ்டபிள் ஸ்ரீபன் லோவலை திட்டியதை ஏற்றுக்கொண்டார்.ஆனால், அது குற்றச்சாட்டுக்கு உட்பட்டதல்ல என்று மறுத்தார்.

லண்டனிலுள்ள கிங்ஸ்டன் கிரவுன் நீதிமன்றத்தில் 12 பேர் கொண்ட நடுவர் மன்றத்தின் ஏழாவது நாள் நான்கு மணி நேரத்துக்கும் மேலான விவாதங்களுக்குப் பிறகு இந்தத் தீர்ப்பு வந்தது.

கெர்ரின் விசாரணை அவுஸ்திரேலியாவில் தலைப்புச் செய்தியானது. நீதிமன்றத்தில் ஒவ்வொருநாளும் உள்நாட்டு ஊடகங்களால் முழுமையாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

2026 AFC ஆசியக் கிண்ணத்துக்கு முன்னதாக ஏப்ரல் மாதம் தென் கொரியாவுக்கு எதிரான இரண்டு சர்வதேச நட்புப் போட்டிகளில் அவுஸ்திரேலியாவுக்காக கெர் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# குசல் மெண்டிஸ் சதம்; தொடரை வென்றது இலங்கை






அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் 174 ஓட்டங்களால் வெற்றி பெற்ற இலங்கை தொடரை வென்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடி 50 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 281 ஓட்டங்கள் எடுத்தது. 282 வெற்றி இலக்குடன் களம் இறங்கிய அவுஸ்திரேலியா 24.2 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 107 ஓட்டங்கள் எடுத்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான பதும் நிசங்க 6 ஓட்டங்களுடன் வெளியேறினார். இரண்டாவது விக்கெட்டில் இணைந்த நிசான் மதுசங்க, குசல் மென்டிஸ் ஜோடி ஆட்டத்தைக் கையில் எடுத்தது.நிசான் மதுசங்க 51 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.குசல் மெண்டிஸுடன் இணைந்த அசலங்க அதிரடியாக விளையாடினார். குசல் மெண்டிஸ் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் தனது 5ஆவது சதத்தை பெற்றுள்ளார். குசல் மெண்டிஸ் 101 ஓட்டங்கள் எடுத்தார். சரித் அசலங்க ஆட்டமிழக்காமல் 78 ஓட்டங்கள் எடுத்தார்.

அவுஸ்திரேலியா 107 ஓட்டங்கள் எடுத்தது. ஸ்மித் அதிக பட்சமாக 29 ஓட்டங்கள் எடுத்தார்.வெல்லாலகே 4விக்கெட்டுகளும், அசித பெர்னாண்டோ, வன் இந்து ஹசரங்கா ஆகியோர் தலா 3 விக்கெட்டுகலையும் எடுத்தனர். போட்டி நாயகன் விருது குசல் மெண்டிஸுக்கு வழங்கப்பட்டது. தொடர் நாயகனாக சரித் அசலங்கா தெரிவானார்.







Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7